



திரையுலகில்

# விந்தன்



மு.பரமசிவம்

# திரையுலகில் விந்தன்

மு. பரமசிவம்

அருள் பதிப்பகம்
66, பெரியார் தெரு
எம்.ஜி.ஆர். நகர்
சென்னை – 600 078

முதற்பதிப்பு : டிசம்பர், 2001

**விலை : ரூ. 50.**

ஒளியச்சு : குரு கம்ப்யூட்டர்ஸ், சென்னை - 24.
அச்சிட்டோர் : ஸ்கிரிப்ட் பிரிண்டர்ஸ், சென்னை - 24.

## காணிக்கை



திரை உலக ஆய்வாளர்

அருமைத் தோழர்

புகழுடல் பெற்ற

***அறந்தை நாராயணன்***

அவர்களுக்கு

**மு. ப.**

## உள்ளே...


| | | | |
|---|---|---|---|
| முன்னுரை | - | வல்லிக்கண்ணன் | 5 |
| நினைவலைகள் | - | உவமைக்கவிஞர் | 9 |
| என்னுரை | - | ஆசிரியர் | 13 |
| பதிப்புரை | | | 16 |

*விந்தனின் வாழ்க்கைக் குறிப்புகள் 20*

| | |
|---|---|
| திரையுலகில் விந்தன் | 27 |
| வாழப்பிறந்தவள் கதை | 51 |
| அன்பு படத்தின் கதை | 57 |
| கூண்டுக்கிளியின் கதை | 62 |
| மனிதன் – பத்திரிகை | 66 |
| விந்தன் பாட்டு, ராமையதாஸ் பெயரில் | 72 |
| புத்தகப் பூங்கா – பதிப்பகம் | 74 |
| மணமாலை – கதை | 76 |
| பார்த்திபன் கனவு – கதை – வசனம் | 81 |
| குழந்தைகள் கண்ட குடியரசு – கதை | 139 |
| எம்.கே.டி. பாகவதர் திரையும் வாழ்வும் | 156 |
| பாகவதரைப் பற்றி எம். ஜி. ஆர். | 163 |
| பாகவதரைப் பற்றிக் கவிமணி | 165 |
| எம். ஆர். ராதாவைப் பற்றி விந்தன் | 167 |
| விந்தனின் திரைப்பாடல்கள் | 175 |
| பிற்சேர்க்கை | 184 |

# முன்னுரை

*பழம்பெரும் எழுத்தாளர்*

## திரு. வல்லிக்கண்ணன் அவர்கள்

சினிமா சகல தரப்பினரையும் ஈர்க்கும் ஒரு வசிய சக்தியாக விளங்குகிறது.

சினிமாவில் நடிக்கவேண்டும் என்று ஆசைப் பட்டு, அல்லல் உறுகிற ஆண்கள், பெண்கள் எத்தனையோ பேர். அவர்களைப் போலவே, கதை எழுதுகிறவர்களும் கவிதை எழுதுவோரும் சினிமாத் துறையில் புகுந்து முன்னேற வேண்டும் என்று ஆசையோடு அலைவதும் சிரமங்கள் அனுபவிப்பதும் சர்வ சாதாரண நிகழ்வுகளாக இருக்கின்றன.

சினிமாத் துறையில் ஈடுபடுவதன் மூலம் புகழும் பணமும் இதர பல வாழ்க்கை சுகபோகங்களும் எளிதில் கிட்டிவிடும் என்கிற எண்ணமே இதன் அடிப்படைக் காரணமாகும்.

வெற்றி பெற்றுப் பிரகாசிக்கிற ஒருசில நடிகர் நடிகையரைப் பார்த்தும், எப்படியோ அடி எடுத்து வைத்து, சிரமப்பட்டுக் காலூன்றி வளர்ந்து பெயர் பெற்று ஒளிவீசுகிற கதை வசனகர்த்தா, பாடலாசிரியர் களைப் பார்த்தும், நாமும் இவர்களைப்போல் இடம் பெற்று, புகழோடும் பணத்தோடும் ஜாம்ஜாமென்று வாழமுடியும் என்ற ஆசையோடுதான் பலரும் சினிமா உலகில் பிரவேசிக்க முயல்கிறார்கள்.

ஆனால் எல்லோருக்கும் வெற்றி கிட்டிவிடுவ தில்லை. துறையில் புகுந்து, ஓரிரு படங்களில் வாய்ப்பு பெற்றவர்கள்கூட தொடர்ந்து அங்கு நீடித்து நிற்க முடியாது போகிறது. அங்குள்ள சூழ்நிலை அப்படி. உண்மையான திறமையும் நேர்மையான உழைப்பும் உரியமுறையில் மதிக்கப்படுவதுமில்லை; கவுரவிக்கப்படுவதும் இல்லை.

அந்த உலகத்தில் நிலைபெற்று முன்னேறுவதற் கெனத் தனித்திறமைகளும் செயல்பாடுகளும் தேவைப்படுகின்றன. ஒருசிலர் சீக்கிரமே பெரும் கவனிப்புப் பெற்று, வெற்றிகரமாக வளர்ந்து தங்கள் விருப்பப்படி மற்றவர்களை ஆட்டுவிக்கக்கூடிய சக்தி பெற்று மிருக்கிறார்கள் அத்துறையில். அவர்கள் அபூர்வங்கள் – விதி விலக்குகள்.

பொதுவாக, சினிமா உலகிற்குப் போன இலக்கிய் வாதிகள் ஆற்றல் நிறைந்த படைப்பாளிகள் – கசப்பான அனுபவங்களையே பெற நேர்ந்திருக் கிறது. அந்த வகையைச் சேர்ந்தவர்தான் எழுத்தாளர் விந்தன் அவர்களும். இதை அவருடைய திரை உலக அனுபவங்களும் போராட்டங்களும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

விந்தன் சுயசிந்தனையாளர். எழுத்தாற்றல் மிகுந்த படைப்பாளி. சமூகப் பார்வையோடும், மனித நேயத் தோடும், முற்போக்குச் சிந்தனையுடனும், அங்கதச் சுவையோடும், வாழ்க்கை யதார்த்தங்களை விவரிக்கும் சிறுகதைகளையும் நாவல்களையும் படைத்தவர். தேர்ந்த பத்திரிகையாளர். சொந்தமாக 'மனிதன்' என்ற பத்திரிகையை நடத்தியவர். தன்மானம் மிக்கவர்.

அவர் சினிமா உலகில் பிரவேசித்து எய்திய வெற்றிகளையும், அனுபவித்த சிரமங்களையும் நண்பர் மு.பரமசிவம் இந்நூலில் நன்கு பதிவு செய்திருக்கிறார்.

நண்பர் மு.பரமசிவம் எழுத்தாளர் விந்தன் அவர்களிடம் அன்பும் மதிப்பும் கொண்டு பழகியவர். விந்தன் மறைவுக்குப் பிறகு, விந்தனின் சிறப்பு களையும், தனித்தன்மைகளையும், சாதனைகளையும் தமிழ் உலகின் கவனத்துக்குக் கொண்டு வரும் வகையில் தொடர்ந்து பல நூல்கள் எழுதியும், தொகுப்பு நூல்கள் தயாரித்தும் வெளியிட்டிருப்பவர். அவர் இப்போது விந்தனின் சினிமா உலக அனுபவங்களையும் போராட்டங்களையும் தக்க முறையில் பதிவு செய்திருக்கிறார் இந்த நூலில்.

விந்தன் கதை வசனம் எழுதியதோடு திரைப்படப் பாடல்கள் எழுதுவதிலும் வெற்றிபெற்றுத் திகழ்ந்தார். அவரது இத்துறைச் சாதனைகளையும் மு.ப.திறமை யாக வாசகர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்.

விந்தன் வசனம் எழுதிய 'அன்பு','கூண்டுக் கிளி' ஆகிய படங்களில் நடித்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடிப்பைப் பற்றி என்னிடம் வந்து அடிக்கடி சொல்லுவார்.அந்த அளவுக்கு சிவாஜியின் நடிப்பில் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தவர்.இன்றிருந் திருந்தால் நடிகர் திலகத்தின் வாழ்க்கை வரலாற்றையும் சிறப்பாக எழுதி சிவாஜியின் புகழுக்குச் சிறப்பு சேர்த்திருப்பார்.

சினிமாத்துறையில் ஓரளவு வெற்றிபெற முடிந்த விந்தன், தொடர்ந்து அங்குக் காலூன்றிப் பிரகாசிக்க

இயலவில்லை. திரும்பவும் அவர் பத்திரிகை ஆபீசில் உதவியாளராகப் பணிபுரிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அக் கால கட்டத்தில், ஈடு இணையற்ற நட்சத்திர மாக ஒரு காலத்தில் ஜொலித்த எம்.கே.தியாகராஜ பாகவதரின் வாழ்க்கை வரலாற்றையும், தன்னே ரில்லாத் தனிப் பெரும் நடிகரான எம்.ஆர். ராதாவின் வாழ்க்கை அனுபவங்களையும் எழுதி விந்தன் வாசகர்களுக்கு சுவாரசியமான விருந்து அளித்தார்.

அவற்றின் சிறப்பைப் புலப்படுத்தும் விதத்தில் அவை பற்றியும் உரிய முறையில் மு.பரமசிவம் இந் நூலில் நினைவு கூர்ந்திருக்கிறார்.

இவ்விதம் பல தன்மைகளிலும் வரவேற்புக்கும் பாராட்டுதலுக்கும் உரிய ஒரு வரலாற்று நூலாக அமைந்திருக்கிறது இது.

இது வாசகர்களுக்கு மகிழ்ச்சியையும் மன நிறைவையும் தரும் என்பதில் சந்தேகமில்லை.

*10, வள்ளலார் குடியிருப்பு*
*புதுத்தெரு, லாயிட்ஸ் சாலை*
*சென்னை – 600 005*

***வல்லிக்கண்ணன்***

# நினைவலைகள்

## உவமைக்கவிஞர் சுரதா அவர்கள்

பேராசிரியர் 'கல்கி' அவர்களால் விந்தன் என்று பெயர் மாற்றப்பட்டு, 'கல்கி' இதழில் புரட்சிகரமான கதைகள் எழுதிய புரட்சி எழுத்தாளர் விந்தன் எனது இளமைக்கால நண்பர்.

விந்தன் வாழ்ந்த காலத்தில் எங்களுக்குள் இருந்த நட்பை, நினைவுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1949இல் சுயமரியாதை மிக்க திரைப்பட நட்சத்திரம் திரு பி.யு.சின்னப்பா அவர்கள் நடித்த 'மங்கையர்க்கரசி' என்ற படத்துக்கு வசனம் எழுதிக் கொண்டிருந்த என்னிடம், பதினான்கு வயதுடைய சிறுமி ஒருத்தி, "அய்யா! இந்தப் பத்திரிகையில் சிறுகதை ஒன்று வந்திருக்கிறது. அதைப்படித்த நான் மிகவும் மனம் அதிர்ந்து போனேன்" என்றார்.

"மாட்டுத் தொழுவம்" என்ற அக் கதையை எழுதியவர் விந்தன் என்பவர். வெளியிட்ட பத்திரிகை, கல்கி. என்னிடம் மேற்கண்ட தகவலைச் சொன்னவர் இன்றையத் தினம் இசை உலகில் பிரபலமாக இருக்கின்ற சூலமங்கலம் ராஜலட்சுமி சகோதரிகளில் ஒருவர்.

இவ்வாறு அக்காலத்தில் திரு.விந்தன் கதைகள் பல தரப்பட்ட மக்களால் பாராட்டப்பெற்றன. நாவல்கள் எழுதிப் புகழ்பெற்ற 'கல்கி'க்கு இணையாக விந்தனும் புகழப்பெற்றவர்.

விந்தன் கதைகள் எழுதுவதற்கு 'மூடை' எதிர் பார்த்து வீட்டின் கூரையை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருப்பதில்லை. அவர் சொல்லுவார் : *''வீதியில் கொஞ்ச தூரம் நடந்து போனால் பல தரப் பட்ட மனிதர்களைச் சந்திக்க நேரும்; அப்போதே என்னுள் ஒரு கதை உருவாகிவிடும்!''*

நணபர்களுக்கு விருந்து வைப்பதில் மிகவும் விருப்பமுடையவர் விந்தன். புரசைவாக்கத்தில் குடியிருந்த நான், விந்தன் குடியிருந்த சேத்துப் பட்டுக்கு வாரந்தோறும் தவறாமல் வந்துவிடுவேன், விந்தன் வீட்டில் விருந்து சாப்பிட. பெரும்பாலும் அசைவ உணவுகள்தான் பரிமாறப்படும். விந்தனுக்கு அசைவ உணவு உண்பதில் விருப்பம் அதிகம்.

1952இல் அமரர் சிவாஜி கணேசன் நடித்த 'பராசக்தி' படம் வெளியானது. அந்தப் படத்தில் சிவாஜி கணேசன் உணர்ச்சித் துடிப்புடன் பேசும் ''ஓடினாள்... ஓடினாள்... வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள்'' என்னும் கவிதை வரிகளின் சொந்தக்காரர் விந்தன் அவர்களேயாவார்.

1950இல் 'கல்கி' பத்திரிகையில் விந்தன் எழுதிய 'பாலும் பாவையும்' என்ற நாவலில் வரும் வசனத்தைக் கலைஞர் பயன்படுத்திக் கொண்டார். பாலும்

பாவையும் நாவலைப் பல எழுத்தாளர்கள் படித்துப் பாராட்டியுள்ளனர். குறிப்பிடத்தக்க எழுத்தாளர் கலைஞர் கருணாநிதி அவர்கள்.

1936இல் டாக்டர் மாசிலாமணி முதலியார் நடத்திய 'தமிழரசு' அச்சகத்தில் அச்சுக்கோக்கும் தொழிலாளி யாகச் சேர்ந்தார் விந்தன். அப் பத்திரிகையின் ஆஸ்தான கவிஞர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

அக்காலத்தில் 'தமிழரசு' இதழில் பாரதிதாசன் எழுதிய தமிழுக்கு அமுதென்று பேர் என்னும் புகழ் பெற்ற கவிதையை முதன்முதலில் அச்சுக்கோத்தவர் பிற்காலத்தில் எழுத்தாளராக, கவிஞராகப் புகழ்பெற்ற விந்தன் அவர்களே!

1954இல் 'மனிதன்' என்னும் மாத ஏட்டை வெளி யிட்டார். புரட்சிகரமான அந்த ஏட்டை அனைவரும் படித்துப் பாராட்டினார்கள். அதிலும் அந்த ஏட்டில் வெளிவந்த தெருவிளக்கு என்னும் தொடரைத் திரையுலகினர் படித்து எரிச்சல் அடைந்தனர். அந்தத் தொடர், விந்தனின் திரை உலக அனுபவங்களைப் படம் பிடித்துக் காட்டியது.

'தினமணி கதிர்' பத்திரிகையில் பணியாற்றிய காலத்தில் ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராச பாகவதரின் வாழ்க்கை வரலாற்றை முதன்முதலில் எழுதியவர் விந்தன் அவர்களே. அதே போல நடிகவேள் எம்.ஆர்.ராதாவின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவரும் விந்தன் அவர்களே.

ஏழு திரைப்படங்களுக்கு வசனம் எழுதியுள்ள விந்தன் சில படங்களுக்குப் பாடல்களையும் எழுதியுள்ளார். அவற்றில் குறிப்பிடத்தக்கவை:

'அன்பு' படத்தில்.

*ஒண்ணும் புரியவில்லை தம்பி,*

'கூண்டுக் கிளி'யில்,

*கொஞ்சுங்கிளியான பெண்ணைக்*
*கூண்டுக்கிளி யாக்கி விட்டுக்*
*கெட்டி மேளம் கொட்டுவது,*
*சரியா, தப்பா!*

'குலேபகாவலி'யில்

*மயக்கும் மாலை பொழுதே நீ போ, போ!*
*இனிக்கும் இன்ப இரவே நீ வா, வா!*

இன்றும் சினிமா ரசிகர்கள் பாடிக்கொண்டிருக்கும் புகழ் பெற்ற பாடல்கள் இவை.

கலை இலக்கியத் துறையில் விந்தன் புரிந்த சாதனைகளை, விந்தனின் திரை உலக அனுபவங்களை, விந்தன் புகழைப் பரப்பி வருபவர் மு.பரமசிவம். சுவையான முறையில் தொகுத்துத் தந்துள்ளார். அவருக்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள்.

வாழ்க விந்தன் புகழ்! வளர்க அவரின் இலக்கியத் தொண்டு!

★ ★ ★

# என்னுரை

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் அதாவது 1951ஆம் ஆண்டு சினிமாத் துறைக்கு அழைத்துச் செல்லப்பட்ட எழுத்தாளர் விந்தன்,1960ஆம் ஆண்டு வரையில் ஏழு திரைப்படங்களுக்குக் கதைவசனம் எழுதியதோடு ஆறு பாடல்களையும் எழுதியுள்ளார்.

பத்தாண்டுகள் சினிமாவில் ஆர்ப்பாட்டமின்றி அமைதியாகப் பணியாற்றியுள்ள விந்தனைப்பற்றி சினிமாவில், சினிமாப் பத்திரிகைகளில் செய்திகள் இல்லை, பரபரப்பாக.

சினிமாவில் எழுத்தாளர் விந்தனுக்குக் கிடைத்த அவமானங்கள், சுயமரியாதை இழப்புகள், மனித நேயமற்ற பண்புகள் அனைத்தையும் பொறுத்துக் கொண்டார்; மௌனப்புரட்சி மூலம்.

விந்தன் வசனம் எழுதிய *வாழப்பிறந்தவள், அன்பு, கூண்டுக்கிளி* ஆகிய படங்கள் வெற்றி படங்களாக அமைந்த போதிலும் நடிகர்களின் ஆதிக்கத்தால் விநதன் பெயர் மறைந்துவிட்டது.

சினிமாவில் எடுபிடிகள் எழுத்தாளர்களாக அவதாரம் எடுத்ததால் உண்மையான இலக்கிய வாதிகளுக்கு இடம் இல்லாமல் போய்விட்டது!

இத்தகைய சூழலில் புகழ்பெற்ற சினிமா நடிகை–நடிகர்கள் பற்றி, அவர்களின் முதுகுகள் இதமாகச் சொறியும் வகையில் அவர்கள் இந்திரன் சந்திரன்

என்று போற்றிப் புகழ்ந்த ஏராளமான புத்தகங்கள் வெளிவந்தன.

இக்கால கட்டத்தில் நிமிர்ந்த நடை, நேரான பார்வை, எவருக்கும் வளையாத பேனா இவற்றுடன் சினிமாவின் மேன்மைக்கு, வளர்ச்சிக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துகொண்ட 'ஜனசக்தி' பத்திரிகையின் துணையாசிரியரும், பொதுவுடைமைக் கட்சியின் உறுப்பினருமான தோழர் அறந்தை மு.நாராயணன் பல நூல்களை எழுதினார். அந்நூல்கள் மக்களால் பெரிதும் பாராட்டப்பெற்றன.

முற்போக்கு எழுத்தாளர் அறந்தை நாராயணனின், சினிமாவைப்பற்றிய அவருடைய பார்வை, தகவல்களைத் தொகுத்த நேர்த்தி, இடைஇடையே இடதுசாரிக் கண்ணோட்டத்துடன் இணைத்த விமர்சனங்கள் அனைத்தும் என்னைக் கவர்ந்த அம்சங்கள்.

தமிழ் சினிமாவின் வரலாற்றில் ஆதார பூர்வமான தகவல்களுடன் நூல்களை எழுதிப் புகழ் பெற்றவர் அமரர் அறந்தை நாராயணன் அவர்களேயாவார்.

எனக்கு இந்நூல் எழுதத் தூண்டுதலாக இருந்தது அறந்தையின் எழுத்துக்களேயாகும். அதனால் இந்நூலை அமரர் அறந்தை நாராயணன் அவர்களுக்கு காணிக்கையாக்குகிறேன்.

விந்தன் சினிமாவில் இருந்து விலகி நாற்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. ரொம்பவும் காலங்கடந்து இந்தப் புத்தகத்தை எழுதநேர்ந்த எனக்குச் சரியான தகவல்கள் கிடைக்க வழியும் வாய்ப்பும் இல்லாமல்

போய்விட்டது. எனினும் கிடைத்ததைக் கொண்டு விந்தனின் சினிமா வாழ்க்கை வரலாற்றைச் சிறப்பாக எழுதியிருப்பதாக நம்புகிறேன்; படித்துப் பாருங்கள்!

இந்நூலின் கையெழுத்துப் பிரதியைப் படித்து பார்த்து முன்னுரை வழங்கிய எழுத்துச் செல்வர் வல்லிக்கண்ணன் அவர்கட்கும் தம் நினை வலைகளை எழுதிக் கொடுத்த உவமைக்கவிஞர் சுரதா அவர்கட்கும், விந்தன் வசனம் எழுதிய படங்களின் கதைச் சுருக்கத்தை வழங்கிய திரு. பிலிம் நியூஸ் ஆனந்தன் (இவர் தமிழ் சினிமாவில் அரை நூற்றாண்டு அனுபவம் மிக்கவர். தகவல் களஞ்சியம்) அவர்கட்கும் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் என்நூலை வெளியிடும் இனிய நண்பர் வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்கட்கும் மற்றும் இந்நூலாக்கத்தில் அக்கறையும் ஆர்வமும் காட்டிய தோழர்கள் அனைவருக்கும் பாராட்டும் நன்றியும்.

A.P.302, எட்டாவது பிரிவு
40ஆவது தெரு
கலைஞர் நகர்
சென்னை 78.

தோழமையுள்ள

*மு. பரமசிவம்*

பதிப்புரை

# வாழ்கின்றார் விந்தன்!

விந்தைகள் நிறைந்ததே உலகம்.

மனிதர்களிலும் விந்தையானவர்கள் உண்டு.

கோவிந்தன் விந்தன் ஆனதும் ஒரு விந்தை!

அச்சுக் கோப்புத் தொழிலாளியான ஒருவர்
சிலம்புச் செல்வரானார்! ம.பொ.சி!

மற்றொருவர் சிறுதைச் செல்வரானார்!
சிறந்த எழுத்தாளரானார்!
சிந்தனைச் சிற்றுளியானார்!
அவரே (கோ)விந்தன்!

மனித மந்தையில் மாறிய மனிதன்!
மாறுதலான மனிதன்!

மனிதச் சந்தையில் மாறாத அவலங்களை
மனத்தில் குத்தும் முட்களாய் எழுதி எறிந்தவர்!

தடித்த தோலினரையும் தைத்துத் துளைக்கும்
அம்புகளை எழுத்து அரும்புக ளாக்கியவர்.

துன்ப துயரங்களைத் துளித்துளிச் சொற்களில்
தொடுத்தவர்; தொகுத்தவர்.

**க**ண்ணில் பட்ட காட்சிகளை, மண்ணில் நடக்கும் சூழ்ச்சிகளை, மனப்புண்ணில் எழுந்த எரிச்சல்களை

எழுத்தில் கொப்பளித்துத் துப்பிய எரிமலை எழுத்தாளர் இருவரை இந்தத் தமிழகம் கண்டது.

ஒருவர் புதுமைப்பித்தன்! மற்றொருவர் விந்தன்!

இருவரது எழுத்திலும் எரிச்சலும் எள்ளலும்
இருந்தது ஒற்றுமை!

வெளிப்படுத்திய விதத்தில் மட்டுமே
கொஞ்சம் வேற்றுமை!

கால் நூற்றாண்டு கரைந்து போன பின்னும்
கருத்தில் முளைப்பதே அவர்களது வெற்றி!

வளையாத பேனா, வற்றாத பேனா!
மனமும் அப்படி, மனிதரும் அப்படி!

வளைந்து கொடுத்துப் பழகியிருந்தால் வாழ்ந் திருக்கலாம். நெளிந்து கனிந்து நேசம் காட்டி யிருந்தால் விளம்பரத்தில், செல்வத்தில் நிலைத் திருக்கலாம்.

பொய்ச்சிரிப்பும் பொய்ப் பசப்பும் கொஞ்சம் கைக் கொண்டிருந்தால் மத்தாப்பு வாணம்போல் சிறிது காலம் மாளிகை வாழ்வு கிடைத்திருக்கும்.

மாறாத மனிதர்; மருட்சிக்குரியவர். அதனாலேயே துயரங்களில் துவண்டார்; துன்பங்களில் வீழ்ந்தார்; வறுமையில் தொலைந்தார்.

மனிதர் மறைந்தார்; அம்மனிதரின் சிந்தனைகள் மறையவில்லை!

எழுத்தின் ஆற்றல் இன்றும் நீள்கிறது; இனியும் நீளும்.

இல்லத்தில் இல்லாமல் மறைந்தவர் படிப்போர் உள்ளத்தில் பசையாய் ஒட்டி நிறைந்திருக்கிறார். நிலைத்திருக்கிறார்!

மனிதருக்கு மறுபிறவி உண்டா? தெரியாத நிலை! எழுத்துக்கு மட்டும் மறுபிறவிகள்! மறு பதிப்புகள்!

வென்றவர்போல் மினுக்கியவர்களைக் காலம் மறைத்து மூடிவிட்டது.

தோற்றவர்போல் துவண்டவர்களை எழுத்தும் கருத்தும் தூக்கி நிறுத்துகின்றன!

தலை எழுத்து என்பது என்ன? தெரியாதது அது! எழுத்தாளனின் இதய எழுத்துக்கள் மட்டும் இறவாமல், துளிர் விடுகின்றன. தலைநிமிர்ந்து வீறு நடை போடுகின்றன.

சரியாத எழுத்துக்கும் சரியான சிந்தனைக்கும் இறவாத புகழுண்டு. இதை விந்தன் அவர்களின் விந்தை எழுத்துக்கள் விளக்கிக் காட்டுகின்றன.

அவர் அள்ளித் தெளித்த அனல் கருத்துகள் அணையாமல் கனன்றபடி சூடேற்றிச் சுறுசுறுப்பைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கின்றன. இதுவும் ஒரு விந்தை!

சிறுதைகள், கட்டுரைகள், திரைக்கதை உரை யாடல்கள், திரைப்படப் பாடல்கள், வரலாற்று வண்ணத் தொடர்கள் எனப் பல துறைகளில் விந்தனின் சிந்தனைச் சிதறல்கள் வெளிப்பட்டன.

அவரது கைவண்ணமும் கலைவண்ணமும் கருத்துக் காட்சிகளாய் தமிழில் மலர்ந்து, படிப்போர் மனத்தில் புரட்சியைப் பொங்கச் செய்தன.

வார இதழ்களில் வைரக் கதைகளை வார்த் தளித்தார் விந்தன். வெள்ளித்திரையும் அவரை அள்ளி அணைத்துக் கொண்டது. கள்ளச்சிரிப்பும் கொள்ளைக் குணமும் உள்ளவர்கள் அங்கே காலந் தள்ளலாம் நயந்தும் நெளிந்தும் நல்லவராகலாம். உள்ளதை உள்ளபடி உரைப்போர் உதவாக்கரை என ஒதுக்கப் படுவார். ஒட்டி உறவாடாமலும், கட்டித் தழுவாமலும் தான் தானாகவே, நிறம் மாறாத நெஞ்சினராய் அங்கே செயல்பட்டவர் விந்தன்.

உருமாற்றம் பெறாத உண்மை, ஊருக்குப் பிடிக்குமா? உறவுக்கு அடுக்குமா? உதறிவிட்டு ஓடி வந்தார் பிழைக்கத் தெரியாத அப்பாவி! சூடுபட்ட பூனை! சூளைச் செங்கல்லானது. குளத்தங்கரைப் பூவுக்குக் கொலுவேறிய செங்கல்சாமி!

விந்தைச் சாமியின் விளைச்சலில் ஒரு பகுதியைத் திரட்டிச் சுருட்டிப் புத்தகச் சுருக்கமாய்ப் பொதிந்து கொடுத்திருப்பவர் பழைய பக்தர் பரமசிவம். படிக்கலாம், நினைவில் பதிக்கலாம்.

பழைய பரமசிவம் பழையதைப் படைத் திருக்கிறார். படிப்போம். சுவைப்போம்! பழமை புதுமைக்கு வித்தாகும். சிந்தனைக்குச் சொத்தாகும்.

பரமசிவம் விந்தனிடம் பாசமுள்ள பழையசிவம். அவருக்குப் பாராட்டு! விந்தனைப் போற்றுவோம்! சிந்தனைச் சுடர் ஏற்றுவோம்! எழுத்தின் வெற்றி என்றும் நிலைக்கும்.

அன்பன்

*வெள்ளையாம்பட்டு சுந்தரம்*

# விந்தன் வாழ்க்கைக் குறிப்புகள்

**1916**-செப்டம்பர்த் திங்கள் 22ஆம் நாள் செங்கற்பட்டு மாவட்டம் நாவலூர் என்னும் சிற்றூரில் வேதாசலம் – ஜானகியம்மாள் தம்பதிகளின் தலை மகனாகப் பிறந்தார். இயற்பெயர் கோவிந்தன். உடன் பிறந்தவர் சாமிநாதன் என்கிற இளவல் ஒருவர் மட்டுமே.

1921ஆம் ஆண்டு சென்னை – சூளை பட்டாளம் பகுதியில் உள்ள பி. அண்ட். சி. பஞ்சாலையின் புகழ் எவ்வளவு பெரியதோ அதைவிடப் பெரியது. பன் மடங்குப் பெரியது அந்தப் பகுதியில் வாழும் தொழிலாளர்களின் போராட்ட உணர்வுகள். வர்க்கப் போராட்டங்கள் நிகழ்வதற்குக் களமாக அமைந்த அம்மண்ணையே தம் வாழும் இடமாகக் கொண்டு இளமைக் கல்வியைத் தொடங்கினார் கோவிந்தன்.

1931இல் வசதியும் வருவாயும் ஓரளவுக்கு இருந்த போதிலும் கல்வி இல்லாமையும் மூடப் பழக்க வழக்கங்களும் கொண்ட பெற்றோர்கள் அவரது படிப்பில் கவனம் செலுத்தத் தவறினார்கள். எனினும் விழிப்பும் வெளிச்சமும் எதிர்கால வாழ்க்கைக்குத் தேவை என்பதை உணர்ந்த கோவிந்தன் இரவுப் பள்ளிகளில் படித்துத் தம் கல்வி அறிவை வளர்த்துக் கொண்டார். அதனூடே ஓவியம் கற்க விரும்பி ஓவியப்பள்ளியில் சேர்ந்தார்.

1936இல் கருவிலே திருவுடைய கோவிந்தன் ஜெமினி ஸ்டுடியோ விளம்பரப் பிரிவில் சேர்ந்து பணியாற்றியபோது அவர் பாட்டனார் 'படைக்கும் தொழில் தரித்திரத்தின் ஊற்று' என்று கோவிந்தனின் படைக்கும் ஆற்றலை முடக்கினார். அதன் பின்னரே நண்பர் இராஜாபாதர் உதவியால் டாக்டர் மாசிலாமணி முதலியார் நடத்தி வந்த 'தமிழரசு' என்னும் திங்கள் இதழில் அச்சுக்கோக்கும் பணியில் சேர்ந்தார்.

1939ல் 'தமிழரசு' இதழில் பாவேந்தர் பாரதிதாசன் போன்ற புலவர்களும், அறிஞர்களும் தொடர்பு கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் தமிழ் மேல் பற்றும் எழுத்தார்வமும் கொண்டிருந்த கோவிந்தன், அவர்களோடு பழகும் வாய்ப்பைப் பெறாத போதிலும் அவர்கள் எழுத்தை அச்சுக்கோக்கும் வாய்ப்பைப் பெற்றார். சான்றாகப் பாவேந்தர் பாரதிதாசன் எழுதியுள்ள ''தமிழுக்கு அமுதென்று பேர்' என்னும் கவிதை வரியை முதன் முதலில் அச்சுக்கோத்த பெருமை கோவிந்தனுக்கே உரியது.

1939 ஏப்ரல் மாதம் 30ஆம் நாள் லீலாவதி என்னும் பெண்மணியைக் கோவிந்தன் மணந்தார்.

1940இல் தலைமகன் பிறந்தான். பெயர் வரதராசன்.

1941இல் புளியந்தோப்புப் பகுதியில் கோவிந்தன் 'ராயல் ஓட்டல்' என்ற பெயரில் மிலிட்டரி ஓட்டல் ஒன்றை நடத்தினார்.

1942இல் நண்பர் ராஜாபாதர் உதவியால் 'கல்கி' அச்சகத்தில் அச்சுக்கோக்கும் பணியில் சேர்ந்தார். ஏற்கனவே சுதேசமித்திரன், ஆனந்தவிகடன் போன்ற

இதழ்களில் விஷயதானம் செய்தவரான கோவிந்தன் வி.ஜி. என்னும் பெயரில் கல்கி இதழில் 'பாப்பாமலர்' பகுதிக்குக் கதைகள் எழுதினார்.

1943இல் பேராசிரியர் 'கல்கி' அவர்களால் 'விந்தன்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, கல்கி ஆசிரியர் குழுவில் துணையாசிரியராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

## முதல் தாரம்? முதல் திருமணம்?

1944இல் பாட்டனாரைப் போல, தந்தையைப் போல, சரஸ்வதி என்னும் பெண்மணியை 13.7.1944 அன்று, இரண்டாம் தாரமாக மணந்தார்.

1946இல் விந்தன் எழுதிய முல்லைக்கொடியாள் என்னும் சிறுகதைத் தொகுப்புக்கு முதல் பரிசு வழங்கிப் பாராட்டியது தமிழ் வளர்ச்சிக் கழகம்.

1948இல் முருகு சுப்பிரமணியம் நடத்திய 'பொன்னி' இதழில் **நக்கீரன்** என்ற பெயரில் 'கண் திறக்குமா?'' என்ற நாவலை எழுதினார்.

1950இல் 'கண் திறக்குமா?' என்ற நாவலை அளித்து மக்களின் பாராட்டைப்பெற்ற விந்தன் 'கல்கி' கேட்டுக் கொண்டதற்கு ஏற்ப, 'கல்கி'யில் '**பாலும் பாவையும்**' கதைத் தொடரை எழுதினார்.

1951இல் 'கல்கி' பத்திரிகையிலிருந்து விலகி ஏவி.எம்.மின் கதைக் குழுவில் சேர்ந்தார். டாக்டர் மு. வரதராசனார் முன்னுரையுடன் 'ஒரே உரிமை' என்ற இவரது சிறுகதைத் தொகுப்பு வெளிவந்தது.

1953இல் 'சமுதாய விரோதி' என்னும் சிறுகதைத் தொகுப்பு வெளிவந்தது. முன்னுரை கி. சந்திரசேகரன். அதே ஆண்டில் விந்தன் வசனம் எழுதிய 'வாழப்பிறந்தவள்' என்ற திரைப்படம் வெளிவந்தது.

1954இல் ஆகஸ்ட் மாதம் 'மனிதன்' இதழ் வெளி வந்தது. அதே ஆண்டில் 'அன்பு', 'கூண்டுக்கிளி' என்னும் இரண்டு படங்கள் வெளிவந்தன. இரண்டு படங்களுக்கும் விந்தன் வசனம் எழுதியதோடு சில பாடல்களும் எழுதியுள்ளார். இரண்டு படங்களிலும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்துள்ளார்.

1957இல் 'அமுதசுரபி' இதழில் **அன்பு அலறுகிறது** என்ற பெயரில் தொடர்கதை எழுதினார். அந்தத் தொடர் தன் ''சிநேகிதி' நாவலைத் தழுவியிருப் பதாகவும் விமர்சனம் செய்வதாகவும் அகிலன், விந்தன் மேல் வழக்குத் தொடர்ந்தார்.

1959இல் **புத்தகப்பூங்கா** என்ற பெயரில் பதிப்பகம் ஒன்றை ஆரம்பித்தார். ஜெயகாந்தன் சிறுகதைகளைத் தொகுத்து 'ஒரு பிடி சோறு' என்ற புத்தகத்தை வெளியிட்டார். அந்தச் சிறுகதைத் தொகுப்புதான் ஜெயகாந்தனை ஆனந்தவிகடனுக்கு அடையாளம் காட்டியது.

1960இல் 'அமுதசுரபி' இதழில், '**மனிதன் மாற வில்லை**' என்ற தொடர்கதையை எழுதினார். அதே காலத்தில் சொந்தமாகச் சினிமா கம்பெனியை ஆரம்பித்தார், மல்லிகா புரொடக்ஷன் என்ற பெயரில்.

1961இல் '**கனவிலே வந்த கன்னி**' என்ற பெயரில் ராணி இதழில் தொடர்கதை எழுதினார்.

பின்னர் அந்தக் கதை '**காதலும் கல்யாணமும்**' என்ற பெயருடன் க.நா.சுப்பிரமணியம் முன்னுரையுடன் வெளிவந்தது.

1963இல் 'முன்னணி' இதழில் '**ஏமாந்துதான் கொடுப்பீர்களா?**' என்ற பெயரில் சிறுகதை எழுதினார். அந்தக் கதையைக் கவிஞர் கண்ணதாசன் நாடகமாக்க முயன்றார். பின்னர் அந்தக் கதை இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டது.

1964இல் ஜூலை 15ஆம் நாள் மு.பரமசிவம் அவர்களால் 'பாலும் பாவையும்' நாடகமாக்கப்பட்டு ராஜா அண்ணாமலை மன்றத்தில் அரங்கேறியது.

1967இல் டிசம்பர் 17ஆம் நாள் அகில இந்திய வானொலியில் 'பாலும் பாவையும்' நாடகமாக ஒலி பரப்பப்பட்டது. அதே ஆண்டில் விந்தன் **தினமணி கதிர்** ஆசிரியர் குழுவில் சேர்ந்தார்.

**கதிர்** பத்திரிகையில் பலசோதனைகளுக்கிடையே பணியாற்றிய விந்தன் 1974ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

'வாழ்ந்தாலும் 'லோ சர்க்கிளோடு வாழ்வேன்', 'செத்தாலும் லோ சர்க்கிளோடு சாவேன்!' என்று சொல்லிக்கொண்டிருந்தவர் 1975 ஜூன் 30இல் மாரடைப்பால் மரணமடைந்தார்.

விந்தன் வாழ்ந்த ஆண்டுகள் ஐம்பத்தொன்பது ஆண்டுகளுக்குக் குறைவுதான்.

★

## விந்தன் படைப்புகள்

### சிறுகதைகள்

*முல்லைக் கொடியாள்*
*ஒரே உரிமை*
*சமுதாய விரோதி*
*விந்தன் கதைகள்*
*ஏமாந்துதான் கொடுப்பீர்களா?*
*இரண்டு ரூபாய்*
*நாளை நம்முடையது*

2000 ஆண்டில் விந்தன் கதைகள் அனைத்தும் இரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

### நாவல்கள் :

*கண் திறக்குமா?*
*பாலும் பாவையும்*
*அன்பு அலறுகிறது*
*மனிதன் மாறவில்லை*
*சுயம்வரம்*
*காதலும் கல்யாணமும்*

### வரலாறுகள்

*எம்.கே.டி. பாகவதர் கதை*
*சிறைச்சாலைச் சிந்தனைகள்*
*எம்.ஆர்.ராதா வரலாறு*

## விந்தன் கட்டுரைகள் :

*வேலை நிறுத்தம் ஏன்?*
*விந்தன் கட்டுரைகள்*

## புதிய சிந்தனைகள்

*பசி கோவிந்தம்*
*ஓ, மனிதா!*
*புதிய ஆத்திசூடி*

## திரைப் படங்கள்

*வாழப்பிறந்தவள்*
*அன்பு*
*கூண்டுக்கிளி*
*பார்த்திபன் கனவு*
*மணமாலை*
*குழந்தைகள் கண்ட குடியரசு*

# திரையுலகில் விந்தன் !

**1930**ஆம் ஆண்டின் தொடக்கக் காலத்தில் தமிழ் சினிமா பேசத் தொடங்கிய போதிலும் 1940இல்தான் தமிழ் சினிமா தமிழில் பேசியது!

அந்த ஆண்டில்தான் புகழ் பெற்ற இலக்கிய வாதிகள் பலர் கதை வசனம் பாடல்கள் எழுத வந்தார்கள். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் இளங்கோவன், புதுமைப்பித்தன், விந்தன், பாரதி தாசன் போன்றவர்கள். இவர்களின் எழுத்துத் திறமையில் நம்பிக்கை வைத்து சினிமாத் துறைக்கு அன்புடன் அழைக்கப்பட்டவர்கள்.

அதே காலத்தில் பலரின் அன்பான அழைப்பையும் ஆலோசனைகளையும் ஆசைகளையும் ஏற்க மறுத்துச் சுயமரியாதையோடு ஒதுங்கியவர்கள் திரு. வல்லிக் கண்ணன், கு. அழகிரிசாமி ஆகியோர்.

ஒரு சமயம் புகழ் பெற்ற திரைப்படத்தயாரிப்பாளர் ஒருவர் கு. அழகிரிசாமியை அணுகி, கு. அ.வின் ஒரு குறுநாவலைப் படமாக்க விரும்பினார்.

தமிழ் சினிமாவின் பேரில் வெறுப்புற்றிருந்த கு. அழகிரிசாமி, அனுமதி வழங்கத் தயங்கினார். ஆனால், திரைப்படத் தயாரிப்பாளர், படைப்பாளரின் அனுமதி இல்லாமல் கு.அ.வின் குறுநாவலைத் திரைப்படமாக்கினார். சகலவிதமான சினிமாத்

தனங்களோடு 'கல்யாணிக்குக் கல்யாணம்' என்ற பெயரோடு வெளி வந்த அப்படத்தின் கதை வசனம் காதல் பத்திரிகையின் ஆசிரியர் அரு.ராமநாதன் என்று விளம்பரப்படுத்தப்பட்டது.

'தம் கதை திருடப்பட்டது விஷயமாக கு. அழகிரி சாமி என்ன நடவடிக்கை எடுத்தார்' என்று அவரின் துணைவியார் சீதாலட்சுமி அவர்களிடம் கேட்ட போது, 'அத்துறையில் அவருக்கு (அழகிரிசாமி) நல்ல அபிப்பிராயம் கிடையாது. அதனால் அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அத்துடன் சினிமா உலகத்தை மறந்துவிட்டார். சினிமா உலகமும் அவரை மறந்துவிட்டது' என்றார்.

எழுத்துலகில் இன்னொரு சுயமரியாதைக்காரரான வல்லிக்கண்ணன், டி.ஆர்.மகாலிங்கம், எம்.வி.ராஜம்மா நடித்த 'லைலா மஜ்னு' படத்திற்குப் பலரின் வற்புறுத்தலின் பேரில் சில காட்சிகளுக்கு வசனம் எழுதியுள்ளார். பின்னர் எப்.நாகூர், ஏ.எஸ்.ஏ.சாமி, ப.நீலகண்டன் போன்றவர்கள் அவரைப் பாராட்டிப் புகழ்மாலை சூட்டியபோது, தலையை நீட்டாமல் தலைமறைவாகிவிட்டார் வல்லிக்கண்ணன்.

இத்தகைய சூழலில் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த பலர் தமிழ்சினிமாவில் நுழைந்து பணமும் புகழும் பெற விரும்பித் தம் சுயமரியாதையை, எழுத்துரிமையை இழந்தும் வெற்றி பெற முடியாமல் சுயமரியாதைக்காரர்களாக நடமாடிக்கொண்டிருக் கிறார்கள். இவர்களில் ஒருசிலர் மட்டுமே வெற்றி பெற்றார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கலைஞர் கருணாநிதி.

1940இல் 'காளமேகம்' என்ற படத்துக்குக் கதை, வசனம்,பாடல்கள் எழுத பாரதிதாசன் ஒப்பந்தம் செய்யப்பட்டார். இயக்கம் எல்லீஸ் ஆர். டங்கன்.

பாரதிதாசனின் நண்பர் பி.எஸ்.செட்டியார். அவர் பத்திரிகைகளில் கதை - வசனம் பாடல்கள் பி.எஸ்.செட்டியார் என்று விளம்பரப்படுத்தினார். இந்த விளம்பரத்தைக் கண்டு கோபம் கொண்ட பாரதிதாசன் 'என்ன பி.எஸ்.செட்டி! உனக்குப் பலமுறை சொல்லி விட்டேன். தொடர்ந்து அப்படியே விளம்பரம் வருகிறது. என் விஷயத்தில் ஜாக்கிரதையா நடந்து கொள். ஏன் தெரியுமா? நான் புதுச்சேரிக்காரன், சுட்டுடுவேன்'* என்றார். பின்னர் பத்திரிகைகளில் கதை-வசனம், பாடல்கள் பாரதிதாசன் என்று வந்தது.

பாரதிதாசன் பல படங்களுக்குக் கதை-வசனம், பாடல்கள் எழுதிப் புகழ் பெற்றார். அவற்றில் பாரதிதாசனின் 'எதிர்பாராத முத்தம்' என்னும் குறுங் காவியத்தைத் தழுவி எடுக்கப்பட்ட 'பொன்முடி' என்ற திரைப்படம் குறிப்பிடத்தக்கது.

சினிமாத் துறையில் சுயமரியாதைக்காரராக வாழ்ந்த பாரதிதாசன், பிற்காலத்தில் ஒரு சினிமா நடிகரை நம்பி,சொந்தமாகத் தமது 'பாண்டியன் பரிசு' என்னும் காவியத்தைத் திரைப்படம் எடுக்க முயன்று தம்முடைய சிறுசேமிப்பை, அமைதியை இழந்து

---

*ஆதாரம் : கருப்புக் குயிலின் நெருப்புக்குரல் - மன்னர் மன்னன்

இறுதியில் மரணத்தைத் தழுவினார் என்பது கவிஞர் வரலாற்றின் இறுதி அத்தியாயமாகும்.

1947இல் ஜூபிடரின் 'இராஜகுமாரி', 1948இல் ஜூபிடரின் 'அபிமன்யு' ஆகிய இரு படங்களுக்கும் கதை–வசனம் எழுதினார் மு. கருணாநிதி. அந்த இரண்டு படங்களுக்கும் கதை–வசனம் கருணாநிதி என்ற பெயர் வரவில்லை. ஏ.எஸ்.ஏ.சாமி என்ற பெயரே வெளிவந்தது.

'அபிமன்யு' என்ற படத்தை மனைவியுடனும், நண்பர்களுடனும் பார்க்கச் சென்ற மு.க., திரையில் தம் பெயர் வராததைக் கண்டு கொதிப்படைந்தார். மறுநாள் பட முதலாளிகளிடம் தம் கோபத்தை வெளியிட்டார். முதலாளிகள் அவருக்கு ஆறுதல் சொல்லி அடுத்த படங்களில் பெயர் வரும் என்று சொன்னார்கள்: *(ஆதாரம்: பொம்மை 1979)*

மு.க.வின் மைத்துனர் திரு. சிதம்பரம் ஜெயராமனின் பரிந்துரையின் பேரில் தமிழ்சினிமாவில் அடியெடுத்து வைத்தவரை தக்கத் தருணத்தில் மாடர்ன் தியேட்டர்ஸ் டி.ஆர். சுந்தரத்திடம் அறிமுகப்படுத்தி வைத்தார், பாடலாசிரியர் கவி கா.மு. ஷெரிப்.

*(ஆதாரம்: கலைஞரின் நெஞ்சுக்கு நீதி)*

மாடர்ன் தியேட்டர்சின் வெற்றிப்படமான 'மந்திரி குமாரி'யைத் தொடர்ந்து பல வெற்றிப் படங்கள் மு.க.வின் வசனச் சிறப்பால் வெற்றியடைந்து உள்ளன.

தமிழ்த் திரையில் மு.க.வின் அசல் படைப்புகள் இடம் பெறாத போதிலும் அடுத்தவர்களின் படைப்புகளான பராசக்தி, மனோகரா, மணமகள், பணம், மலைக்கள்ளன் போன்ற கதைகள், மு.க.வின் துடிப்பான தமிழால், முற்போக்கான கருத்துக்களால் வெற்றியடைந்தன.

மு.க.வின் வசனத்தில் பழந்தமிழ் பாடல்வரிகள், பாரதிதாசன், விந்தன் போன்ற இலக்கியவாதிகளின் கருத்துக்கள் நிரம்பக் காணப்படுகின்றன என்னும் தகவல் நம்பகமானதாக இருந்தபோதிலும், சில கருத்துக்களை மு.க. எழுத்தாள நண்பர்களின் அனுமதியுடன் கையாண்டுள்ளார். உதாரணத்துக்கு விந்தனின் புகழ்பெற்ற 'பாலும் பாவையும்' நாவலில் வரும், ''ஓடினாள்... ஓடினாள்... வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள்' என்னும் வரிகளாகும்.

கலைஞரின் வசனங்களின் பேரில் சில இலக்கியவாதிகளுக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு. உதாரணத்துக்கு எழுத்தாளர் ஜெயகாந்தனைச் சொல்லலாம். ஜெயகாந்தன் சொன்னார் :

''உங்களுடைய சினிமாப் படங்களை நான் நிறைய பார்த்திருக்கிறேன். பழைய படங்களின் வசனவரிகள் எனக்கு மனப்பாடம்!''

*(ஆதாரம்: கல்பனா – ஆகஸ்ட், 1979)*

எது எப்படியோ, சினிமா சிறந்த சாதனம். அதன் வழியாகச் சொல்லப்படும் கருத்துக்கள் விரைவில் மக்களைச் சென்றடையும். அதோடு அவர்கள்

மனத்தில் பதியும் என்பது பல அறிவுஜீவிகளின் கருத்து.

அந்த நோக்கில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கலைஞர் கருணாநிதி, அறிஞர் அண்ணா ஆகியோரை வெகுவாகப் பாராட்டலாம்.

சினிமா உலகம் எழுத்தாளனுக்குத் தந்து கொண்டிருந்த தொல்லைகள்; ஆள் மாறாட்டங்களை இன்னும் பிற கீழ்த்தரமான செயல்களை ஒட்டு மொத்தமாக எதிர்த்துப் போராடி வீழ்ந்து விடாமல், முன் வைத்த காலை பின்வாங்காமல், அறிவில், ஆற்றலில், மொழியில் மௌனப்புரட்சி செய்து வெற்றிக்கொடி நாட்டியவர்கள் மேலே கண்ட மூவர்.

அதே காலத்தில் வாழ்ந்த எழுத்தாளர்கள் வல்லிக்கண்ணன், கு.அழகிரிசாமி போன்றவர்கள் சினிமாவின் ‘உறவும் நட்பும் வேண்டாமென்று முற்றாக வெறுத்து, தேடிவந்த வாய்ப்புகளை உதறித் தள்ளிவிடாமல், மேலே கண்டவர்கள் போல் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டிருந்தால் இன்று சினிமா உலகம் பல இலக்கியவாதிகளின் சேவையில் சிறப்படைந்திருக்கும்.

இந்தக் கருத்தோட்டத்தின்படி இன்றைய எழுத்தாளர்கள் ஜெயகாந்தன், பூமணி போல் சிறந்த படங்களைத் தயாரிப்பதற்கும், அத்தகைய படங்களின் தயாரிப்புப் பணியில் தங்களை ஈடு படுத்திக் கொண்டு எதிர்காலத்தில் தமிழ்சினிமா இலக்கியத் தரமாக வளருவதற்கும் கை கொடுக்க வேண்டும்

# 2

சினிமாவில் கதை இலாகா என்று ஒன்று உண்டு. அது அசல் எழுத்தாளர்கள் பலரின் அறிவை, ஆற்றலை கூர் மழுங்கடிக்கும் கொலைக் களமாகும்! அந்தக் கொலைக்களத்தில் பல படைப்பாளிகள் பலியாகி இருக்கிறார்கள். அந்தப் பட்டியல் நீளும் என்பதால் உதாரணத்துக்குச் சிலரைக் காட்டலாம்.

ஜெமினி கதை இலாகாவில் புதுமைப்பித்தன், பட்சிராஜா, நரசுஸ் ஸ்டூடியோ ஆகிய கதை இலாகாவில் எம்.எஸ்.கண்ணன், மாடர்ன் தியேட்டர்ஸ், ஏ.வி.எம். கதை இலாகாவில் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த ஜலகண்டபுரம் ப. கண்ணன், சி.பி.சிற்றரசு மற்றும் பலர். ஏவி.எம்.மில் ப.நீலகண்டன், ர.வேங்கடாசலம் ஆகிய தேசிய எழுத்தாளர்கள்.

ஒரு காலகட்டத்தில் மாடர்ன் தியேட்டர்ஸும், ஏவி.எம்.நிறுவனமும் தி.மு.க எழுத்தாளர்களின் கோட்டையாக, கொள்கை பரப்பும் பாசறையாக விளங்கின.

அந்தச் சமயத்தில் அறிஞர் அண்ணா சொன்னார்: 'நான் கதை—வசனம் எழுதும் சில படங்கள் தணிக்கை இல்லாமல் வெளிவந்தால் கோட்டையைப் பிடித்து விடுவேன்' என்று. அதற்குக் களம் அமைத்துக் கொடுத்தவர்கள் மாடர்ன் தியேட்டர்ஸ் டி.ஆர்.சுந்தரம், ஏவி.மெய்யப்பன், ஜூபிடர் சோமசுந்தரம், ஏ.எஸ்.ஏ.சாமி ஆகியோர்.

மாடர்ன் தியேட்டர்ஸ் டி.ஆர்.சுந்தரம், கலைஞர் கருணாநிதி வசனம் எழுதிய 'மந்திரி குமாரி', 'திரும்பிப் பார்' ஆகிய படங்களை வெளியிட்ட தோடு, சி.பி.சிற்றரசு வசனம் எழுதிய 'சர்வாதிகாரி', பாரதிதாசனின் 'பொன்முடி' ஆகிய படங்களைத் தயாரித்து, தி.மு.க வளர்ச்சிக்குத் துணை புரிந்தார்.

மகாகவி பாரதியாரின் பாடல்களில் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்ததோடு பாரதியாரின் பாடல்களை ஒலிப்பதிவு செய்யும் உரிமை பெற்றி ருந்தார், ஏவி. மெய்யப்பன்.

பாரதியாரின் பாடல்கள் நாட்டுடமை ஆக்க அமைக்கப்பட்ட **பாரதி விடுதலைக் கழகம்** என்ற அமைப்பில் அறிஞர் வ.ரா., நாரண துரைக்கண்ணன், வல்லிக்கண்ணன், நடிகர் டி.கே.சண்முகம் ஆகியோர் பணியாற்றினர்.

தமிழக முதலமைச்சர் ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியாரின் கோரிக்கைக்கு இணங்கிப் பாடல்களின் உரிமையை மெய்யப்ப செட்டியார் விட்டுக் கொடுத்தார். இவர்தான் கலைஞர் கருணாநிதியின் 'பராசக்தி', அண்ணாவின் 'ஓர் இரவு', எம்.ஆர்.ராதாவின் 'ரத்தக் கண்ணீர்' ஆகிய படங்களை எடுத்து, தி.மு.க. வின் வளர்ச்சிக்குத் துணை புரிந்த காங்கிரஸ்காரர்; காமராஜரின் நண்பர்.

★ ★ ★

# 3

செங்கற்பட்டு மாவட்டம் நாவலூர் என்னும் சிற்றூரில் வேதாசலம் – ஜானகியம்மாள் தம்பதிகளின் மூத்த மகனாக 22.9.1916இல் பிறந்தார் கோவிந்தன். கோவிந்தன் பிறந்தது சிற்றூர். எனினும், அவன் ஓடி விளையாடி வளர்ந்த இடம், துப்பாக்கிச் சூடுகள், போராட்டங்கள் நிகழ்ந்த 'பக்கிங்ஹாம் பஞ்சாலை' அமைந்துள்ள சூளை – பட்டாளப் பகுதி.

வீரம் செறிந்த அந்த மண்ணில் வளர்ந்தவர். வறுமையின் கொடுமையால் படிப்பைப் பாதியிலே நிறுத்தினார். பின்னர் ஓவியக்கல்லூரியில் சேர்ந்துப் படிக்க ஆரம்பித்தார். அப்பொழுது கோவிந்தனின் பாட்டனார் 'படைப்புத் தொழில் தரித்திரமானது' என்று அந்த முயற்சியை முளையிலேயே கிள்ளியெறிந்தார்.

அப்படியும் இப்படியுமாகக் கோவிந்தனுக்கு இருபது வயது ஆனது. அச்சமயத்தில் சில நாட்கள் ஜெமினி ஸ்டுடியோவில் விளம்பரத்துறையில் வேலை பார்த்தார். அதே காலத்தில் நண்பர் இராஜாபாதர் உதவியால் டாக்டர் மாசிலாமணி முதலியார் நடத்திய 'தமிழரசு' பத்திரிகையில் அச்சகப்பிரிவில் சேர்ந்தார்.

'தமிழரசு' பத்திரிகையின் ஆஸ்தான கவிஞராக விளங்கிய பாரதிதாசன் எழுதிய 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்னும் கவிதையை முதன்முதலாக அச்சுக்

கோத்த பெருமை பிற்காலத்தில் கதாசிரியராக கவிஞராகப் புகழ் பெற்ற (கோ)விந்தன் அவ களுக்கே உரியது.

தமிழரசு, ஆனந்தவிகடன் போன்ற பத்திரிகைகளில் அச்சுக் கோப்பாளராக இருந்த கோவிந்தன் 1941ஆம் ஆண்டு கல்கி பத்திரிகையில் நண்பர் இராஜாபாதர் உதவியுடன் சேர்ந்தார்.

பேராசிரியர் கல்கி அவர்களின் கையெழுத்து கடவுளுக்குத்தான் புரியும் என்று எல்லோரும் கருதிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அந்தக் கையெழுத்து விந்தனுக்கு எளிதில் புரிந்தது!

கல்கி தீபாவளி மலர் ஒன்றுக்குக் கல்கி எழுதிய 'வீணை பவானி' என்ற நீண்ட சிறுகதையைச் சிறிதும் பிழையின்றித் திருத்தமாக அச்சுக் கோத்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார் கோவிந்தன்.

இந்தச் செய்தி பேராசிரியர் கல்கியின் காதில் விழுந்தது. 'யார் அந்த ஆள்?'' என்று போர்மேன் இராஜாபாதரிடம் கேட்க, இராஜாபாதர் ''இந்தப் பையன்தான் சார்!'' என்று கோவிந்தனைக் கல்கியின் முன் அழைத்துவந்து நிறுத்தி, 'இந்தப் பையன் நல்லா கதையெல்லாம் எழுதுவான் சார்' என்று உற்சாகத் தோடு தன் நண்பனை - ஒரு படைப்பாளியை அறிமுகப்படுத்தினார். 'அப்படியா, பேஷ்! ஒரு கதை எழுதி கொண்டு வரச் சொல்லு' என்றார் கல்கி.

இப்படித்தான் விந்தன் கல்கிக்கு அறிமுகமானார்.

கல்கி பத்திரிகையில் ஆரம்பத்தில் விந்தன் 'பாப்பா மலர்' பகுதிக்குச் சின்னஞ்சிறு கதைகளை வி.ஜி.என்ற பெயரில் எழுதினார். வி.ஜி.என்ற பெயரை விந்தன் என்று மாற்றியதோடு அவரைக் கல்கி ஆசிரியர் குழுவில் இணைத்துக் கொண்டு, விந்தனின் வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்தார் கல்கி கிருஷ்ணமூர்த்தி.

1946இல் ஆரம்பிக்கப்பட்டது தமிழ் வளர்ச்சிக் கழகம். அதே ஆண்டில் வெளிவந்தது விந்தனின் 'முல்லைக் கொடியாள்' என்னும் சிறுகதைத் தொகுப்பு. தமிழ் வளர்ச்சிக் கழகம் அளிக்க முன் வந்த முதல் பரிசை விந்தனின் **முல்லைக் கொடியாள்** சிறு கதைக்கே வழங்கியது. இதன்மூலம் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் முதல் பரிசைப் பெற்ற முதல் எழுத்தாளர் விந்தன் அவர்களே யாவார்.

விந்தனின் 'முல்லைக் கொடியாள்' என்னும் சிறுகதைத் தொகுப்பிற்குப் பேராசிரியர் கல்கி எழுதிய முன்னுரை, விந்தனுக்கு இலக்கிய உலகில் கிடைத்த மிகப் பெரிய அங்கீகாரமாகும். இதுதான் முன்னுரை :

**'ஒரு காலத்தில் தமிழ்நாட்டில் சிறிய கதைகளும் பெரிய கதைகளும் பெரும்பாலும் ஒரு சாதியாரைப் பற்றியே வந்து கொண்டிருந்தன. எழுதுகிறவர்களும் படிக்கிறவர்களும் பெரும்பாலும் பிராமணர்களா யிருந்தபடியால் அந்தச் சாதியரைப் பற்றியே கதைகளும் எழுதப்பட்டன.**

அந்தக் கதைகளில் கையாளப்பட்ட தமிழ்நடை, பிராமணக் குடும்பங்களில் வழங்கும் தமிழாகவே இருந்தது. பிராமண எழுத்தாளர்கள் கஷ்டப்பட்டு வேறு சாதியாரைப் பற்றிக் கதை எழுதும்போது அவர்கள் வர்ணிக்கும் நடை உடை பாவனைகள் அவ்வளவு சரியாய் இருப்பதில்லை.

இந்தச் சமயத்தில் நவயுக மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் தோன்றினார்கள். ருஷ்யக் கதைகளையும் மற்ற மேனாட்டுக் கதைகளையும் படித்தார்கள். அந்தக் கதைகளைப் போலவே இந்த நாட்டு ஏழை எளியவர்களையும் உழைக்கும் உழைப்பாளிகளைப் பற்றியும் கதை எழுத ஆரம்பித்தார்கள்.

விந்தன் உழைப்பாளி மக்களிடையே பிறந்து வளர்ந்து உழைத்துப் பண்பட்டவர். ஏழை எளியவர்கள், தொழிலாளர்கள் பட்டாளிகளின் சுகதுக்கங்களை இதயம் ஒன்றி அனுபவித்து உணரும் ஆற்றல் பெற்றவர். அந்த உணர்ச்சிகளைத் தமிழ் நடையில் சித்திரித்து இலக்கியப் பண்பு வாய்ந்த சிறுகதைகள் பலவற்றை அவர் திறம்பட எழுதியுள்ளார்.

அவருடைய கதாபாத்திரங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கு எல்லாம் நாம்தான் காரணமோ என்று எண்ணியெண்ணித் தூக்கம் இல்லாமல் தவிக்க நேரும்...''

பெரியார், ஈ.வெ.ரா.வின் ஆதரவாளரான முருகு.சுப்பிரமணியம் வெளியிட்ட 'பொன்னி' இதழில் நக்கீரன் என்ற பெயரில் விந்தன் 'கண் திறக்குமா?' என்ற தொடர் கதையை எழுதினார். 'பொன்னி'யில் அந்தத் தொடர் முடியும் முன்னே 'கல்கி'யில் 'பாலும் பாவையும்' என்ற தொடரை எழுத ஆரம்பித்தார். அந்தத் தொடர் விஷயமாக விந்தனுக்கும் கல்கிக்கும் நடந்த உரையாடல் கீழே தரப்பட்டுள்ளது.

"ஒரு நாள் அமரர் கல்கி அவர்கள், என்னைத் தம் வீட்டுக்கு வருமாறு பணித்தார்கள். சென்றேன். கையில் திறந்த பத்திரிகை ஒன்றை வைத்துக் கொண்டு ஏதோ யோசித்த வண்ணம் அப்படியும் இப்படியுமாகத் தம் அறையில் அவர்கள் நடை போட்டுக் கொண்டிருந்தார்கள்."

"அழைத்தீர்களாமே என்றேன்."

"கல்கி காரியாலயத்தில் வேலை பார்க்கும் நீங்கள் வேறெந்தப் பத்திரிகையிலும் கதையோ, கட்டுரையோ எழுதக் கூடாது என்ற விஷயம் உங்களுக்குத் தெரியாதா?" என்று தமக்கே உரித்தான கம்பீரத்துடன் கேட்டார்கள்.

"தெரியும்!" என்றேன்.

"சரி. இந்தப் பத்திரிகையில் வெளியாகியிருக்கும தொடர்கதை யாருடையது?"

"தெரியாது!"

'உங்களுடைய தொடர்கதை என்று பலர் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்களே. அதற்கு என்ன சொல்கிறீர்கள்?"

"அவர்கள் ஒரு வேளை என்னுடைய விரோதிகளாக இருக்கலாம்."

"இல்லை, உங்களுடைய அபிமானிகள்தாம் அப்படி எழுதியிருக்கிறார்கள். அத்துடன் கல்கியில் ஏன் அவர் தொடர்கதை எழுதக் கூடாது என்றும் கேட்டிருக்கிறார்கள்."

"அவர்கள் நாசமாய்ப் போகட்டும் என்று மனதுக்குள் சபித்துக் கொண்டே நான் பலிபீடத்தில் நிற்கும் ஆடுபோல் நின்றேன்!"

"அதற்குப் பின் ஆசிரியர் அவர்கள் என்ன நினைத்தார்களோ, என்னமோ 'சரி போய்வாருங்கள்' என்று என்னை அனுப்பிவிட்டார், வீட்டுக்கல்ல; காரியாலயத்துக்குத்தான். அதன் விளைவே கல்கியில் தொடராக வெளியாகி உங்கள் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்த 'பாலும் பாவையும்' ஆகும்."

1950இல் கல்கி இதழில் தொடராக வெளிவந்த இந்நாவல் விந்தனுக்குப் பலவிதமான பாராட்டுதல்களையும், பாதிப்புகளையும் உண்டாக்கி இலக்கிய உலகில் பெரியதோர் பரபரப்பை ஏற்படுத்தியது.

சிறப்பாகச் சொல்ல வேண்டுமானால் வள்ளுவருக்கு ஒரு திருக்குறள், கம்பனுக்கு ஓர்

இராமாயணம், இளங்கோவடிகளுக்கு ஒரு சிலப்பதிகாரம், பாரதிக்கு ஒரு பாஞ்சாலி சபதம், பாரதிதாசனுக்கு ஒரு குடும்பவிளக்கு - என்று சிறப்படைந்தது போல் விந்தனின் எழுத்தாற்றலை எக்காலத்திலும் எடுத்துக் சொல்லக்கூடிய நாவல் 'பாலும் பாவையும்' என்பதே. இது தமிழ் முற்போக்கு இலக்கிய உலகின் ஒட்டு மொத்தமான கருத்தாகும்.

விந்தனுக்கு இவ்வளவு சிறப்புக்களைச் சேர்த்த இந்த நாவல், அவருக்கு எத்தகைய பாதிப்புகளை, பலவீனங்களை ஏற்படுத்தியது என்பதையும் இந்தச் சமயத்தில் கவனிக்கத் தக்கது.

'பாலும் பாவையும்' தொடர்கதை 'கல்கி'யில் தொடராக வெளிவந்தபோது, 'பிறர் எழுத்தை நான் படிப்பதேயில்லை' என்று கர்வத்தோடு சொல்லிக் கொண்டிருந்த எழுத்தாளர்கள் பலரை, பலமுறை படிக்க வைத்துச் 'சொல் புதிது', 'சுவை புதிது' என்று சொல்ல வைத்த நாவல்.

எழுத்தாளர் அகிலன் சொன்னார் :

'பாலும் பாவையும்' என்ற நாவலின் வாயிலாகத் தமிழ் வாசகர் உலகமே வியப்புறச் செய்து, யார் இந்த விந்தன்? என்று கேட்க வைத்த நாவல் அது. கதை, கருப்பொருள், எழுத்து, நடை, உருவம் எல்லா வற்றிலும் ஒரு புதுமை தெரிந்தது. அந்த நாவலில் இலக்கியப் படைப்புக்கு வேண்டிய உயிர்த்துடிப்புகள் காணப்பட்டன. *(விந்தனும் விமர்சனமும் 64-65)*

இவரைப் போலவே வல்லிக்கண்ணன் எழுதுகிறார் : ''இந்தக் கதையை விந்தன் வளர்த்து இருக்கும் விதம் புதுமையானது; கதை மாந்தரை அறிமுகப்படுத்துகிற விதம் புதுமையானது. அவர்களைப் பழகவிட்டு உரையாட வைக்கிற போக்கு ரசமானது; சுவையானது. இடைஇடையே அவர் சுட்டிக் காட்டுகிற உண்மைகள் சிந்தனைக்கு உணவு; ஆங்காங்கே அவர் பொறித்துள்ள சிந்தனை மணிகள் அறிவின், அனுபவத்தின் ஒளிச்சுடர்கள்.''

*(விந்தனும் விமர்சனமும் 46-47)*

திரைப்பட இயக்குநர் டி.ஆர். ராமண்ணா ஒரு பேட்டியில் கூறியுள்ளார் :

''எழுத்தாளர் விந்தன் நான் மறக்க முடியாத திரைக்கதை — வசனகர்த்தா. கல்கியில் அப்போது வாரந்தோறும் வெளிவந்து கொண்டிருந்த அவரது 'பாலும் பாவையும்' தொடர் நாவலை நான் மிகவும் ரசித்துப் படித்தேன். விந்தனைச் சந்தித்து அதைப் படமாக்கவேண்டும் என்று கதையைக் கேட்டேன். அதற்கு விந்தன், 'இதில் என் கதாநாயகி மூன்று தடவை கெட்டுப் போகிறாள். இதைத் தமிழ் சினிமா ரசிகர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்' என்று மறுத்தார். விந்தன் எழுத்தில் எனக்கு மோகம் இருந்ததால் வேறு ஏதேனும் கதை கேட்டேன். அதுதான் என் முதல் படமான 'வாழப்பிறந்தவள்'. பிறகு 'கூண்டுக்கிளி'க்கு விந்தன் கதை —வசனம் எழுதினார்.''

*(தினமணி - வெள்ளிமணி 9.10.87)*

வேறொரு சமயத்தில் டி.ஆர்.ராமண்ணா விந்தன் சினிமாவுக்கு வந்ததை விவரமாக விவரிக்கிறார். ''திரைக்கதை – வசனம் எழுத, புதியவராக ஒருவரை அறிமுகப்படுத்த விரும்பினேன். புகழோடும் 'பிசி'யாகவும் இருந்த வசனகர்த்தாக்களை ஏற்பாடு செய்தால் குறிப்பிட்ட நாளில் அவர்களிடம் எழுதி வாங்குவது சிரமமாக இருக்கும் என்று எனக்குத் தோன்றியது.

''தவிர,புதிதாக இயக்குநர் பணிக்கு வருவதால் அவர்கள் என் கருத்துக்கு மதிப்பு அளிப்பார்களா என்ற தயக்கமும் என்னுள் இருந்தது. கல்கி பத்திரிகையில் உதவி ஆசிரியராக இருந்து வந்த விந்தன் என் நினைவிற்கு வந்தார். அவரது முழுப் பெயர் கோவிந்தன். அவர் 'கல்கி'யில் எழுதிய 'பாலும் பாவையும்' தொடர்கதை எனக்கு மிகவும் பிடித் திருந்தது. 'பாலும் பாவையும்' கெட்டுப் போனால் பயன் படாது என்ற கருத்தை அந்தக் கதையில் வலியுறுத்தி இருந்தார்.

''அவரது கருத்துக்களில் இருந்த அர்த்தமும் ஆழமும் என்னை வெகுவாகக் கவர்ந்தன. எனவே 'வாழப் பிறந்தவள்' படத்திற்குத் திரைக்கதை அமைத்து வசனம் எழுதும் பணியை அவருக்குத் தரலாம் என்ற முடிவுக்கு வந்தேன். ஆனால் கல்கி பத்திரிகையின் ஆசிரியர் கல்கி அவர்கள் அதற்கு அனுமதி அளிப்பாரா என்ற சந்தேகம் குறுக்கிட்டது. எதற்கும் ஆசிரியரைச் சந்தித்துக் கேட்டுவிடுவோம்

என்ற எண்ணத்தோடு கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களைச் சந்தித்து என் எண்ணத்தைக் கூறினேன்.

“நான் ஆச்சரியப்படும்படி உடனே அனுமதி அளித்தார். தனது கதர் அவங்கவஸ்திரத்தை விசிறி தோளில் போட்டுக் கொண்ட ஆசிரியர் கல்கி, ‘படத்தின் பெயர் வாழப்பிறந்தவளா? பேஷ் பேஷ்! விந்தன் வாழவேண்டிய உழைப்பாளி. எந்தப் பிரச்சனையையும் அழுத்தமாகத் தன் எழுத்தால் எடுத்துரைக்கும் இலட்சிய இளைஞர். சினிமா உலகில் அவருக்கு நீங்கள் வாய்ப்பு அளிப்பதற்காக நான் சந்தோஷப்படுகிறேன்” என்றார்.

“கல்கியில் பணியாற்றிக் கொண்டே ஓய்வு கிடைக்கும் நேரங்களில் எங்களது ஆர்.ஆர். பிக்சர்ஸ் அலுவலகத்திற்கு விந்தன் வந்து திரைக்கதை - வசனம் எழுதி வந்தார். எழுதுவதற்கு ஓட்டல் அறை ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும் என்றோ வீட்டுக்குக் கார் அனுப்பி அழைத்துவர வேண்டும் என்றோ அவர் கெடுபிடி செய்யவில்லை!

“எங்களது அலுவலகத்து மாடி அறையில் குறுக்கும் நெடுக்குமாக, சிறுநடை போடுவார். வாயில் சுருட்டு புகைந்து கொண்டே இருக்கும். அந்த இரண்டும் அவரது சிந்தனைக்குத் தூண்டுகோல்கள். ‘மூடை’ எதிர்பார்க்காமல் விரைவாக எழுதித் தள்ளி விடுவார். நான் எதிர்பார்த்ததைவிட அவருடைய எழுத்துக்கள் சிறப்பாக இருந்தன.” *(குங்குமம்: மார்ச் 1994)*

# 4

**1951**இல் " பிரபல எழுத்தாளர் விந்தன் ஏவி.எம். கதை இலாகாவில் சேர்ந்தார்!" என்ற செய்தி தினத்தந்தி பத்திரிகையில் வெளிவந்தது.

ஏவி.மெய்யப்பனின் நெருங்கிய உறவினர் ஒருவர் விந்தனுக்குப் பலவிதமான ஆசைகளைக் காட்டி, சினிமாத்துறைக்கு அழைத்துப் போனார்.

அக்கால கட்டத்தில் ஏவி.எம்.கதை இலாகாவில் அன்றைய புகழ்பெற்ற எழுத்தாளர் ப.நீலகண்டன் அவர்களே கதை இலாகாவின் பொறுப்பாளராக இருந்தார். அச்சமயத்தில் ஏவி.எம்.நிறுவனம் 'வேலைக்காரன்' என்ற பெயரில் படம் ஒன்றைத் தயாரிக்கப் பலரைக் கொண்டு கதையை உருவாக்கிக் கொண்டிருந்தது.

உழைக்கும் வர்க்கத்தில் இருந்து வந்த எழுத்தாளரான விந்தனுக்கு 'வேலைக்காரன்' என்னும் தலைப்பு மிகவும் பிடித்திருந்ததால் மனநிறைவோடு கதை இலாகாவில் சேர்ந்து பணியாற்றினார்.

ஆனால் கதை இலாகாவில் விந்தன் கதைக்கும் கருத்துக்கும் மதிப்பும் மரியாதையும் இல்லை என்பதை அறிந்து, அனுபவத்தால் அறிந்து விலகி விட நினைத்த நேரத்தில் அவரின் 'பாலும் பாவையும்' நாவலை ஏவி.எம். நிறுவனம் படமாக்க விரும்பியது.

அதன்படியே சிவாஜி கணேசன், பத்மினி போன்றவர்களை நடிக்க வைத்துச் சில காட்சிகளை படமாக்கியது. எனினும் சில பிரச்சனைகளால் அந்த முயற்சியைக் கைவிட்டது ஏவி.எம்.! அதற்கு யார் காரணம்? சினிமாத்துறையின் சின்னத்தனங்கள்தாம்.

எக்காலத்திலும் விந்தன் தன் எழுத்துரிமையில் மிகுந்த கவனமாக இருந்தது போலவே உழைப்புக் கேற்ற ஊதியம் பெறுவதிலும் உறுதியாக இருப்பார்.

ஏவி.எம். நிறுவனம் எழுத்தாளர்களுக்குக் கொடுத்து வந்த மதிப்பும் ஊதியமும் விந்தனுக்கு ஒத்துவராததால் அந்நிறுவனத்தின் உறவை அறுத்துக் கொண்டார். இதே விஷயம் டி.கே.சண்முகம் நாடகக் கம்பெனியிலும் நடந்தது.

விந்தனின் 'பாலும் பாவையும்' நாவலைப் படித்துப் பாராட்டியவர்களில் இலக்கிய உணர்வு மிக்க அவ்வை டி.கே. சண்முகம் அவர்களும் ஒருவர்.

டி.கே.சண்முகத்தின் சகோதரர்கள் விந்தனின் 'பாலும் பாவையும்' நாவலை நாடகமாக்க விரும்பினர். அதற்கு விந்தனும் இசைவு தந்தார். ஆனால் டி.கே.எஸ்.சகோதரர்கள் எழுத்தாளர்களுக்கு அளித்த ஊதியத்தில் விந்தனுக்கு உடன்பாடு இல்லாததால் நாடகம் அரங்கேறும் வாய்ப்பை இழந்தது. ஆனால், பேராசிரியர் கல்கி, நாரண துரைக்கண்ணன் போன்ற எழுத்தாளர்கள் டி.கே.சண்முகம் குழுவினரோடு ஒத்துழைத்து, 'கள்வனின் காதலி', 'உயிரோவியம்' போன்ற நாவல்களை நாடகமாக்கி அரங்கேற்றிப் புகழ் பெற்றார்கள் என்பது வியப்புக்குரியதாகும்.

இந்த இடத்தில் ஒரு தகவல் :

புகழ்பெற்ற நிறுவனங்களால் கைவிடப்பட்ட நாவலை என் முயற்சியால் என் சொந்தச் செலவில் (இந்நூல் ஆசிரியர்) 15.7.1964 அன்று ராஜா அண்ணாமலை மன்றத்தில் டாக்டர் மு. வரதராசனார் தலைமையில் நாடகமாக அரங்கேறியது. நடிகர்கள்: சினிமா நடிகர் கள்ளபார்ட் நடராசன், ஆர். காந்திமதி, செஞ்சி கிருஷ்ணன் ஆகியோர். அப்போது விந்தன் சொன்னார்: 'நாடகம் உங்களுக்கு தொழில் அல்ல; அதனால் உங்களிடம் வியாபாரமும் இல்லை.''

1967இல் அகில இந்திய வானொலி நிலையம் விந்தனின் 'பாலும் பாவையும்' நாவலைப் பட்டுக் கோட்டை குமாரவேல் நாடகமாக்க, அனைத்து இந்திய மொழிகளிலும் ஒரு மணிநேர நாடகமாக அரங்கேற்றியது. பின்னர் பட்டுக்கோட்டை குமாரவேலு திருச்சியில் இதே நாடகத்தை மேடை நாடகமாக நடத்தினார்; அப்போது அதிசயம் நடந்தது!

நாற்பது ஆண்டு இலக்கிய வாழ்க்கையில் விந்தன் எதையும் எழுதியே சாதிப்பது என்ற கொள்கை யுடையவர். அதனாலேயே அவர் மேடைகில் பேசுவதைத் தவிர்த்து வந்தார். பலமுறை பேராசிரியர் கல்கி, விந்தனைப் பேச வைப்பதற்கு முயற்சி எடுத்து தோற்றுப் போனதும் உண்டு.

இந்த நிலையில் திருச்சியில் நடைபெற்ற 'பாலும் பாவையும்' நாடகத்திற்கு விந்தன் தலைமை தாங்கிப் பேசியது பேராச்சரியத்துக்குரியது.

# 5

ஏழை எளியவர்களின் இனிமையான பொழுது போக்குக்கு, அவர்கள் நிஜவாழ்க்கையில் இல்லாத கனவுக் காட்சிகளை நினைத்த மாத்திரத்தில் ஏற்ற வகையில் கலைத்தொண்டு புரிவதாகச் சொல்லப் படும் கலை உலகம், எத்தனையோ இலக்கிய வாதிகளின் இன்னுயிரைப் 'பட்'டென்று பறித்துள்ள வரலாற்றை நன்கு அறிந்த விந்தனும் அதற்குப் பலியானது விந்தையே!

விந்தனும் புதுமைப்பித்தனும் இலக்கிய உலகில் வெவ்வேறு நோக்கும் போக்கும் உடையவர்கள். ஆயினும், சினிமா உலகில் இருவரும் ஒரே போக்கிற்குப் பலியானார்கள்!

எழுத்தாளர்கள் பலர் சினிமாவில் சேர்ந்து பணம் சம்பாதிப்பதைக் கண்ட புதுமைப்பித்தனும் அதே ஆசையில் சினிமாவில் சேர்ந்தார். விந்தனும் வாழ்க்கைப் போராட்டங்களிலிருந்து விடுதலை பெற ஒரே வழி சினிமாதான் என்று சினிமாவில் சேர்ந்தார்.

இருவருக்கும் பணமே பிரதானம்; பற்றாக் குறையே வழிகாட்டி.

புதுமைப்பித்தன் சினிமா பிரவேசத்தால் அல்லலுற்றுக் கடும் காசநோய்க்கு ஆளாகி, 'வந்தான்

கான்; வந்தபடியே போனான் கான்?' என்ற அவர் வாக்குபடியே மரணம் அடைந்தார்.

விந்தனோ சினிமா மயக்கத்தில அத்துறைக்குப் போய் சுதந்திரத்தை, சுயமரியாதையை இழக்க விரும்பாமல் மீண்டும் பத்திரிகைத் துறைக்கு வந்து இருபது ஆண்டுகள் அன்றாடம் செத்துச் செத்துப் பிழைத்து, வாழ்க்கையின் பிரச்சனைகளுக்கிடையே பிறந்தும் வளரமுடியாத என் நாவல்கள் சர்வ வல்லமை யுள்ள காசால்தான் காப்பாற்ற முடியுமா? கடவுளே உன்னால் முடியாதா? என்று கண்ணீர் சிந்தி, அந்தக் கண்ணீரோடே காலமானார்.

கல்கி இதழில் பத்து ஆண்டுகள் துணை ஆசிரியராகப் பணி புரிந்த விந்தன், பேராசிரியர் கல்கி அவர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றுப் புகழ்பெற்ற எழுத்தாளராகத் திகழ்ந்த நிலையில், தம் விலகல் கடிதத்தைக் கல்கியிடம் அளித்தார்.

திரு.வி.க.வின் நவசக்தியைவிட்டு விலகி, கல்கி, ஆனந்தவிகடன் போக எண்ணியபோது, ‘உங்கள் விருப்பத்துக்கு நான் தடையாக இருக்க மாட்டேன். மீண்டும் நீங்கள் பணியாற்ற விரும்பினால் தாராளமாக வரலாம். உங்களுக்கு எப்போதும் இங்கு இடம் உண்டு'' என்றாராம் திரு.வி.க. அதைப்போலவே கல்கி சொன்னபோது சினிமா மயக்கத்தில் இருந்த விந்தன் தம் வழக்கமான சிரிப்போடு தம் ஆசிரியரிடமிருந்து விடை பெற்றார். இந்த விலகலைப்பற்றி இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் விந்தன் எழுதினார்.

"ஏதோ ஏதோ ஒரு மயக்கம் என்கிறார்களே சினிமாவில் வரும் காதலர்கள். அப்படியொரு மயக்கம் அடியேனையும் அந்நாளில் ஆட்கொண்டது. அதன் காரணமாகப் பல வகையிலும் எனக்குக் கற்பனைத் தருவாக இருந்த கல்கி அலுவலகத்தைவிட்டுக் கல்கி அவர்கள் எச்சரித்தும் கேட்காமல் விலகினேன்; நடக்கக் கூடாதது நடந்தது 1951ஆம் ஆண்டில்.

கல்கி இதழில் பணிபுரிந்தபோதே விந்தனுக்கு சினிமா வட்டாரத்தில் சில நண்பர்கள் இருந்தார்கள். அவர்களில் திரைப்பட இயக்குநர், திரைக்கதை வசன கர்த்தாக்கள், பாடலாசிரியர்கள் ஆகியோர் உண் டென்றாலும் திரைப்படத்துறையில் அனுபவ மிக்க தொழிலாளத் தோழர்களிடையே, குறிப்பாகத் தையல் தொழிலாளியாக வாழ்க்கையைத் துவக்கி, திரைப் படத் தயாரிப்பாளராக, இயக்குநராக வளர்ந்த எம்.நடேசன், எம்.கே.தியாகராஜ பாகவதரின் உறவினரும், பாகவதரின் புகழ் மிக்க திரைப் படங்களுக்குச் சிறந்த ஆலோசகராக இருந்து வந்த மாவன்னாஆச்சாரி போன்றவர்களும் விந்தனின் தோழமைக் குரியவர்களாக இருந்தார்கள்.

நண்பர்களின் ஏற்பாட்டின்படி அக்காலத்தில் வெற்றிக்கொடி நாட்டிய நடிகர், சகலகலா வல்லவர் பி.யு.சின்னப்பா அவர்கள் தயாரித்த *'வானவிளக்கு'* என்னும் திரைப்படத்துக்கு வசனம் எழுதும் வாய்ப்பு விந்தனுக்கு வாய்த்தது.

விந்தனைப் போலவே சுயமரியாதைக்காரரான சின்னப்பா, விந்தனைப் பெரிதும் மதிக்கவே செய்தார்.

ஆனால் 'வானவிளக்கு' பாதியிலேயே நின்று விட்டது.

அதே காலகட்டத்தில் விந்தனின் ரசிகரும், நட்சத்திர நடிகையான டி.ஆர்.ராஜகுமாரியின் சகோதரருமான டி.ஆர். ராமண்ணா தயாரித்த ஆர்.ஆர்.பிக்சர்ஸ் 'வாழப்பிறந்தவள்' என்ற படத்துக்கு வசனம் எழுதும் வாய்ப்பைப் பெற்றார்.

'வாழப் பிறந்தவள்' வங்க எழுத்தாளர் சின்ஹா என்பவர் எழுதிய கதையைத் தழுவி எடுக்கப்பட்டது.

'வாழப்பிறந்தவள்' நாட்கணக்கில் நடைபெற்று வெற்றி விழாக்கள் கொண்டாடவில்லை. என்றாலும் கருத்துள்ள படம் என்னும் பாராட்டைப் பெற்றது. அந்த அளவுக்கு விந்தனின் இலக்கியத் தரமான வசனங்கள் பெரிதும் உதவின. மேலும் சினிமா உலகத்துக்குப் புதியவர் ஆனதால் விந்தன் எழுத்தில் சினிமாத்தனங்களைக் காண முடியவில்லை.

## 'வாழப் பிறந்தவள்' கதை

ஆம், உணராத சமூகத்துக்கு உணர்த்துகிறோம், அவள் சாகப் பிறக்கவில்லை! வாழத்தான் பிறந்தாள்.

ஆனால், பெண்களைப் பஞ்சுமெத்தைகளாகக் கருதி அடிக்கடி படுக்கையை மாற்றும் ஆண் வர்க்கம் அவளை வாழ விட்டதா? அந்த வர்க்கத்தை எதிர்த்து நின்று அவளால் வெற்றிபெற முடிந்ததா? அதுதான் அபலை கீதாவின் கதை!

ஏன், நம் நாட்டுப் பெண்களின் கதையும் அது தானே!

ஏட்டிலே நடமாடும் சட்டம், நாட்டிலே நடமாடாத காரணத்தால், காதல் ஒன்று சேர்த்து வைக்காத கீதாவையும், ராஜாவையும் 'கௌரவம்' ஒன்று சேர்த்து வைத்தது. அதற்கு அவர்கள் பெற்றோர்கள் இட்ட பெயர் – கல்யாணமாம் கல்யாணம்.

அதனால் விளையும் . விபரீதங்களைத்தானே 'விதியின் விளையாட்டு' என்று வீணர்கள் சொல்கிறார்கள்.

பாவம், கல்யாணம் பண்ணியும் கன்னியாக, கணவன் உயிருடன் இருந்தும் கைம்பெண்ணாகக் காலம் கழித்து வந்தாள் கீதா.

தன்னலம் மிக்க ஆண்களால் இயற்றப்பட்ட சட்டதிட்டங்கள், சாஸ்திர சம்பிரதாயங்கள் அவளுக்கு அநீதிமேல் அநீதி இழைத்து வந்தன. அவற்றுக் கிடையே நீதியை விலை கொடுத்து வாங்கமுடியாத கீதா கண்ணீர் விட்டாள்; கலங்கினாள்.

இந்த நிலையில், கடன் கொடுத்த கயவன் ஒருவன் தயாநிதி என்று தகாத பெயரில் வந்து, அவளிடம் காதல் கீதம் பாடினான். அக்கம் பக்கத்தி லிருந்தவர்கள் அவன் பாட்டுக்குப் பக்க வாத்தியம் வாசித்தனர்! இந்த அபஸ்வரத்தைக் கேட்டுக் கீதா துடித்தாள்; துவண்டாள்.

அவள் தகப்பனார் சதாசிவம் அதற்கு மேல் பொறுமையைச் சோதிக்க விரும்பவில்லை. ராஜாவின் அப்பாவான பொன்னுசாமியைத் தேடிச் சென்றார். விஷயத்தை எடுத்துச் சொல்லி அந்த வீணன் காலில்

விழுந்தார். அவனோ, 'ஏழைகள் வாழ்வது பணக்காரர் களுக்கு அவமானம்!' என்று இறுமாப்புடன் சொல்லி அவரை எட்டி உதைத்துக் கொட்டும் மழையில் தள்ளிவிட்டான்,பாவி!

கிழவர் என்ன செய்வார்? எமனின் உதவியை நாடித் தன் இன்னலைத் தீர்த்துக் கொண்டார்.

அவரைப் பிரிந்த தாயும் மகளும் தரித்திரத்தின் சிகரத்தை எட்டிப் பிடித்தனர்.

நிலைமையை உணர்ந்த தயாநிதி நெருக்கினான்; கடனுக்குப் பதிலாக அவள் கற்பைச் சூறையாட விரும்பினான். ஏழை கீதா என்ன செய்வாள்? பிறந்த வீட்டை விட்டுப் பெற்ற தாயை விட்டுப் புகுந்த வீட்டைத் தேடிப் புருஷன் தயவை நாடி ஓடினாள், ஓடினாள், அப்படி ஓடினாள். அங்கே பிச்சைக்காரி யோடு பிச்சைக்காரியாய் நின்ற அவளை, அந்த வீட்டு மருமகள் என்று இனந்தெரிந்து கொண்டவள் ஒரே ஒருத்திதான் – அவள்தான் நிர்மலா!

மலர்வதற்கு முன்னால் மணமற்றுப் போன அவளை நோக்கி, 'எங்கே மன்னி, என் கணவர்?' என்று ஆவலுடன் விசாரித்தாள் கீதா.

நீர் வழியும் கண்களுடன் நிர்மலா சொன்னாள்.

'இப்பொழுது அவன் மனைவி நீயல்ல, கீதா – சுமதி!'

அவ்வளவுதான்! கீதாவின் தலையில் இடி விழ வில்லை. இமயமலையே பெயர்ந்து வந்து விழுந்தது.

இச் சமயத்தில்தான் 'இவள் யார் அக்கா!' என்ற குரல் கீதாவின் காதில் விழுந்தது. திரும்பிப் பார்க்கிறாள். அவள் அழகில் சொக்கிய ராஜா அங்கே நின்றான்.

நிர்மலாவின் பாடு தர்மசங்கடமாகப் போய் விடுகிறது. நிலைமையைச் சமாளிக்க 'அவள் வேலைக்காரி ராஜா!' என்று சொல்லி விடுகிறாள்.

அந்த அப்பாவி அத்துடன் விட்டானா என்றால் அதுதான் இல்லை! தன்னை மனிதனாக்கிய சூழ் நிலையைக்கூட மறந்து, கீதாவின் மேல் மையல் கொண்டுவிட்டான். பரிதாபம்.

இந்தக் காதல் பழமைப்பெண்ணான கீதாவை மட்டும் சோதிக்கவில்லை; புதுமைப்பெண்ணான சுமதியையும் சோதித்தது. அன்புள்ளங்கொண்ட இருவருக்கும் இதனால் எத்தனைத் துன்பங்கள்.

அப்பப்பா! அதற்குமேல் படித்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்! பார்த்துத்தான் தெரிந்து கொள்ளுங்களேன்.

யார் வாழப்பிறந்தவள்?

★ ★ ★

# 6

1953ஆம் ஆண்டில் இரண்டாவது படமாக நடேஷ் ஆர்ட் பிக்சர்சின் '**அன்பு**' என்ற படத்துக்கு, கதை -வசனம் எழுதியதோடு ஒரு பாடலையும் விந்தன் எழுதினார். அன்பு - சிவாஜி கணேசனுக்கு இரண்டாவது வெற்றிப்படம்.

தையல் தொழிலாளியாக வாழ்க்கையைத் தொடங்கித் திரைப்படத் தயாரிப்பாளராக முன்னேறியவர் எம். நடேசன்.

திரைப்பட நடிகைகள் டி.ஆர். ராஜகுமாரி, பத்மினி ஆகிய திரைப்பட நட்சத்திரங்களுக்குக் கவர்ச்சிகரமாக உடைகள் தைத்துக் கொடுத்து, பலரின் அன்புக்கு ஆளானவர். கையில் கொஞ்சம் பணம் சேர்ந்தவுடனே ஜோசப் தளியத், எப்.நாகூர் போன்றவர்களுடன் கூட்டுச் சேர்ந்து படங்கள் தயாரித்து, திரைத்துறையில் பலருக்கு அறிமுகமாகி அவர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று 'அன்பு' என்னும் படத்தைத் தயாரித்தார்.

விந்தனும் நடேசனும் சேத்துப்பட்டில் குடியிருந் தார்கள். அவர்களின் குடியிருப்பின் இடைவெளி சிறியதுதான்.

**அன்பு** திரைப்படம் பெரிதும் வெற்றி பெற்றவுடன் நடேசன், அப்பொழுது 'கல்கி' அலுவலகம் இருந்த டாக்டர் குருசாமி முதலியார் தெருவில் பெரிய வீட்டைக் கட்டி அதற்கு 'அன்பு இல்லம்' என்று பெயர் சூட்டினார். தம் குடும்பத் திருமணம் ஒன்றிற்கு, திருமதி எம்.எஸ்.சுப்புலெட்சுமி இசைக்கச்சேரியை ஏற்பாடு செய்தார்.

விந்தனும் நடேசனும் சில காலம் நெருங்கிப் பழகினார்கள். அச்சமயத்தில் நடேசன் பேசினால், சிரித்தால் விந்தன் பேசுவது போலவும், சிரிப்பது போலவும் இருக்கும்.

அன்பு படத்தைத் தொடர்ந்து '**ஆசை**' என்ற படத்தை எடுத்தார். அதில் ஜெமினி கணேசன் நடித்தார். அந்தப் படத்திற்கு இளங்கோவன் வசனம் எழுதினார். அந்தப் படம் நடேசனின் ஆசையை நிராசையாக்கிவிட்டது.

மூன்றாவதாக எம்.ஜி.ஆர். நடிக்க '**என் கடமை**' என்ற படத்தைத் தயாரித்தார். அதற்கு விந்தன் வசனம் எழுதினார். ஆனால் இடையில் ஏற்பட்ட ஏதோ ஒரு பிரச்சினையால் விந்தன் விலகிக் கொண்டார்.

'என் கடமை' என்ற படம் வெளிவந்தபோது, எம்.ஜி.ஆர். எம்.எல்.சி பதவியை இராஜிநாமா செய்தார். படமும் தியேட்டர்களிலிருந்து ராஜினாமா செய்து விட்டது!

நடேசன் 'என் கடமை' படத்தில் அடைந்த நஷ்டத்தை ஈடுகட்டும் வகையில் எம்.ஜி.ஆர். **மன்னாதி மன்னன்** என்ற படத்தில் நடித்தார்.

பின்னர் நடேசன் பழையபடி சினிமா முதலாளி ஆகி விட்டார்.

'அன்பு' படத்துக்கு நட்பு முறையில் கதை–வசனம், பாடல்களை விந்தன் எழுதியது போலவே நடிக நடிகைகளும் தொழில் நுட்பக் கலைஞர்களும் பணத்தை எதிர்பார்க்காமல் உழைத்து உதவினார்கள். **நடேசன் வளரவேண்டிய கலைஞர்!**– என்று மனதாரப் பாராட்டினார்கள்.

அன்பு படத்தின் வெற்றிக்கு எது காரணம்? கதையா, வசனமா, நடிப்பா என்று பிரித்துப் பார்க்க முடியாமல் அனைத்தும் ஒன்றாக இணைந்து வெற்றிக்கொடி நாட்டின.

## 'அன்பு' படத்தின் கதை

கணவனிடம் மனைவி அன்பு செலுத்தலாம். அண்ணனிடம் தங்கை அன்பு செலுத்தலாம். அப்பாவிடம் பிள்ளை அன்பு செலுத்தலாம். ஆனால் மூத்தாள் குழந்தைகளிடம் அன்பு செலுத்தும் சித்தியை நீங்கள் எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா?

இல்லையென்றால் இதோ இருக்கிறாள் தங்கம். அவளைப் பாருங்கள். அவள் சொல்லுவதைக் கேளுங்கள். அவளுடைய வாழ்க்கையைப் பின்பற்றுங்கள்.

உங்களுக்குத் துன்பம் இருக்காது, துயரம் இருக்காது, கஷ்டமும் இருக்காது, நஷ்டமும் இருக்காது.

ஏன்?

அன்பின் சக்தி அது!

கணவன்! அவனைப் பற்றித் தங்கள் கன்னிப் பருவத்திலே பெண்கள் காணும் கனவுகள் எத்தனை எத்தனையோ!

ஆனால் நனவிலே?

அதற்கு நேர் விரோதமாக வல்லவா அமைகிறது! அப்படி அமைந்தால் வாழ்க்கையை நரகமாக்கிக் கொள்ளவேண்டியதுதானா? அதைத் தவிர வேறு வழியே இல்லையா?

உண்டு; நிச்சயம் உண்டு. உதாரணத்துக்கு தங்கத்தைத்தான் எடுத்துக் கொள்ளுங்களேன். அவள் தன் அப்பாவின் ஸ்தானத்தில் இருக்க வேண்டிய ஸ்ரீமான் இராஜமாணிக்க முதலியாருக்கு மாலை யிட்டாள். அவருக்கு முன்பே இரண்டு குழந்தைகள். காலஞ்சென்ற முதல்மனைவி பெற்றெடுத்தவை. அவர்களில் மூத்தவள் லட்சுமி, இளையவன் செல்வம். இருவரும் குணத்தில் வட துருவமும் தென்துருவமும் போல!

அதிலும் லட்சுமி செய்யும் அட்டகாசங்களை அவள் அம்மா இருந்திருந்தால்கூட பொறுத்திருக்க மாட்டாள்.

செல்வமோ விளையாட்டுப் பிள்ளை. அந்த விளையாட்டிலேயே அவன் மாலதி என்னும் காதலியைப் பிடித்து விடுகிறான். அந்தக் காதலுக்குக் குறுக்கே வந்து சேர்கிறான் திருமலை. அவனுடைய திருவிளையாட்டால் விளையும் தீமைகள்தாம் எத்தனை...!

இத்தனைக்கும் ஈடு கொடுக்கும் தங்கத்தை எமனாவது சும்மா விட்டானா? அதுவுமில்லை. அவன் பாட்டுக்கு ஒரு நாள் திடீரென்று வந்து ஸ்ரீமான் இராஜமாணிக்க முதலியாரைக் கொண்டுபோய் விடுகிறான்.

விதவையான தங்கம் வேதனையால் துடிக்கிறாள். அவளுடன் அவள் வயிற்றிலே வளர்ந்து வந்த மூன்று மாதச் சிசுவும் துடிக்கிறது. ஒரு பாவமும் அறியாத அந்தச் சிசுவை, செல்வத்தின் சிருஷ்டி என்று ஊரார் சொல்லுகின்றனர். அதை நம்பி, மாலதி வேறு செல்வத்தைப் பாடாய்ப் படுத்துகிறாள்.

இந்த இன்னல்களையெல்லாம் கண்டு தங்கம் இடிந்து போய்விட்டாளா?

அன்பையும், அறத்தையும் பொறாமையும் பூசலும் வென்றுவிட்டதா?

இந்த அணுகுண்டு யுகத்தில் அவள் கடைப் பிடித்து வந்த அன்பின் கதி கடைசியில் என்னதான் ஆயிற்று?

திரையில் பாருங்கள்!

★ ★ ★

எப்போதும் பெண்களின் பேரில் பரிவும் பாசமும் கொண்ட எழுத்தாளரான விந்தன், 'அன்பு' கதாநாயகி தங்கம், மூத்தாள் பிள்ளையின் பேரில் காட்டும் அன்பினால் அவளுக்கு அடுக்கடுக்காக உண்டாகும் துன்பத் துயரங்களை, அவளின் உள்ளுணர்வுகளை எளிய தமிழில் வசனமாக எழுதிப் படத்திற்குச் சிறப்பு சேர்த்தார். மேலும் படத்திற்குச் சிகரமாக

அமைந்தது ஷேக்ஸ்பியரின் 'ஒத்தல்லோ' என்ற ஓரங்க நாடகம்.

மூலக்கதையைப் பிரதிபலிக்கும் வகையில் மனைவியின் மேல் கணவன் சந்தேகப்படும் காட்சியை சிவாஜி கணேசன் சிறப்பாக நடித்துக் காட்டினார். அனைத்துக்கும் மேலாக **அன்பு** படத்தில் விந்தன் எழுதியுள்ள சில பாடல்களை இன்றும் சினிமா ரசிகர்கள் பாடிக்கொண்டிருப்பது சிறப்பு அம்சமாகும்.

உதாரணத்துக்குச் சில பாடல் வரிகள் :

*'சுத்தாத இடமில்லை கேட்காத பேரில்லே*
*சோத்துக்கு வழிகாட்ட ஆளில்லே*
*செத்தபின்பு சிவலோகம் செல்ல வழிகாட்டும்*
*பித்தர்கள் ஏனிந்த நாட்டிலே''*

என்று ஆவேசமாய்ப் பாடலை ஆரம்பிக்கிறார் விந்தன்.

பசியின் கொடுமை எத்தகையது என்பதைத் தமது சொந்த வாழ்க்கையில் அனுபவித்தவர் என்பதால் இயல்பான சிந்தனை வருகிறது இவருக்கு. மேலும் சில வரிகள் :

*ஒண்ணும் புரியவில்லை தம்பி – எனக்கு*
*ஒண்ணும் புரியவில்லை தம்பி.*

*கண்ணு ரெண்டும் சுத்துது,*
*காதை அடைக்குது*

*கஞ்சி கஞ்சி என்று வயிறு*
*கெஞ்சிக் கெஞ்சிக் கேட்குது.*

*கடவுளை நம்பினேன் கற்பூரம் செலவு*
*கல்வியை நம்பினேன் காசெல்லாம் செலவு*

*மனிதனுக்கு மனிதன் மனமிரங்கவில்லை*
*மானத்தோடு வாழ மார்க்கம் ஏனோ இல்லை!*

*சாலையிலே தொழிலாளி சம்சாரம் நடக்குது*
*ஆலையிலே அவனாவி புகையாகப் போகுது*

இருபத்துநான்கு வரிகள் கொண்ட இந்த நீண்ட பாடலில் விந்தன், சமூக, சாஸ்திர, சம்பிரதாய முதலாளித்துவக் கொடுமைகள் அனைத்தையும் உணர்ச்சி பொங்க கூறியுள்ளார்.

மேலும் விந்தன் பெரிதும் மதிக்கும் உலக எழுத்தாளர் மாக்சிம் கார்க்கியின் தாய் நாவலில் வரும்— பஞ்சாலையில் உழைக்கும் தொழிலாளியின் வியர்வை ஆவியாக மாறி ஆலையில் புகையாகப் போகிறது என்னும் கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

★ ★ ★

# 7

**1954**இல் தமிழ் சினிமாவில் ‘ஒருத்திக்கு ஒருவன்’ என்னும் கருத்து பழமையானது, பத்தாம் பசலித்தனமானது என்று கருதப்பட்டதால், ‘இருவருக்கு ஒருத்தி’ என்பதே புதுமையானது என்கிற கருத்தோட்டத்தில் சில படங்கள் வெளிவந்தன.

அதுவும் பழமையானது. பிற்போக்குத்தனமானது என்று கருதிய முற்போக்குச் சிந்தனையாளர்கள் விந்தனும் டி.ஆர். ராமண்ணாவும் ‘ஒருத்திக்கு இருவர்’ என்னும் கருத்தை வலியுறுத்தும் வகையில் ‘கூண்டுக்கிளி’என்ற படத்தைத் தயாரித்தனர்.

முன்பே ‘பாலும் பாவையும்’ நாவலில் வரும் கதாநாயகி மூன்றுமுறை கெட்டுப் போகிறவள்! அவளின் கதையைத் தமிழ்சினிமா ரசிகர்கள் ஏற்கமாட்டார்கள் என்று சொன்ன விந்தனின் கருத்தை ஆதரித்த ராமண்ணாதான் கூண்டுக்கிளியைத் தயாரித்தார்.

## கூண்டுக்கிளியின் கதை

ஜீவா ஒரு தனிப்பிறவி; பச்சையாகச் சொல்லப் போனால் ஒரு பைத்தியம். அவனுக்கு மங்களாதான்

வாழ்க்கை ஜீவனாக வேண்டும். ஆனால் அவளோ தங்கராஜின் வாழ்க்கை ஜீவனாக ஆகிவிட்டாள். இது முதல் சிக்கல்.

அந்த தங்கராஜனோ ஜீவாவின் ஆருயிர் நண்பனாக இருந்துவிட்டான். இது இரண்டாவது சிக்கல்!

அவனைக் கைபிடித்த மங்களாவுக்கோ முதற்கடவுள் 'கற்பு'. இரண்டாவது கடவுள்தான் அவளைப் படைத்தவன். இது மூன்றாவது சிக்கல்!

இந்தச் சிக்கலுக்கிடையே அவள் தங்கராஜின் கூண்டுக்கிளியாகவாவது இருந்தாளா? அதுவும் இல்லை. கொஞ்சும் கிளியாக வேறு இருந்துவிட்டாள். இது நான்காவது சிக்கல்.

இந்த நான்கு சிக்கல்களோடு, விந்தனும் ராமண்ணாவும் எதிர்பாராத விதத்தில் ஐந்தாவது சிக்கலும் சேர்ந்து கொண்டது. அதுதான் எம்.ஜி.ஆரும் சிவாஜியும் சேர்ந்து நடித்தது!

தமிழ்த் திரையில் இரண்டு முன்னணி நடிகர்கள் இணைந்து நடித்தது **திருப்புமுனை** என்று பத்திரிகைகள் பாராட்டினாலும் ரசிகர்களுக்கிடையே பெரும் பரபரப்பை உண்டாக்கியது.

மேலும், இரண்டு நடிகர்களும் இரு வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். இதுவே சிக்கலுக்கு வலிமையைச் சேர்த்தது. இதன்மூலம் மாறுபட்ட அரசியல் கருத்துக்கு மதிப்பு தரும் பண்பை மறந்தனர் சினிமா ரசிகர்கள்.

'கூண்டுக்கிளி' என்ற சிறந்தபடம் தமிழகத்தின் சகல பகுதி மக்களின் பார்வைக்குப் போகும் வாய்ப்பை இழந்தது. தயாரிப்பாளர் ராமண்ணாவும் அரசியல் கிளர்ச்சிகளுக்கு ஆளாகாமல் அமை தியாக இருந்துவிட்டார்.

'அன்பு' என்ற படத்தில் இருபத்து நான்கு வரியில் ஒரு நீண்ட பாடலை எழுதிப் புகழ்பெற்ற விந்தன், கூண்டுக்கிளியிலும் இரண்டு பாடல்களை எழுதி யுள்ளார். அதில் 'கொஞ்சுங்கிளியான பெண்ணை' என்ற மிக நீண்ட பாடலும், 'பார் மகளே! பார்!' என்ற பாடலும் அடங்கும்.

இன்றும் அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பப்படும் பாடல்களில் முதல் இடத்தில் இருந்து வருகிறது.

*கொஞ்சுங் கிளியான பெண்ணைக்*
*கூண்டுக்கிளி ஆக்கிவிட்டுக்*
*கெட்டிமேளம் கொட்டுவது*
*சரியா? தப்பா?*

என்று தொடங்கும் பாடல் வரிகளூடே வாழ்க்கையின் யதார்த்தங்களை வெளிப்படுத்துகிறார் விந்தன்.

தொடரும் பாடல் வரிகள்:

*தின்னப்பழம் தந்துவிட்டு*
*தின்னாதே என்று கையைத்*
*தட்டிவிட்டுத் திட்டுவது*
*சரியா? தப்பா?*

*காதல் செய்த குற்றம் எனது*
*கண்கள் செய்த குற்றமானால்*
*கண்ணைப் படைத்த கடவுள் செய்கை*
*சரியா? தப்பா?*

இரண்டாவது பாடல் வரிகள் :

*பார் என் மகளே பார்! பார்!*
*பரந்து கிடக்கும் அன்னை பூமி*
*பரிந்துன்னை அழைக்குது*
*பார்! பார்! பார்!*

*இருந்த வீடு இரவல் வீடு*
*இருக்கப்போவது சொந்தவீடு*
*வருந்தவேண்டாம்! உருளும் உலகில்*
*இருளும் ஒளியும் இயற்கை!*

என்றவாறு பாடல் கருத்தோட்டத்துடன் தொடருகிறது.

அன்றைய திரை உலகில்,

'ஜாலிலோ ஜிம்கானா, டோலிலோ கும்கானா' என்னும் பாடல் வரிகள் சினிமா ரசிகர்களின் காதுகளில் நாராசம் போல் ஒலித்துக் கொண்டிருந்தது. அக்காலகட்டத்தில் முற்போக்குச் சிந்தனையாளரான விந்தன், படிப்பாளியும் பாமரரும் புரிந்துகொள்ளும் வகையில் எளிய தமிழில் பாடல்களை எழுதினார்.

# 8

தமிழ்த் திரை உலகில் மூன்று படங்களுக்கு வசனமும், சில பாடல்களும் எழுதிப் புகழ் பெற்ற விந்தனுக்குக் கையில் கொஞ்சம் பணம் சேர்ந்தது.

அச்சமயத்தில் விந்தன் குடியிருந்த சேத்துப்பட்டு கந்தப்பிள்ளை தெருவுக்குப் படகுக்கார்கள் பவனி வந்தன; சுற்றமும் நட்பும் சூழ வந்து 'நலன்' விசாரித்தனர்; நகைமுகம் காட்டினர். எல்லோருக்கும் ஒரே சினிமா மயக்கம்தான்.

மேலும் பத்தாண்டுப் பத்திரிகை வாழ்க்கையில் விந்தன் காணாததையெல்லாம் கண்டார்; கேட்காததை யெல்லாம் கேட்டார்; கையில் பணம் புரண்டது; **'மனிதன்'** பிறந்தான்.

'மனிதன்' பத்திரிகையில் விந்தன், தம் சினிமா அனுபவங்களை வெளிப்படுத்தும் வகையில், **'தெரு விளக்கு'** என்னும் தொடரை எழுத ஆரம்பித்தார். அந்தத் தொடரைப் படித்த பலரும் பாராட்டினார்கள். ஆனால் சினிமாத்துறையினர் எரிச்சல் அடைந்தனர்.

அக்காலத்தில் சினிமா உலகில் புகழ் பெற்ற 'லேனா செட்டியார்' அரசியல் துறையிலும் அதிகார வர்க்கத்திலும் உள்ளவர்களுக்கு நண்பராகவும், நாகரிக 'விருந்து' படைப்பவராகவும் இருந்தவர்.

விசாலமான உள்ளம் படைத்த 'லேனா' செட்டியார் பிறருக்கு உதவி செய்வதிலேயே நோக்கமாக இருந்தவர்; மானம் மரியாதைகளைப் பற்றிக் கவலைப்படாமல் நடிகை – நடிகர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் போஷகராக இருந்தவர். ஒரு முறை உடுமலை நாராயணகவி அவர்கள் 'லேனா'வை பற்றிச் சொல்ல வந்தபோது 'லேனா' கொடுத்த பேனா!' என்று புகழ் பாடினார்.

இவ்வாறு சினிமா உலகில் பலருக்கு நண்பராக இருந்தவர் 'தெருவிளக்கு'த் தொடர் தாம் சம்பந்தப்பட்ட கதை என்று விந்தனை நேரில் அழைத்து, மிரட்டினார். எழுத்தைப் பொறுத்த வரையில் எவருக்கும் அஞ்சாத விந்தன், ''லேனா' மிரட்டலைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் 'தெருவிளக்கு'த் தொடரைத் தொடர்ந்து வெளியிட்டார். மனிதன் நின்று விட்டதால் அத்துடன் தெருவிளக்கும் அணைந்து போயிற்று.

'மனிதன்' மறைவு விந்தனுக்கு நேர்ந்த பெரிய இழப்பு. இலக்கிய உலகிற்கு ஏற்பட்ட மகத்தான சோதனை. மனிதனின் இழப்பைக் குறித்து விந்தன் கூறுகிறார் :

**''சுதந்திர எழுத்தாளனாகச் சுடர்விட முயன்ற என்னை என் சுயமரியாதை உணர்வுகள் தடுத்ததால் சொந்தமாக ஒரு பத்திரிகையே நடத்திப் பார்த்து விடுவோமே என்று 1954 ஆகஸ்டில் மனிதனை ஆரம்பித்தோம், அதற்கு மக்கள் ஆதரவு அமோகமாக இருந்தும் விற்பனையாளர்கள் செய்த சத்திய சோதனையாலும் அந்தச் சத்தியசோதனையிலிருந்து**

அவ்வப்போது மீள்வதற்கு வேண்டிய பொருளாதார வசதியோ, மீட்பதற்கு நண்பர்களோ இல்லாததாலும் அதுவும் பிறந்த ஓராண்டு காலத்துக்குள்ளேயே பிராணனை விட்டுவிட்டது. இதனால் எனக்கு நேர்ந்த இழப்பு மிகப் பெரியதாகும்.

★ ★ ★

'கல்கி'யில் விந்தன் எழுதிய கதைகளைப் படித்த பேராசிரியர் கல்கி, விந்தனைத் தனியாக அழைத்து. ''ஏம்பா! நம் பத்திரிகையைப் பெரும்பாலும் பெண்கள்தான் படிக்கிறாங்க. அதிலும் மாதத்திலே மூன்றுநாள் ஒதுங்கி யிருக்கிறார்களே, அவர்கள்தான் அதிகம் படிக்கிறாங்க. அவங்களுக்குப் போய் நீ புரட்சிகரமான கதையெல்லாம் எழுதுறியே'' என்றாராம்.

அதை மனத்தில் வைத்துக் கொண்டு விந்தன், **கண் திறக்குமா?** நாவலில் எழுதுகிறார் :

''உமக்கு ஏதேனும் இலட்சியம் இருந்தால் அதை யெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு நடுத்தர வர்க்கத்துக்காகப் பத்திரிகை நடத்தும். ஆண்களுக்காகப் பத்திரிகை நடத்தாதீர்; பெண்களுக் காக நடத்தும்.

அவர்கள் மாதத்தில் மூன்று நாட்கள் வெளியில் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதால் அவர்கள் உம்முடைய பத்திரிகையை அவசியம் படிப்பார்கள். அவர்கள் வாழ்க்கையில் இல்லாத காதல்கதைகளை

நிறையப் போடும். ஆயிரந்தடவை வந்தவையாக இருந்தாலும் பரவாயில்லை. ஆயிரத்தோராவது தடவையாக நீர் போடலாம்.

''இன்னும் ஏதேனும் வேடிக்கையாக எழுதும். வாசகர்கள் குழந்தைப் பிராயத்தில் இருப்பதால் விரும்பி படிப்பார்கள். முடிந்தால் பகுத்தறிவுப் போட்டி நடத்தும். தரித்திரம் பிடுங்கித் தின்பதால் பேராசை வளர்ந்துவரும் தமிழ்நாட்டில் அதற்குப் பேராதரவு இருக்கும்.

அடிக்கும் கொள்ளையையும் சட்ட ரீதியாகவும் அடிக்கலாம்; பண்பாட்டைப் பற்றியும் பேசலாம்.

அடுத்து, இருக்கவே இருக்கிறது அரசியல். அதையும் ஒரு கை பாரும். எடுத்ததற்கெல்லாம் ஆமாம் போட்டு எழுதும். நடுநடுவே உம்மைப்பற்றியும் கொஞ்சம் பெருமையாக, சந்தேகமில்லாமல் சொல்லிக் கொள்ளும்.''

அன்றைய பத்திரிகை உலகைக் கிண்டலும் கேலியும் சேர எழுதிக் காட்டினார் விந்தன். அவரின் கொள்கைப்படியே 'மனிதன்' பத்திரிகையை ஆரம்பித்து பெரும் இழப்புக்கு ஆளானதோடு சிலரின் விரோதங்களையும் அவர் தேடிக்கொண்டார்.

**மனிதன்** பத்திரிகை நடந்து கொண்டிருந்த போதே விந்தனுக்கு சினிமா வேலைகள் இருக்கத்தான் செய்தன. மாடர்ன் தியேட்டர்ஸ் '**நம்பாதே**' என்ற படத்துக்கு வசனம் எழுத விந்தனை அழைத்தார்கள்.

சில மாதங்கள் வைத்திருந்து திருப்பி அனுப்பி விட்டார்கள் பணத்துடன்.

நான் முன்பே சொன்னபடி அக்காலத்தில் ஒரு படத்துக்குப் பலபேர் கதை - வசனம் எழுதுவார்கள். கடைசியில் புகழ்பெற்ற எழுத்தாளரின் பெயர் இடம் பெறும். இந்தக் **கதை பண்ணும் கலாச்சாரத்து**க்கு எத்தனையோ எழுத்தாளர்கள் பலியானது உண்டு. அதில் விந்தனும் ஒருவர்.

கல்கி பத்திரிகையில் பத்தாண்டு காலம் பணியாற்றிய விந்தன் வேறு பத்திரிகைகளுடன் தொடர்போ அதன் ஆசிரியருடன் நட்போ வைத்துக் கொண்டதில்லை. அவர் தொடர்பு வைத்திருந்த ஒரே பத்திரிகை 'பொன்னி'. அதுவும் அப்பொழுது இல்லை.

அதைவிட சோதனை, பேராசிரியர் கல்கியும் அப்பொழுது இல்லை. அவர் இருந்திருந்தால் விந்தன் வாழ்க்கையே மாறியிருக்கும். அந்த அளவுக்கு விந்தனின் குணத்தையும் எழுத்தின் தன்மையையும் நன்கு அறிந்தவர்; வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்தவர் கல்கி.

இத்தகைய சூழலில் விந்தன் போன்ற எழுத்தாளர் களின் கதைகளை 'எவிமேட்டர்' என்று ஒதுக்கிவிட்டு 'லைட் மேட்டர்' கதைகளை வெளியிட்டன பத்திரிகைகள்.

விந்தன் சினிமா மயக்கத்தில் சிறுகதை எழுதுவதை மறந்துவிட்டார்.

இச்சமயத்தில் ஏ.எல்.எஸ்.நிறுவனத்தார் 'திருடர்கள் ஜாக்கிரதை' என்ற படத்துக்கு வசனம் எழுத விந்தனை அழைத்தார்கள். ஏற்கனவே 'நம்பாதே' என்ற படத்துக்கு வசனம் எழுத நம்பிக்கையோடு சேலம் சென்றவர். அந்த நம்பிக்கை சிதைந்து சென்னை திரும்பியவர். அதை மனத்தில் வைத்துக் கொண்டு 'திருடர்கள் ஜாக்கிரதை' என்ற தலைப்பே அச்ச மூட்டுவதாக இருந்ததால், வசனம் எழுத மறுத்து விட்டார்.

# 9

1955இல் ஆர். ஆர். பிக்சர்ஸ் தயாரித்த 'குலேபகாவலி' படத்தில் ஒரு பாடலை விந்தன் எழுதினார். அப் பாடல்,

*மயக்கும் மாலைப் பொழுதே நீ, போ போ*
*இனிக்கும் இன்ப இரவே நீ வா, வா*
*இன்னலைத் தீர்க்க வா!*

என்று தொடங்கும். இப்பாடலை ஏ.எம்.ராஜாவும் ஜிக்கியும் இனிமையாகப் பாட எம்.ஜி.ஆரும், ஜி. வரலட்சுமியும் வாய் அசைக்கின்றனர்.

விந்தனின் இப் பாடலுக்கு இலக்கிய வாதி களிடையேயும், சினிமா ரசிகர்களிடையேயும் பெரும் பாராட்டுகள் கிடைத்தன. இப்பாடல் திரையிலும் ஒலிப்பதிவிலும் தஞ்சை இராமையாதாஸ் பெயரில் வெளிவந்தன.

திரை உலகில் அன்றும் இன்றும் புகழ்பெற்ற பல பாடல்கள் எழுதியவரின் பெயரால் வெளிவராமல் புகழ்பெற்ற கவிஞர்களின் பெயரால் வெளிவருவது வருத்தத்துக்குரியது.

1982 ஆம் ஆண்டு நான் விந்தனின் வாழ்க்கை வரலாற்றை எழுதஆரம்பித்தபோது ஏவி.எம்.மின்

துணை நிறுவனமான எச்.எம்.வி.(ஹிஸ் மாஸ்டர் வாய்ஸ்) அதன் நிர்வாகி கண்ணன் என்பவரைச் சந்தித்து ஒலிப்பதிவில் விந்தன் பெயர் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அதற்கு அவர் சம்மதித்தாரே தவிர, தவறு திருத்தப்படவில்லை. தொடர்ந்து வானொலியில் அந்தப் பாடலை எழுதியவர் தஞ்சை இராமையாதாஸ் என்றே அறிவிக்கப்படுகிறது.

1980க்கும் 1990க்கும் இடைப்பட்ட காலத்தில் ‘பொம்மை’ இதழில் வைரமுத்து திரைப்பட லாசிரியர்கள் பற்றித் தொடர் கட்டுரை ஒன்று எழுதி வந்தார்.

தஞ்சை இராமையாதாஸ் பற்றி எழுதும்போது, மயக்கும் மாலைப்பொழுதே நீ போ, போ!’ என்னும் இலக்கியத் தரமான பாடல்களையும் எழுதியிருக்கிறார் என்று குறிப்பிட்டுள்ளார். அதற்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் ‘பொம்மை’ இதழுக்குக் கடிதம் ஒன்று எழுதினேன். எனக்கு ஆதரவாக பெங்களூரில் இருந்து டி. எ. லலிதா என்பவரும் கடிதம் எழுதினார்.

‘‘வானொலியில் கேட்டு, நான் பிழை செய்து விட்டேன், உண்மையில் ‘மயக்கும் மாலைப் பொழுதே நீ போ! போ!’ என்ற பாடலை எழுதியவர் விந்தன் தான் என்பதை பின்னர் தெரிந்து கொண்டேன்!’’ என்று வைரமுத்து எனக்குக் கடிதம் எழுதினார். ஆனால் அந்தக் கடிதத்தைப் பத்திரிகைக்கு அனுப்பி உலகிற்குச் சொல்லத் தயங்கியது ஏன்?

வைரமுத்து போன்ற திரைப்படத்துறைக் கவிஞர்களால் தான் இன்னும் அப்பாடல் தஞ்சை இராமையாதாஸ் என்னும் பெயராலேயே ஒலிபரப்பப் படுகிறது.

★ ★ ★

**1954** முதல் 1958 வரையில் இந்த நான்கு ஆண்டுகளில் விந்தனின் சினிமா மயக்கம் தெளிய வில்லை. சில நண்பர்களைக் கூட்டு சேர்த்துக் கொண்டு 'மல்லிகா புரொடக்ஷன்' என்ற பெயரில் சினிமா கம்பெனியை ஆரம்பித்து, சில பாடல்களைப் பதிவு செய்தார்.

படத்தில் நடிப்பதற்கு சிவாஜி கணேசனையும் பத்மினியையும் ஒப்பந்தம் செய்தார்கள். ஆனால் எதிர்பாராத வகையில் அந்த நடிகையும் நடிகரும் அமெரிக்காவுக்குப் போனதால், அத்துடன் விந்தனின் சினிமா கம்பெனி படுத்துவிட்டது.

சொந்தமாகப் பத்திரிகை, சினிமா கம்பெனி என்று ஆரம்பித்து தோல்வியும் பணம் நஷ்டமும் அடைந்தபோதும், விந்தன் சோர்ந்து போகாமல் 'புத்தகப் பூங்கா' என்ற பெயரில் ஒரு பதிப்பகத்தை ஆரம்பித்து, பிரபல சினிமா எழுத்தாளர் இளங்கோவன் (தினமணி மலர் 1936) எழுதிய **சாவே வா!** என்ற கட்டுரையைப் புத்தகமாக வெளியிட்டார்.

எல்லோரும் விந்தனை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். எல்லோரும் எதை ஆரம்பித்தாலும்

மங்களகரமாக இருக்கவேண்டும் என்றுதான் எதிர்பார்ப்பார்கள். ஆனால் விந்தனோ முதன்முதலில் வெளியிட்ட புத்தகத்தின் தலைப்பை 'சாவே வா!' என்று அமங்கலமாகப் பெயர் வைத்திருக்கிறாரே என்று ஆச்சரியமடைந்தார்கள்; முகம் சுளித்தார்கள்.

முற்போக்குச் சிந்தனையாளரான விந்தன் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. தொடர்ந்து க.நா.சு., சாண்டில்யன் ஆகியோரின் புத்தகங்களை வெளியிட்டதோடு, ஜெயகாந்தன் எழுதிய சிறு கதைகளைத் தொகுத்து '**ஒரு பிடி சோறு**' என்று வெளி யிட்டார். அந்தத் தொகுப்புதான் ஜெய காந்தனை ஆனந்த விகடனுக்கு அடையாளம் காட்டியது.

சமீபத்தில் ஜெயகாந்தன் **குமுதம்** பத்திரிகையில், 'சகோதர எழுத்தாளர் விந்தன் தம் சொந்த செலவில் என் முதல் சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டார்' என்று பெருமையுடன் கூறுகிறார்.

இதன் மூலம் **புத்தகப்பூங்கா**வில் பெரும்பணம் நஷ்டத்தைக் கண்டபோதிலும் விந்தன் எண்ணம் வெற்றி அடைந்த தென்று கருதலாம்.

★ ★ ★

# 10

1958இல் ஜனதா பிக்சர்ஸ் 'மணமாலை' என்ற படத்தைத் தயாரித்தது. மூலக்கதை சரத் சந்திரர்; இயக்கம் சி.எச்.நாராயணமூர்த்தி; வசனம் விந்தன்.

**இதுதான் கதை :**

பழனியில் ஏழை சுப்பிரமணிய முதலியார் மனைவியிழந்தவர். திடீரென்று அவர் இறந்துவிட நிராதரவான அவர் மகள் லலிதாவைத் தாய்மாமன் குருசாமி முதலியார் சென்னைக்கு அழைத்துச் செல்லுகிறார்.

அவருடைய பக்கத்துவீட்டுப் பணக்கார சுகானந்த முதலியார் இளையமகன் சேகரிடம் லலிதா ஓய்வு நேரத்தில் கல்விகற்று வருகிறாள். சேகரும் அவன் தாய் மீனாட்சியும் லலிதாவுக்கு ஆதரவு தருகின்றனர். மங்கைப் பருவம் அடைந்த லலிதா, சேகரிடம் பயத்துடனும் மரியாதையுடனும் உறவாடுகிறாள்.

குருசாமி முதலியார் தன்வீட்டை சுகானந்த முதலியாரிடம் அடகு வைக்க, கடனை திருப்பித் தராததால் அவரைக் கொடுமைப்படுத்துகிறார்.

எதிர்வீட்டு மாசிலாமணியின் மனைவி மனோரமாவும் அவள் மகள் ராதாவும் லலிதாவின்

தோழிகள். பணக்கார வாலிபனும் மனோரமாவின் சகோதரனுமான குமார், தாயம் ஆடவரும் லலிதாவின் அழகில் மனத்தைப் பறி கொடுக்கிறான். குமாரும் லலிதாவும் பழகுவதைப் பொறாமைக் கண்ணோடு கண்ட சேகர் அவளைக் கண்டிக்கிறான்.

கடன் தொல்லையால் அல்லலுறும் குருசாமி முதலியாருக்குச் சமய சஞ்சீவி போல் உதவிபுரிகிறான் குமார். குமாரின் மீதுள்ள பொறாமை சேகர்–லலிதாவிடம் மாறாத காதலுணர்ச்சி தோன்றக் காரணமாகிறது.

குமாருடன் லலிதா நெருங்கிப் பழகுவதைக் கண்டபோதுதான், தான் லலிதா மீது கொண்ட காதலை உணர்கிறான் சேகர்.

ஒரு நாள் குருசாமியின் மகள் சிறுமி அனுராதா பொம்மைக் கல்யாணத்திற்காக வைத்திருந்த மாலையை எடுத்து வேடிக்கையாக லலிதா சேகரின் கழுத்தில் போட்டுவிட, சேகரும் அதே மாலையை அவளுக்குத் திருப்பி அணிவிக்கிறான்.

ஒரு ஆசைக்குப் பெண் மாலை யிடுவதன் உண்மை அர்த்தத்தை உணர்ந்த லலிதா திடுக்கிட, சேகர், அவளிடம் அவர்களிருவரும் அன்றுதான் கணவன் மனைவி ஆகிவிட்டதையும், தாய், தந்தையரின் சம்மதம் பெற்று அவளை உலகமறிய மணப்பதாகக் கூறிவிட்டுக் கொடைக்கானல் சென்று விடுகிறான். லலிதாவும் அவனையே கணவனாக வரிக்கிறாள்.

குமாரின் உதவியால் குருசாமி முதலியார் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடப் பேராசையும்

பொறாமையும் கொண்ட சுகானந்த முதலியார் பல வகையிலும் குருசாமி முதலியாருக்கு இன்னல்கள் செய்வதுடன் அவரைச் சாதிப் பிரஷ்டமும் செய்கிறார். இவர்கள் இரு வீடுகளுக்குமிடையே இருந்த வழியும் அடைக்கப்படுகிறது.

குமார், குருசாமி முதலியாரையும், குடும்பத்தினரையும் ஊட்டிக்கு அழைத்துச் செல்லுகிறான். உடைந்த உள்ளத்துடன் லலிதாவும் ஊட்டிக்குச் செல்லுகிறாள். ஊர் திரும்பிய சேகர், லலிதா தனக்குத் துரோகமிழைத்துவிட்டதாக எண்ணி வருந்துகிறான். இடையில் சுகானந்த முதலியார் காலமாகிறார். ஊட்டியில் குருசாமி முதலியார் உடல்நிலையும் மோசமாக, அவர் இறப்பதற்கு முன் குமார் லலிதாவை தான் மணந்து குருசாமி முதலியாரின் குடும்பத்தைக் காப்பாற்றுவதாக உறுதியளிக்கிறான் .

குருசாமிக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி லலிதாவை மணக்க எண்ணிய குமாரிடம் லலிதா, அந்தத் திருமணத்திற்கு தான் ஒப்ப முடியாதென்றும், தான் முன்னரே மணமானவள் என்றும் தன் கணவன் தன்னை அழைத்துச் செல்லும்வரையில் காத்திருக்க வேண்டியவள் என்றும் உறுதியாகக் கூறுகிறாள். தன் கணவன் யார் என்பதையும் கூற மறுக்கிறாள். இதனால் மனம் உடைந்த குமார் கடைசி நேரத்தில் மாலதியை மணந்து கொள்ளுகிறான்.

சென்னையிலிருக்கும் சேகர், லலிதாவுக்கும் குமாருக்கும் திருமணம் என்று தாய் மூலம் கேள்வியுற்று மனம் வருந்துகிறான். தன் தாயின் விருப்பப்படியே வேறொரு பெண்ணை மணம் செய்து கொள்ளச் சம்மதிக்கிறான். திருமணத்திற்கு

நாளும் குறிக்கப்படுகிறது. திருமணப்பத்திரிகையைக் கண்ட குமார் லலிதாவுடனும் மாலதியுடனும் சென்னைக்கு வருகிறான். மணக் கோலத்துடன் சேகரைக் கலங்கிய கண்களுடன் லலிதா சந்திக்கிறாள்.

பின்பு...?

இக்கதை ஏறக்குறைய 'வாழப்பிறந்தவள்' கதை போல் இல்லை? இரண்டும் வேற்றுமொழிக் கதைகள். எனினும் தமிழ்நாட்டுக் குடும்பங்களில் நடை பெறும் நிகழ்ச்சிகளைக் கொண்டது. இக் கதைக்கு வழக்கம் போல் சிறப்பாக வசனம் எழுதி யிருந்தார் விந்தன். ஜெமினி கணேசனும் சாவித்திரியும் இணைந்து நடித்தனர். எனினும் படம் வெற்றி பெறவில்லை.

★ ★ ★

பேராசிரியர் கல்கி எழுதிய 'பார்த்திபன் கனவு' நாவலை அக்காலத்தில் படிக்காத இளைஞர்களே இல்லையென்று சொல்லலாம். ஏன் இலக்கியவாதிகள் கூட அந்நாவலை விழுந்து விழுந்து படித்தார்கள் என்றால் மிகையாகாது.

அப்படிப் படித்த, இளைஞரான கோவிந்தராசன், 'ஜூபிலி பிக்சர்ஸ்' என்ற சினிமா கம்பெனியை ஆரம்பித்து கல்கிக்கு நெருக்கமாக இருந்த விந்தன், மணியம் ஆகியோரைக் கொண்டு கல்கியின் 'பார்த்திபன் கனவு' நாவலைப் பிரமாண்டமான முறையில் அதிகப் பணச்செலவில் திரைக் காவியமாகப் படைக்கக் கனவு கண்டார்.

அவர் கண்ட கனவு பொய்யாய்ப், புலம்பலாய்ப் போய்விட்டது.

அக்காலத்தில் சினிமாத் துறையில் புகழ்பெற்ற தொழில்நுட்பக் கலைஞர்கள், நட்சத்திர நடிகை-நடிகர்கள் ஆகியோரின் உதவியாலும் உழைப்பாலும் உருவான பார்த்திபன் கனவு தோல்வி அடைந்தது எப்படி? என்னே ரசிகர்களின் ரசனை?

ஜமீன் பரம்பரையில் வந்த கோவிந்தராஜன் பெரும் பணத்தைச் செலவழித்துத் தோல்வி கண்டு துவண்டு போனார். அடுத்து, சில படங்களைக் குறைந்த செலவில் எடுத்து மீண்டும் தோல்வி கண்டு மனம் உடைந்து மரணம் அடைந்தார். எனினும் பேராசிரியர் கல்கியின் 'பார்த்திபன் கனவு' நாவலைத் திரைப்படமாகத் தயாரித்த பெருமை கோவிந்த ராஜனுக்கு உண்டு. இன்றும் அந்தப் படத்தின் சிறப்புகள் பேசப்படுகின்றன.

பேராசிரியர் கல்கி எழுதிய பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம் ஆகிய நாவல்களைப் படித்துப் பெரிதும் பாராட்டிய விந்தன், அந்த நாவல்களில் வரும் பாத்திரங்களை அற்புதமாகப் படைத்ததற்காகப் பேராசிரியர் கல்கிக்குச் சிலை அமைக்க வேண்டும் என்று 1946இல் அவருடைய முதல் சிறுகதைத் தொகுப்பான 'முல்லைக்கொடியாள்' என்ற புத்தகத்தின் பின்னுரையில் எழுதினார்.

இன்று தமிழகத்தின் எல்லா மக்களும் மூன்று தலைமுறைகளாகத் தொடர்ந்து படித்துக்கொண்டிருக்கிறார்கள். கல்கியின் எழுத்துக்களை. அதன்மூலம்

பேராசிரியர் கல்கி அனைவரின் மனத்திலும் சிலையாக அமைந்து விட்டார் என்றே நம்பலாம்!

**இதுதான் கதை :**

தமிழ் இலக்கிய உலகில் ஒரு மாபெரும் மறுமலர்ச்சியை எழுப்பி இலக்கிய உலகிலே பல சாதனைகளைப் புரிந்தவர் கல்கி அவர்கள். அவரது பேனாவிலே வடித்த பார்த்திபன் கனவு தமிழரின் வீரம், பண்பு, கலாசாரம் இவற்றின் பிரதிபலிப்பாக அமைந்திருக்கிறது. எழுத்துக்கு எழுத்து கதாசிரியரின் கருத்தைப் பின்பற்றி இப்படம் எடுக்கப்பட்டிருக்கிறது.

இது ஒரு திரைக்காவியமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வள்ளுவரின் குறளையும் கரிகாலச் சக்கரவர்த்தியின் வாளையும்தான் விக்கிரமனுக்குச் செல்வமாக விட்டுச் சென்றான்.

பல்லவப் பேரரசின் அடிமைத்தளையிலிருந்து சோழநாடு விடுபட்டு மகோன்னதமாக விளங்க வேண்டும் என்று கனவு கண்டான் பார்த்திப மகாராஜா (அசோகன்).

நாட்டுப் பற்றைச் சுயநலத்திற்கு இரையாக்கி விட்டு தன்னை வளர்த்த சோழ நாட்டுக்கே துரோகியாகி தன் தீவினையால் மடிந்தான் மாரப்பன் (பாலையா)

ஒவ்வொரு மூச்சிலும் சோழநாட்டின் நலனையே பேணித் தன் உயிரையும் மதிக்காமல் உழைத்த ராஜ விசுவாசி படகோட்டி பொன்னன். (எஸ்.வி.சுப்பையா)

யார் இந்தச் சிவனடியார்? என்ற கேள்வியை ஒவ்வொருவரிடமும் எழுப்பிவிட்டுத்தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றிய இணையற்ற கோமான். (ரங்காராவ்)

ஒற்றனாக வந்து விக்கிரமனைக் காப்பாற்றிய தன் தந்தையின் செயல் குறித்து மகிழும் குந்தவி, தன் சகோதரனின் ஆணைப்படி சதிகாரன் மாரப்பனிடம் விக்கிரமனை ஒப்படைக்கும்போது வருந்துகிறாள். கபால பைரவர் மாரப்பன் சூழ்ச்சி வெளியாகி சிவனடியார் யார் என்பதும் தெரிகிறது.

★ ★ ★

இந்தப் படத்துக்கு விந்தன் எழுதிய வசனங்களில் சில பகுதிகள்:

**ராஜவிசுவாசிகள்**

சோழ நாட்டின் தேசபக்தச் சிகாமணிகளுள் குறிப்பிடத்தக்கவன் பொன்னன். அவன் ராஜகுலத் தோரின் படகோட்டி. அவன் மனைவி வள்ளி. அவள் ரொம்பவும் துடுக்குக்காரி. ஆனால் அவ்வளவும் வெள்ளையுள்ளம் கொண்டவள்.

பொன்னன் காவிரியில் படகை நிறுத்திப் படிக் கரையேறித் தன் குடிசைக்குள் நுழைகிறான்.

*பொன் :* அடி வள்ளி! பொண்ணு வாசனை ஆளையே இழுக்குதே. இன்னும் எத்தனை நாளைக்கு உன் கையால் கம்பு அடையும் கீரைக்குழம்பும் சாப்பிட எனக்குக் கொடுத்து வெச்சிருக்கோ, தெரியலே.

*வள்:* ஒரு நாளைப்போல நீயும் இப்படித்தான் சொல்லி கிட்டிருக்கே. இன்னொரு தடவை அப்படிச் சொன்னே, இந்த அடுப்பை வெட்டிக் காவிரியில் போட்டுடுவேன்! ஆமாம்.

*பொன்:* விளையாட்டுக்குச் சொல்லலே வள்ளி! நேத்து மகாராஜாவும் மகாராணியும் பேசிக் கிட்டிருந்ததைக் கேட்டேன். யுத்தம் வரத்தான் போகுதாம்.

*வள்:* வந்தா உனக்கென்னன்னு கேக்கிறேன்? உன்னை யாரு யுத்தத்துக்கு அழைக்கிறாங்க? உன் பாட்டுக்குப் படகோட்டிக்கிட்டிருக்க வேண்டியது தானே!

*பொன் :* அதுதான் இல்ல! மகாராஜா கால்லே விழுந்து கேட்டுக்கப்போறேன், என்னையும் யுத்தத்துக்கு அழைச்சிகிட்டுப் போகச் சொல்லி...

*வள்ளி:* நானும் உன் கால்லே விழுந்து கேட்கப் போறேன். என்னையும் யுத்தத்துக்கு அழைச்சுக் கிட்டுப் போகச் சொல்லி... உனக்கு அது பிடிக்க லேன்னா இப்படியாச்சம் செய். கல்யாணத்துக்கு முந்தி காவிரியாத்தோடு போனவளைக் கரை சேர்த்தே பாரு...

மறுபடியும் அந்தக் காவேரியாத்திலே என்னைத் தள்ளிவிட்டுப் போய்விடு...

இந்தச் சமயத்தில் குதிரை வரும் சத்தம் கேட்க, அதைக் கேட்டபடி வெளியே வருகிறான் பொன்னன். பல்லவத் தூதர்கள் செல்வதறிந்து வள்ளியுடன் உறையூருக்குக் கிளம்புகிறான்.

போ, வெளியே!

சோழ மண்டலாதிபதி பார்த்திப மகாராஜாவின் முன் பல்லவத் தூதர்கள் நிற்கிறார்கள்.

*பார் :* யார் நீங்க?

*பல் :* திரிலோகச் சக்கரவர்த்தி, காஞ்சி மண்டலாதிபதி, சத்துரு சம்ஹாரி, நரசிம்ம வர்ம பல்லவராயருடைய தூதன் நான்.

*விதூஷகன்:* நிறுத்தும்! எந்தத் திரிலோகத்துச் சக்கரவர்த்தி? அதல சுதல பாதாளமா? அல்லது இந்திரலோக, சந்திரலோக, எம லோகமா?

*தூத :* அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது...! தங்கள் பாட்டனார் காலம் முதல் ஆண்டுதோறும் கட்டி வந்த கப்பத்தைச் சென்ற ஆறு ஆண்டுகளாகத் தாங்கள் கட்டவில்லையாம். அதற்கு முகாந்திரம் கேட்டு வரும்படி எங்கள் சக்கரவர்த்தியின் கட்டளை.

*பார்:* முகாந்திரமாம்... முகாந்திரம்! பாட்டனார் அடிமையாயிருந்ததற்காக, நானும் அடிமையாக இருக்க வேண்டுமா? அடிமைத்தனம் என் பரம்பரை சொத்து அல்ல. தூதரே... உங்கள்

சக்கரவர்த்தி கேட்டிருக்கும் முகாந்திரத்தைப் போர் முனையிலே தெரிவிப்பதாகச் சொல்லும்.

*தூத:* அப்படியானால் யுத்தத்தை என்று, எந்த இடத்தில் ஆரம்பிக்கலாம் என்பதையும் தங்களையே தெரிவிக்கச் சொன்னார்கள்.

*பார் :* வரப்போகும் புரட்டாசிப் பௌர்ணமியில் வெண்ணாற்றங்கரையில் சந்திப்போமென்று சொல்.

*எல் :* ஜெய விஜயீ பவ... ஜெய விஜயீ பவ... ஜெய விஜயீபவ...ஜெய விஜயீபவ!

*பார் :* மாரப்பபூபதி! இந்த சமயத்திலாவது உன்னிடம் நான் அதைச் சொல்லிவிட வேண்டும்... ஆமாம் சொல்லிவிடத்தான் வேண்டும்.

தேவி! என்னாலல்லவா சாம்ராஜ்யத்துக்குச் சக்கரவர்த்தினியா யிருக்க வேண்டிய உனக்கு சாதாரண சிற்றரசனுக்கு சிற்றரசியாயிருக்க வேண்டியநிலை ஏற்பட்டுவிட்டது?

என்னாலல்லவா சாம்ராஜ்யத்துக்கு சக்கரவர்த்தியாயிருக்க வேண்டிய உன் மகனுக்கு மாற்றானுக்கு கப்பம் கட்டும் மன்னனாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது?

இதை நினைக்கும் போதெல்லாம் என் நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது தேவி! என் நெஞ்சு வெடித்து விடும் போலிருக்கிறது.

*அரு:* மன்னித்துக் கொள்ளுங்கள் ஸ்வாமி. வேறு எந்த சாம்ராஜ்யத்தையும் நான் விரும்ப வில்லை.

*பா :* இதோ பார். இந்தப் பெட்டிக்குள்ளே என்ன இருக்கிறது, என்ன இருக்கிறது என்று நீ என்னைப் பல தடவைக் கேட்டிருக்கிறாய்.

மிகப்பிரம்மாண்ட சைன்னியம் கொண்ட பல்லவ சக்கரவர்த்தியை எதிர்த்து வெற்றி கொள்ள முடியாது என்று அறிந்துகூட, மானம் பெரிதென எண்ணிப் போருக்குக் கிளம்பத் தயாராகும் பார்த்திப சோழ மகாராஜா, தன் பட்ட மகிஷி அருள்மொழி தேவியிடம் மனம் விட்டுப் பேசி, வேண்டுகோளும் விடுக்கிறார்.

*பார் :* தேவி, எந்த நரசிம்ம சக்கரவர்த்தி ஒரு காலத்தில் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று இருந்தாரோ அந்த சக்கரவர்த்தியுடன் நாளை நான் யுத்தம் செய்யப் போகிறேன்.

அவருக்காக அன்று நீ உன் காதலைத் தியாகம் செய்ய விரும்பவில்லை. இன்று நான் என் மானத்தைத் தியாகம் செய்ய விரும்பவில்லை. இருவருக்கும் உள்ள வித்தியாசம் இதுதான்.

ஆனால் ஒரு எண்ணம், ஒரே ஒரு எண்ணம் உன்னைக் கல்யாணம் செய்து கொண்ட காலத்திலிருந்து என்னை உறுத்திக் கொண்டே இருக்கிறது. என் உள்ளத்தே அரித்துக்கொண்டே யிருக்கிறது.

மாரப்பன் ஏதோ ஆழ்ந்த யோசனையிலிருந்து விடுபட்டுச் சோர்ந்த முகத்துடன் நிற்கிறான்.

*பார்:* சுதந்திரம் நமது பிறப்புரிமை. அதைச் சோர்வின்றிக் காப்பது நமது கடமை. தினவெடுத்த தோள்களுக்கும் துருப்பிடித்த வாள்களுக்கும் வேலை வந்துவிட்டது. படை கிளம்பட்டும். பல்லவரின் ரத்தத்தால் சோழரின் அவமானம் துடைக்கப்படட்டும். மாரப்பா புறப்படு... வெற்றி அல்லது வீர சொர்க்கம்.

*மார:* மன்னிக்க வேண்டும். தெரிந்து அடையப் போகும் தோல்வியைத் தெரியாமல் வீர சொர்க்கம் என்று நம்ப நான் தயாராயில்லை.

*பார் :* மாரப்பா... நீயா இப்படிச் சொல்கிறாய்?

*மார :* ஆம்... அடிமையா யிருந்தாலும் அண்ணன் அரசராயிருக்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். காவேரியிலிருந்து கோதாவரி வரை பரந்து கிடக்கும் பல்லவ சாம்ராஜ்யம் எங்கே? கையகலமுள்ள சோழ நாடு எங்கே?

*பார்:* ஆ! என்ன தைரியம் உனக்கு? எனக்கு முன்னால் நம் தாய்நாட்டையா பழிக்கிறாய? உன்னைப் போன்ற சேனாதிபதி எனக்குத் தேவை யில்லை. போ. உடனே போய்விடு. இன்றி லிருந்து நானே இந்நாட்டின் சேனாபதி, போ... போய்விடு உடனே! என் கண் முன் நில்லாதே.

வாளை உருவ மாரப்பபூபதி வாளைக் கழற்றி வைத்துவிட்டு வெளியேறுகிறான்.

வீரபத்திர ஆசாரியின் பேத்திதான் வள்ளி. அவர் ஒரு வீரர். ஜோசியர் வள்ளியை அங்கே விட்டுவிட்டுப் பார்த்திப மகாராஜாவைப் பேட்டி காணச் செல்கிறான் பொன்னன். பதவியிழந்த மாரப்பபூபதி ஜோசியம் கேட்க வீரபத்திரரிடம் வருகிறான். சண்டையில் ஒரு பக்கத்துச் சைனியம் அழியும் என்கிறார் அவர். மகிழ்கிறான் அவன்.

பார்த்திபன் வேண்டுகோள்:

நானும் காலம் வரும்போது சொல்கிறேன். காலம் வரும்போது சொல்கிறேன் என்று சொல்லி வந்திருக்கிறேன். சொல்லவேண்டிய காலம் இப்போது வந்துவிட்டது.

சோழ வம்சத்தின் புராதன பொக்கிஷம் இந்தப் பெட்டிக்குள்ளே இருக்கிறது. இதோ பார்... சோழரின் வீரம் உறங்கியது போல் உறங்கி விட்ட இந்த உடைவாளைப் பார்த்தாயா? எங்கள் கரிகால் வளவனும் நெடுமடிக் கிள்ளியும் இந்த உடைவாளைத் தரித்துத் தான் உலகத்தையே ஆண்டார்கள். அருள் மொழி, உலகத்தையே ஆண்டார்கள்.

ஓலைச் சுவடியில் உள்ளது தெய்வப்புலவர் அருளிய திருக்குறள். இவற்றை நீ காப்பாற்றி விக்கிரமனுக்கு வயது வரும்போது கொடுக்க வேண்டும் அருள்மொழி. இந்த உடைவாளை என் தகப்பனார் அணிந்திருந்தார். நான் அணிய வில்லை. ஏன் தெரியுமா?

கப்பம் கட்டும் சிற்றரசனாக இருந்துகொண்டு கரிகால் வளவனும் நெடுங்கிள்ளியும் அணிந்த உடைவாளை நான் அணிய விரும்பவில்லை. இதையும் நீ விக்கிரமனிடம் சொல்ல வேண்டும்.

எப்போது அவன் ஒரு சின்னஞ்சிறு பிரதேசத்துக்காவது சுதந்திர மன்னனாகின்றானோ அப்போதுதான் இந்த உடைவாளைத் தரிக்கலாம். அதுவரை தரிக்கக் கூடாது என்று நீ அவனிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். அதை அப்படியே ஏற்றுக் கொண்டு அந்தச் சொல்லைச் செயலாக்கும் சுத்த வீரனாக அவனை நான் வளர்க்கிறேன் என்று நீ இந்தத் தெய்வ சந்நிதானத்தில் எனக்கு வாக்குறுதி அளிக்கவேண்டும். செய்வாயா? அருள்மொழி, செய்வாயா?

*அரு :* அப்படியே செய்கிறேன் சுவாமி.

*பார் :* அதற்கு வேண்டிய தைரியத்தை பகவான் உனக்கு அளிக்கட்டும். காதலால் வீரத்தை வளர்க்கவேண்டுமே தவிர, கண்ணீரால் அதை அழித்துவிடக் கூடாது.

அருள்மொழி... உன் பிள்ளைக்கு என்னால் சாம்ராஜ்யப் பட்டாபிஷேகம் செய்து வைக்க முடியாமற் போகலாம்... ஆனால் வீரத் தந்தையின் புதல்வன் என்ற பட்டத்தை நிச்சயம் அளிப்பேன்... தேவி, நிச்சயம் அளிப்பேன். நான் வருகிறேன் தேவி!

அவளைத் தேற்றிவிட்டு வெளியேறுகிறார். அருள்மொழி சிலையிடம் குனிந்து அழுகிறாள்.

சித்திர மண்டபத்துக்குள்ளே இளவரசன் விக்கிரமனிடம் கடைசி முறையாக விவரங்களைக் கூறுகிறார் பார்த்திப மகாராஜா. விழியிலிருந்து வழியும் நீருடன் தலை குனிந்தபடி அரசரின் பேச்சை, விக்கிரமனை விடக் கவனமாகக் கேட்கிறான் ராஜ விசுவாசி பொன்னன்.

*பார் :* குழந்தாய்... இன்னும் கொஞ்சம் வயதான பிறகு இதற்குள்ளிருக்கும் சித்திரங்களை உனக்குக் காட்ட வேணுமென்றிருந்தேன்... ஆனால் இப்போதே காட்ட வேண்டிய அவசியம் நேர்ந்திருக்கிறது. விக்கிரமா, இதுவரை இந்த மண்டபத்துக்குள்ளே என்னைத் தவிர வேறு யாரும் வந்ததில்லை. வேறு யாரும் இந்தச் சுவரிலுள்ள சித்திரங்களைப் பார்த்ததுமில்லை. வேறு யாரும் பார்க்க வேண்டுமென்று நான் விரும்பியதும் இல்லை.

இந்தச் சமயத்தில் பொன்னன் தீவர்த்தியுடன் சுவரருகே சென்று உற்றுப் பார்க்கிறான்.

*பார்:* தீவர்த்தியைத் தூக்கிப் பிடி! சுவருக்குச் சமீபமாகக் கொண்டு போகாதே. புகை பட்டுச் சித்திரங்கள் கெட்டுப் போகும்.

*பொன் :* உத்தரவு மகாராஜா.

*பார் :* குழந்தாய்... இந்த சித்திரத்தைப் பார்... என்ன தெரிகிறது?

*விக்:* யுத்தத்துக்குப் படை கிளம்புகிறது...ஆஹா... எவ்வளவு பெரிய சைன்னியம் அப்பா!

*பார் :* என்ன விக்கிரமா?

*விக் :* இந்தச் சித்திரங்களை யெல்லாம் எழுதியவர் யார் அப்பா?

*பார்:* என் கையினால் நானே எழுதிய சித்திரங்கள் இவை... கடந்த பன்னிரண்டு வருஷகாலமாக இரவிலும், பகலிலும் தூங்கும்போது, விழித்திருக்கும்போது நான் கண்டு வந்த கனவுகளைத்தான் இங்கே எழுதியிருக்கிறேன் குழந்தாய்!... நன்றாய்ப் பார். யாருடைய சைனியங்கள் இவை, தெரிகிறதா?

*விக்:* தெரிகிறது அப்பா. முன்னால் புலிக்கொடி போகிறதே! சோழ ராஜ்யத்தின் படைகள்தான் இவை... ஆனால்...

*விக்:* அவ்வளவு கம்பீரமாக நடந்துபோகும் அந்தப் பட்டத்து யானையின் மேல், யானைப் பாகன் மட்டுந்தானே இருக்கிறான்? அம்பாரியில் யாருமே இல்லையே...

*பார் :* நல்ல கேள்வி கேட்டாய்... வேண்டுமென்றே தான் அப்படி யானையின் மேல் யாரும் இல்லாமல் விட்டிருக்கிறேன். விக்கிரமா...நம் சோழ வம்சத்திலே எந்த அரசன் இம்மாதிரி பெரிய சைனியத்தைத் திரட்டிக்கொண்டு திக் விஜயம் செய்யப் போகிறானோ, அவனுடைய உருவத்தை அந்த அம்பாரியில் எழுத வேண்டும்.

குழந்தாய்...இன்று நாம் எப்படி இருந்த போதிலும் நம்முடைய மூதாதைகள் மகா வீரர்களாக இருந்திருக்கிறார்கள்.

சோழர் என்ற பெயரைக் கேட்டதுமே மாற் றரசர்கள் நடுங்கும்படியக அவர்கள் வீரச் செயல்கள் பல புரிந்திருக்கிறார்கள். அந்த நாளில் பல்லவர் என்ற பெயரே இந்தத் தென்னாட்டில் இருந்ததில்லை.

இப்போது கடல்மல்லைத் துறைமுகம் உலகமெங்கும் பிரசித்தி பெற்றிருப்பது போல அப்போது காவேரிப்பட்டினம் பிரசித்தி பெற்றிருந்தது. அந்தத் துறைமுகத்திலிருந்து பெரிய பெரிய கப்பல்கள் கிளம்பி, தூரதூர தேசங்களுக்கெல்லாம் சென்று பொன்னும், மணியும் கொண்டு வந்து சோழ மன்னர்களின் பொக்கிஷத்தை நிரப்பி வந்தன.

குழந்தாய், மறுபடியும் நம் சோழநாடு அப்படிப் பட்ட மகோன்னத நிலையை அடைய வேண்டுமென்பது என் உள்ளத்தில் பொங்கும் ஆசை. இரவிலும், பகலிலும் காணும் என் லட்சியக் கனவு. அதோ அந்தச் சித்திரத்தைப் பார். என்ன கேட்கவேண்டுமோ கேள், விக்கிரமா? இனிமேல் சந்தர்ப்பம் கிடைப்பது அரிது.

*விக்:* ஒன்றுமில்லை அப்பா, இவ்வளவு அற்புதமாகச் சித்திரம் எழுத நீங்கள் எப்போது கற்றுக் கொண்டீர்கள்? நமது அரண்மனைச் சித்திர

மண்டபத்திலேகூட இவ்வளவு அழகான சித்திரங்கள் இல்லையே!

*பார் :* *(விக்கிரமனை அணைத்துக்கொண்டு)* என் கண்ணே! என்னுடைய சித்திரத்திறமையை நீ ஒருவன் வியந்து பாராட்டியதே போதும். வேறு யாரும் பார்த்துப் பாராட்ட வேண்டியதில்லை. என் மனத்திலிருந்த ஏக்கம் இன்று தீர்ந்தது.

*விக் :* ஆமாம். ஜீவன் ததும்பும் இந்தச் சித்திரங்களை நீங்கள் ஏன் இருட்டு மண்டபத்திலே பூட்டி வைத்திருக்க வேண்டும்?

*பார் :* உலகம் அப்படிப்பட்டது விக்கிரமா. எவன் அதிகாரமும், சக்தியும் பெற்றிருக்கிறானோ அவனிடம் உள்ள வித்தையைத்தான் அது ஒப்புக்கொண்டு பாராட்டும். அவையிரண்டும் இல்லாத என்னிடம் என்ன வித்தை இருந்து என்ன பயன்? பார்த்திபன் சித்திரம் வேறு எழுத ஆரம்பித்து விட்டானா என்றுதான் உலகம் பரிகசிக்கும். அதனால்தான் இந்த மண்டபத்தை இப்படி – இந்தக் கனவுக் காட்சிகள் எப்போது நனவுக் காட்சிகளாகத் தொடங்குமோ அப்போதுதான் இந்த மண்டபத்தில் வெளிச்சம் வரச் செய்யவேண்டும். குழந்தாய்...

என் காலத்தில் அந்த பாக்கியம் எனக்குக் கிடைக்கப் போவதில்லை. உன் காலத்தி லாவது உனக்குக் கிடைக்க வேண்டு மென்பது என் ஆசை, குழந்தாய்!

அந்த ஆசை நிறைவேற வேண்டுமானால் சோழ நாட்டின் உன்னதமே உன் வாழ்க்கையின் நோக்கமாயிருக்க வேண்டும். சோழரின் புலிக்கொடி வேறு எந்த நாட்டின் கொடிக்கும் தாழாமல் வானளாவிப் பறக்க வேண்டு மென்று நீ சதா காலமும் சிந்திக்க வேண்டும்.

நாளை மறுதினம் நான் போருக்குக் கிளம்புகிறேன். யுத்த களத்திலிருந்து திரும்பி வருவேன் என்பது நிச்சயமில்லை. போர்க் களத்தில் மடிகிறவர்கள் வீர சொர்க்கம் அடைகிறார்கள் என்று புராணங்கள் சொல்லுகின்றன. ஆனால், நான் வீர சொர்க்கம் போக மாட்டேன்.

இறந்த பிறகும் என்னுடைய ஆன்மா இந்த சோழநாட்டு வயல்வெளிகளிலும் கோயில் குளங்களிலும், நதிக் கரைகளிலும் தான் உலாவிக் கொண்டிருக்கும். அப்போது பார்த்திபன் மகனால் சோழர்குலம் பெருமை யடைந்தது என்று மக்கள் கூறுவர். அதைவிட ஆனந்த மளிப்பது வேறொன்று மிராது. எனக்கு நீ செய்யவேண்டிய ஈமக்கடன் இதுதான். செய்வாயா விக்கிரமா?

*விக் :* செய்வேன் அப்பா... சத்தியமாகச் செய்வேன்.

*பார்:* பொன்னா! எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தாயல்லவா? இளவரசரிடம் உண்மையான அன்புள்ள சிலராவது அவருக்குத் துணையாக இருக்க வேண்டாமா?

அதற்காகத்தான் உன்னை இருக்கச் சொல்கிறேன். என்னுடன் யுத்தத்துக்கு வருவதைக் காட்டிலும் இளவரசருக்கு நீ துணையாயிருந்தால் அதுவே எனக்குத் திருப்தியளிக்கும். இருக்கிறாயல்லவா?

*பொன் :* இருக்கிறேன் மகாராஜா.

*(கண்ணீர் சிந்துகிறான்.) ஆ... தாங்களா? பார்த்திப சோழ மகாராஜா வெண்ணாற்றங்கரைப் போர்க்களத்திலே அடி பட்டு விழுந்து கிடக்கிறார். அவரது ஆவி பிரியுமுன் தன் உயிரை விட்ட தன் ராஜ பக்தியை நிரூபிக்கிறது பட்டத்துயானை. உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் பார்த்திப மகாராஜா முன் ஒரு சிவனடியார் நிற்கிறார்.*

*பார் :* ஸ்வாமி...தாங்கள் யார்?

*சிவ:* அம்பலத்தாடும் பெருமானின் அடியார்க்கு அடியவன் நான்... இன்று நடந்த யுத்தத்தில் ஆச்சரியமான உன் வீரச்செயல்களைப் பற்றிக் கேள்விப்பட்டேன். அப்பேர்பட்ட மகாவீரனை தரிசிக்க வேண்டுமென்று வந்தேன்.

*பார் :* அதிருக்கட்டும். யுத்தம் எப்படி முடிந்தது ஸ்வாமி?

*சிவ :* அதைப் பற்றிச் சந்தேகம் வேறு இருக்கிறதா... உனக்கு? வெற்றி பெற்றது பல்லவ சைனியந்தான்.

*பார் :* நான் அதைக் கேட்கவில்லை ஸ்வாமி... சோழ சைனியத்திலே யாராவது?

*சிவ :* இல்லை... இல்லை. சோழ சைன்னியத்தில் ஒருவன் கூடத் திரும்பிப் போகவில்லை. ஒருவன்கூட எதிரியிடம் சரணாகதி அடைய வில்லை.

*பார்:* ஆகா! சோழ நாட்டுக்கு நற்காலம் பிறந்து விட்டது ஸ்வாமி... நற்காலம்.

*சிவ:* எனக்கு ஒரு கைம்மாறும் வேண்டாம் பார்த்திபா. உன்னைப் போன்ற சுத்த வீரர்களுக்குத் தொண்டு செய்வதையே தர்மமாகக் கொண்டவன் நான். உன் மனதில் ஏதாவது குறை யிருந்தால் தெரிவி. நிறைவேற்றி வைக்கிறேன்.

*பார்:* உண்மையாகவா? என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம் ஸ்வாமி. எனக்கு ஒரு குறை இருக்கிறது. சோழ நாடு முன்னைப் போல் சுதந்திர நாடாக வேண்டும். மகோன்னத மடைய வேண்டும்.

தூர தூர தேசங்களிலெல்லாம் புலிக்கொடி பறக்க வேண்டுமென்று கனவு கண்டு வந்தேன். என்னுடைய வாழ்க்கையில் அது கனவாகவே முடிந்தது. என்னுடைய மகன் காலத்திலாவது அது நனவாக வேண்டு மென்பது தான் என் மனோரதம். விக்கிரமன் வீர மகனாக வேண்டும்.

சோழ நாட்டின் மேன்மையே அவன் வாழ்க்கையின் லட்சியமாக இருக்க வேண்டும். உயிர் பெரிதல்ல. சுகம் பெரிதல்ல. மானமும்,

வீரமுமே பெரியவை என்று அவனுக்குப் போதிக்க வேண்டும். ஸ்வாமி! இந்த மனோரதத்தை நிறைவேற்றுவீர்களா? நிறைவேற்றுவீர்களா?

*சிவ:* நிறைவேற்றுகிறேன், உயிரோடிருந்தால்!

*பார்:* ஆஹா... என் பாக்கியமே பாக்கியம்! இனி எனக்கு ஒரு குறையுமில்லை... ஆனால்... ஆனால்... தாங்கள் யார் ஸ்வாமி...?

*சிவ:* அவசியம் தெரிந்து கொள்ள வேண்டுமா?

*பார்:* ஆம், ஸ்வாமி.

*சிவ:* இதோ பார்!...

***தாடியை நீக்கிக் காட்ட ஆச்சரியத்துடன் பார்த்துத் திடுக்கிடுகிறார் பார்த்திப மன்னர்.***

*பார்:* ஆ... தாங்களா?

***பார்த்துக் கொண்டிருந்தவர் அப்படியே கண்களை மூட, தலை சாய்ந்து உயிர் பிரிகிறது. ஒரு கணம் வேதனை பிரதிபலிக்கிறது.***

***சிவனடியார் அருள்மொழி தேவியைச் சந்திக்கிறார்.***

*அருள்:* இப்படி அமருங்கள் ஸ்வாமி! தாங்கள் யாரோ?

*சிவ:* அம்பலத்தாடும் பெருமானின் அடியார்க்கு அடியவன் நான். வெண்ணாத்தங்கரைப் போரில் வீழ்ந்துவிட்ட உன் கணவரின் வீரச் செயல்களைப் பற்றிக் கேள்விப்பட்டேன். அப்பேர்ப்பட்ட வீரரைத் தரிசிக்க வேண்டு மென்று சென்றேன். தரிசித்தேன்.

ஆஹா, சோழ சைன்னியத்தைச் சேர்ந்தவர் களில் ஒருவர்கூடத் திரும்பிப் போகவில்லை. ஒருவர்கூட எதிரியிடம் சரணாகதி அடைய வில்லை என்று சொன்னதும் அந்த மகாவீரரின் முகத்தில் என்ன கவர்ச்சி! என்ன மலர்ச்சி! அவ்வளவுதான்! அவருடைய மாசற்ற வீரம் என் மனத்தைக் கவர்ந்துவிட்டது.

''உன் மனதில் ஏதாவது குறை யிருந்தால் சொல்லு. பூர்த்தியாகாத மனோரதம் ஏதாவது இருந்தால் தெரிவி. அதை நான் நிறைவேற்றி வைக்கிறேன் என்றேன்.

'ஆம் ஸ்வாமி... என் மனதில் ஒரு குறை இருக்கிறது. சோழ நாடு தன் புராதனப் பெருமையை இழந்து இப்படிப் பராதீன மடைந்திருக்கிறதே என்பதுதான் அந்தக் குறை. என்னுடைய காலத்தில் அது சுதந்திர மடையாவிட்டாலும் என் மகனுடைய காலத்தி லாவது அது சுதந்திரமடைய வேண்டும் என்பதுதான் அந்த மனோரதம்...

அதற்கு விக்கிரமன் வீர மகனாய் வளர வேண்டும். சோழ நாட்டு மேன்மையே அவன் வாழ்க்கையில் லட்சியமாயிருக்க வேண்டும்... உயிர் பெரிதல்ல. சுகம் பெரிதல்ல. மானமும், வீரமுமே பெரியவை என்று அவனுக்குப் போதிக்க வேண்டும்... இந்த வரந்தான் நான் தங்களிடம் கேட்கிறேன் தருவீர்களா?' என்றார்.

"தருகிறேன் பார்த்திபா தருகிறேன்... உன்னுடைய மனோரதத்தை அவசியம் நிறைவேற்றுகிறேன்; நான் உயிரோடிருந்தால்' என்றேன். அவருடைய உயிர் பிரிந்தது. என்னுடைய உள்ளம் இப்போது உங்களைத் தேடி வந்திருக்கிறது. என்னை நம்பி உன் விக்கிரமனை நீ என்னிடம் ஒப்படைப்பாயா?

*அரு:* தங்கள் சித்தம் என் பாக்கியம். எனக்கு வேண்டியதெல்லாம் என் மகன் வீரமகனாக வளரவேண்டும் என்பதே.

*சிவ:* மிக்க சந்தோஷம். வா விக்கிரமா. ***(சிவனடியார் செல்ல விக்கிரமனும், அருள்மொழியும் அவரைத் தொடர்கிறார்கள்.)***

மாரப்ப பூபதி விக்கிரமனைச் சிறை பிடித்தா லொழிய சோழ சிம்மாசனம் தனக்குக் கிடைக்கா தென்று நினைத்துச் சூழ்ச்சி செய்கிறான். அவன் பேச்சை நம்பி சிராப்பள்ளி மலையிலே புலிக் கொடியைப் பறக்க விட விக்கிரமன் கிளம்புகிறான். சிவனடியார் யாவரையும் சந்தித்து விவரமறிந்து கிளம்பி எங்கோ செல்கிறார். விக்கிரமன் எதிர்பார்த்தபடி தோல்வியுற்றுக் கைதாகிறான்.

இதற்கிடையே நரசிம்ம வர்மரைச் செண்பகத் தீவின் மந்திரி சித்தார்த்தர் சந்திக்கிறார். அரசரில்லாத அந்தச் சோழ பூமிக்கு ஒரு அரசனைத் தேர்ந் தெடுத் தனுப்புவதாகக் கூறுகிறார் நரசிம்மவர்மர். ஆனால் தன் மகள் குந்தவி, விக்கிரமனை விரும்புவதையும் அவர் அறியாமல் போகவில்லை! ஆகவே விக்கிரமனை நாடு கடத்த உத்தரவிடுகிறார். சிவனடியார்தான்

இதற்குக் காரணம் என்று நினைக்கும் குந்தவி, அப்பரைச் சந்தித்து சிவனடியார் பற்றிய விவரமறிய முயற்சித்துத் தோல்வியுறுகிறாள்.

அருள்மொழியைச் சந்தித்து விவரம் கூறும் சிவனடியார், குந்தவியிடம் விக்கிரமன் காதல் கொண்டிருப்பதையும் கூறி, குந்தவியை அருள்மொழி ஆதரிக்க வேண்டு மென்கிறார். குந்தவியும், அருள்மொழியைச் சந்திக்க விரும்புகிறாள்.

### வீரர்களின் கூளுரை

நரசிம்ம வர்மர் ஏற்பாட்டின்படி செண்பகத் தீவிலிருக்கும் விக்கிரமனுக்குப் பட்டத்து யானை மாலையிட அவன் குமாரபுரி அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்படுகிறான்.

*சித்:* இதுதான் குமாரபுரியின் அரண்மனை மகாராஜா!

*விக்:* என்ன சொன்னீர்? குமாரபுரி தானே? மாயாபுரி அல்லவே!

*சித்:* இல்லை அரசே, குமாரபுரிதான். கரிகாலச் சோழரின் குமாரரும், அவருடைய சந்ததி யாரும் பரம்பரை பரம்பரையாக இந்த அரண் மனையில்தான் வசித்து வந்தார்கள். தாங்களும் இதே அரண்மனையில் வசிக்க வேண்டும் என்பதுதான் இந்த நாட்டுப் பிரஜைகளின் விண்ணப்பம்.

*விக்:* அதிருக்கட்டும். உம்முடைய பெயர்?

*சித்:* சித்தார்த்தன். இந்த நாட்டுக் கடைசி மன்னராயிருந்து காலஞ் சென்ற விஷ்ணு வர்த்தன மகாராஜாவின் முதல் மந்திரி நான்.

*விக்:* மந்திரியா, மந்திரவாதியா?

*சித்:* மந்திரிதான் மகாராஜா!

*விக்:* நீர் மந்திரவாதியில்லை யென்றால் நான் யார் என்பதும், என்னை இன்று காலை இந்தத் தீவில் இறக்கி விடுவார்கள் என்பதும் உமக்கு எப்படித் தெரிந்தது?

*சித்:* எல்லாம் முருகன் அருள். அக்கம் பக்கத்தாரின் படையெடுப்பிலிருந்து இந்நாட்டையும், இந்நாட்டு மக்களையும் காப்பதற்காக அவர்தான் தங்களை இங்கு அரசராக அனுப்பி வைத்திருக்கிறார்.

*விக்:* என்னை நீங்கள் அரசனாக ஏற்றுக் கொள்வ தாயிருந்தால் இன்னொரு ராஜாவுக்கோ, இன்னொரு சக்கரவர்த்திக்கோ என்னால் கப்பம் செலுத்த முடியாது... நான் மன்னனா யிருந்தால் சுதந்திர நாட்டுக்குத் தான் மன்னனா யிருப்பேன். அடிமை நாட்டுக்கு ஒரு நாளும் மன்னனாயிருக்க மாட்டேன்.

*சித்:* எங்கள் உடம்பில் ஓடுவதும் சோழ நாட்டின் வீர ரத்தந்தான் மகாராஜா... நாங்களும் பிரஜைகளாயிருந்தால் சுதந்திர நாட்டுப் பிரஜைகளாய்த்தான் இருப்போம். அடிமை நாட்டுப் பிரஜைகளாக ஒரு நாளும் இருக்க மாட்டோம்...

விக்கிரமன் முகத்திலே மகிழ்ச்சி பிரதி பலிக்கிறது. மந்திரத்தால் நடப்பது போல் நடந்த காரியங்களை எண்ணித் திகைப்பதைவிட, செண்பகத்தீவு மக்களின் வீரம் கண்டுதான் அவன் மனம் மகிழ்ச்சியுறுகிறது. மந்திரியின் பேச்சு அவர் உள்ளத்திலே உள்ள வீரத்தையும், தன்மானத்தையும் பிரதிபலிப்பதாக இருந்தது.

இந்தச் சமயத்தில் முருகவேள் ஆலயத்தின் மணியோசை முழங்குகிறது. தன் சொல்லுக்கு ஆண்டவனின் ஆசியும் கிடைத்து விட்டதாகப் பூரித்துப் போகிறார் அமைச்சர்.

*சித்:* அதோ முருகவேள் ஆலயத்தின் மணிகூட முழங்குகிறது.

வாருங்கள்... மகாராஜா... முதலில் தங்கள் ஸ்நான பானங்களை முடித்துக் கொண்டு சிறிது நேரம் இளைப்பாருங்கள். அதற்குள் நான் முடிசூட்டு விழாவுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வந்து விடுகிறேன். வாருங்கள், மகாராஜா...

இடையே...

நரசிம்மவர்மர், பொன்னன், வள்ளி இருவரையும் அழைத்து விசாரிக்கிறார். சிவனடியார் ஒரு மகான் என்கிறாள் வள்ளி. அவன் கபட சன்னியாசி என்கிறான் மாரப்பன். குந்தவியும் மாரப்பனிடம் கபட சிவனடியாரைப் பிடிக்கச் சொல்லுகிறாள்.

பொன்னனும், வள்ளியும், பார்த்திப மகாராஜா ஒப்படைத்த வாள், வள்ளுவன் குறள் ஓலை இரண்டும் உள்ள பெட்டியை அப்புறப்படுத்த முயற்சிக்கும்போது மாரப்பன் வருகிறான். சிவனடியார் அதற்குள் பெட்டியைப் பெற்று மறைந்து விடுகிறார். தோல்வியுற்றுத் திரும்புகிறான் மாரப்பன். அருள்மொழி ஸ்தல யாத்திரை கிளம்பி விடுகிறாள். விக்கிரமன், பெட்டியைக் கொண்டு போகவும், தாயைச் சந்திக்கவும் தமிழ் நாட்டுக்குக் கிளம்பி வருகிறான். அரசனாக அல்ல; வைர வியாபாரி தேவசேனராக.

கபால பைரவர், அருள்மொழியைக் கடத்தி வந்து விடுகிறார். அவரது சீடர்களில் ஒருவனான குள்ளன், விக்கிரமனை ரணபத்திர காளிகோயில் பக்கமாக ஏமாற்றி அழைத்து விடுகிறான். திடீரென்று காட்டுப் பாதையில் கபாலிகர்கள் தாக்குகின்றனர். அவன் அவர்களுடன் போரிடும்போது, வீரசேனன் என்பவர் வந்து காப்பாற்றி, சிற்பி ஆயனரின் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறார். அங்கே ஆயனரின் மகள் சிவகாமியின் உருவம் கண்டு விவரம் கேட்கிறான் தேவசேனன் (விக்கிரமன்).

வீரசேனன் அது ஒரு கதை என்கிறார். பின் ஆரம்பிக்கிறார். அதற்கு முன், ''மரணத்தில் நம்பிக்கை உண்டா?'' என்று விக்கிரமனிடம் கேட்கிறார்.

*தேவ:* இதென்ன கேள்வி? மரணத்தில் நம்பிக்கை யுண்டா என்றால்?

*வீர:* அதாவது மனிதர்கள் உண்மையில் மரணம் அடைகிறார்கள் என்பதாக நீர் நினைக்கிறீரா? உயிர் போய் விட்டது என்று நாம் சொல்லும் போது உண்மையில் உயிர் போகிறதா அல்லது உடல் மட்டும் போய் உயிர் இங்கேயே... இந்த உலகத்திலேயே இருக்கிறதா... இறந்து போனவர்கள் நம்மைப் பற்றி நினைக் கிறார்களா? நம்மைப் பார்க்க வருகிறார்களா? நம்முடைய நடவடிக்கைகளை அவர்கள் கவனிப்பதுண்டா?

*தேவ:* தங்களுக்குத் தோன்றும் இந்தச் சந்தேகம் எனக்கும் சில சமயங்களில் தோன்றுவதுண்டு. தீர்ப்பாரைத்தான் காணோம்.

*வீர:* எனக்கென்னமோ மரணம் என்பதே பொய் என்று தோன்றுகிறது. மரணத்துக்காக விசனப்படுவதும் மூடத்தனம் என்று நினைக்கிறேன். இந்த வீட்டில் முப்பது வருஷங்களுக்கு முன்னால் ஆயனச் சிற்பியும் அவருடைய மகள் சிவகாமியும் வாழ்ந்தார்கள். அப்போதெல்லாம் ஜல்ஜல் என்ற சதங்கை ஒலியும், கல்கல் என்ற கல்லுளி ஒலியும் இங்கே மாறி மாறிக் கேட்டுக் கொண்டேயிருக்கும்.

*தேவசேனன் சுவாரஸ்யமாகக் கேட்கிறான்.*

*வீர:* சிவகாமி அற்புதமாக நடனமாடுவாள். அவருடைய நடனத் தோற்றங்களைப் பார்த்துப் பார்த்து ஆயனச் சிற்பியும் அழகாக சித்திரம் எழுதுவார். சிலைகள் வடிப்பார். இப்போது கூட ஆயனரும், சிவகாமியும்

இங்கே இல்லை என்று என்னால் நம்பவே முடியவில்லை. அவர்கள் இன்னும் இங்கே இருக்கிறார்கள் என்றே நான் நினைக்கிறேன்.

இதோ உற்றுக் கேட்டால் சதங்கை ஒலியும், கல்லுளி ஒலியும் என் காதுக்குக் கேட்கின்றன. அந்தச் சிவகாமிதான் இந்த தெய்வீகக் களையுள்ள பெண். அது மகேந்திர சக்கரவர்த்தியின் காலம். அவருடைய புதல்வரான மாமல்லருக்கு அப்போது உம்முடைய வயதுதானிருக்கும். இந்தப் பெண்ணிடம் தம் இதயத்தைப் பறி கொடுத்து விட்ட அவர் இங்கே அடிக்கடி வருவார். நானும் அவருடன் வருவேன்.

இருவரும் இந்த வீட்டுக்கு அருகே உள்ள தாமரைக் குளக்கரையில் அந்தி மயங்கும் போது சந்திப்பார்கள். ஆடிப்பாடி மகிழ்வார்கள். அவர்களுடைய காதலுக்குத் துணையா யிருந்த மானும், மயிலும் கூட ஊடலுக்கும் துணையாயிருந்தன. அப்படி ஊடல் கொண்டிருந்தபோது ஒருநாள்... இன்பமும், துன்பமும் மாறி மாறி வருவதுதானே உலக இயற்கை?

இந்த இயற்கையை ஒட்டித் தானோ என்னவோ வாதாபி சக்கரவர்த்தியான புலிகேசி காஞ்சியின் மேல் படையெடுத்தான். அவனுடைய படை யெடுப்பைத் தம்முடைய ராஜதந்திரத்தால் முறியடித்துவிட்டார் மகேந்திரர். அதனால் ஆத்திரமடைந்த புலிகேசி நாட்டைச் சூறை

யாடினான். நல்லவர்களைச் சிறைபிடித்தான். அவர்களுடைய விடுதலையில் வேட்கை கொண்ட சிவகாமி தன்னை மறந்தாள். தன் காதலை மறந்தாள். மாமல்லர் தடுத்தும் கேளாமல் தன்னைத் தானே சிறைப்படுத்திக் கொண்டு புலிகேசியுடன் சென்றாள்.

சவுக்கடிக்குள்ளான தன் நாட்டு மக்களைக் காப்பாற்ற அன்று நாற்சந்தியிலே அவள் ஆடிய நடனம் சளுக்க வம்சத்தின் சர்வ நாசத்துக்காக ஆடிய நடனம் போலிருந்தது.

***தேவசேனன் கதை கேட்கும் சுவாரஸ்யத்தில் தன்னை மறக்கிறான்.***

*வீர:* மகேந்திரர் தன்னை அவமதித்து விட்டார் என்பதற்காகப் புலிகேசி சிவகாமியை அவமதித்தது... அவனுடைய அண்ணனான நாக நந்திக்குப் பிடிக்கவில்லை. கலைவெறி கொண்ட கலை அரசியான சிவகாமியை விடுதலை செய்ய முயன்றான்... அந்த முயற்சியை எதிர்த்து அவள் அன்று ஏற்ற சபதம்!

ஆஹா... இந்தச் சமயத்தில் தான் விதி விளையாட ஆரம்பித்தது. தம்முடைய விருப்பத்துக்கு மாறாகச் சிவகாமி சபதம் ஏற்றதை மாமல்லர் விரும்பவில்லை. அதற்காக அவளுடைய சபதத்தை நிறைவேற்றாமல் இருக்கவும் முடியவில்லை...

தந்தை மகேந்திரருக்குப் பின் பட்டமேற்ற அவர், வாதாபியின் மேல் படை

யெடுத்துச் சென்றார். புலிகேசியை வதைத் தார். சிவகாமியின் சபதத்தின்படி வாதாபியை அக்கினி பகவானுக்கு இரையாக்கி விட்டு 'இப்போதாவது உன் உள்ளம் குளிர்ந்ததா?' என்று வெறுப்புடன் கேட்டார். அன்று தோன்றிய அந்த வெறுப்பை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக விதி தாலாட்டி வளர்த்தது. அதன் பயனாக ஒன்று பட்ட இதயங்கள் இரண்டும் பிளவுபட்டன. சிவகாமி, தன் காதலைத் துறந்துவிட்டாள்; கலையையும் தெய்வார்ப்பணமாக்கிவிட்டாள். *(என்று கூறி முடிக்கிறார்)*

*வீர:* இதுதான் பேதை சிவகாமியின் கதை. இதற்கு மேல் என்னை ஒன்றும் கேட்காதீர்கள். தயவு செய்து கேட்காதீர்கள்.

*முகத்தைத் திருப்பிக் கொண்டு விம்முகிறான்.*

*தேவ:* அதற்காக அழவேண்டியவன் மாமல்லரல்லவா? தாங்கள் ஏன் அழவேண்டும்?

*வீர:* பழகிய தோஷந்தான். படுத்துக் கொள்ளும்.

*(எழுந்து செல்லுகிறார்.)*

மகாராணி எங்கே?

விக்கிரமன் குதிரையில் செல்லும்போது காட்டாறு குறுக்கிடுகிறது. துணிந்து அவன் இறங்கி விடுகிறான். ஆனால் குதிரை சமாளிக்க முடியாமல் அவனைத் தள்ளிவிட்டுப் போய்விடுகிறது. அவன் தடுமாறும்போது, தற்செயலாக அங்கே வந்த

பொன்னன் நீரில் பாய்ந்து காப்பாற்றி மகேந்திர மண்டபத்துக்குத் தூக்கிச் சென்று மூர்ச்சை தெளிவிக்கிறான்.

*பொன்:* மகாராஜா... மகாராஜா... மகாராஜா... மகாராஜா...

*விக்:* பொன்னா... பொன்னா... நிஜமா... நீதானா? இல்லை இதெல்லாம் கனவா?

*பொன்:* நானும் அதையேதான் கேக்குறேன் மகாராஜா, நிஜமாக நீங்க தானா, இல்லே கனவா?

*விக்:* நான்தான் பொன்னா... விக்ரமன் தான். மகாராணி எப்படி இருக்கிறார் பொன்னா?

*பொன்:* அதை ஏன் கேக்கறீங்க?

*விக்:* ஏன்? என்ன நடந்தது?

*பொன்:* தை அமாவாசை அன்னிக்குக் காவேரி சங்கமத்திலே குளிக்கிறப்போ...

*விக்:* என்ன பொன்னா... என்ன நடந்தது?

*பொன்:* உங்க ஞாபகமாகவே இருந்த மகாராணி, ''இதோ வந்துவிட்டேன் விக்கிரமா. இதோ வந்துவிட்டேன்'' என்று கத்திக்கிட்டே அலையோடு அலையாப் போயிட்டாங்க.

*விக்:* ஆ... அப்புறம்?

*பொன்:* நானும் பரஞ்சோதி அடிகளும் சங்கமத்திலே எறங்கி மகாராணியைத் தேடுதேடுன்னு தேடினோம். கெடைக்கலே, கடைசியிலே

என்னடான்னா யாரோ ஒரு ஒத்த கை மனுஷன் வந்து மகாராணியைத் தூக்கிக்கிட்டு கூட்டத்தோடு கூட்டமாய் மறைஞ்சிட்டான்னு வள்ளி சொன்னா.

*விக்:* யார் அந்த ஒற்றைக் கை மனிதன்?

*பொன்:* அவன்தான் கபாலருத்ர பைரவனாம்... ரண பத்ரகாளி கோயிலின் பூசாரியாம். அந்தக் கோயில் எங்கே இருக்குன்னு கண்டு பிடிச்சுட்டா அவனையும், அவன் தூக்கிக் கிட்டு போன மகாராணியையும் கண்டு பிடிச்சிடலாமின்னு சிவனடியார் சொல்றாரு.

*விக்:* இன்னும் கண்டுபிடிக்கவில்லையா?

*பொன்:* எப்படிக் கண்டுபிடிக்கிறது? அவரு ஒரு பக்கமும், நான் ஒரு பக்கமுமா மாசக் கணக்கா அலைஞ்சப்புறம் மூணு நாட்களுக்கு முந்தி தான் கொல்லிமலைச் சாரலிலே அவனை நான் ஒரு குள்ளனோடு பார்த்தேன்.

*விக்:* என்ன குள்ளனா? அவன் எப்படியிருந்தான்?

*பொன்:* வயசு நாற்பதுக்கு மேலே இருக்கும். ஆனா பார்க்கப் பத்து வயசுப் பையன் மாதிரி இருந்தான்... ஏன், நீங்களும் அவனைப் பார்த்திருக்கீங்களா?

*விக்:* ஆமாம் பார்த்தேன். நீ சொல்வதைச் சொல்லி முடி.

*பொன்:* இனிமே சொல்றதுக்கு ஒண்ணுமில்லே மகாராஜா. கொல்லிமலைச் சாரலிலே

அவங்களை பார்த்ததும் நான் பயந்து போய் ஒரு பள்ளத்திலே பதுங்கிக்கிட்டேன். அருவிப் பாதையிலே எறங்கி அவுங்க ரொம்ப தூரம் போனப்புறம் மேலே வந்து ஆன மட்டும் தேடிப் பார்த்தேன். அந்தக் கோயிலையும் என்னாலே கண்டுபிடிக்க முடியலே. மகாராணியையும் என்னாலே கண்டுபிடிக்க முடியலே.

சரி... சிவனடியாரைப் பார்த்து சொல்லலாம்னு அங்கிருந்து வந்தா இங்கே நீங்க வெள்ளத்திலே சிக்கிக்கிட்டு இருந்தீங்க... அந்த மட்டும் நான் வந்த சமயம் நல்ல சமயந்தான். இல்லையா மகாராஜா?

*விக்:* அதிருக்கட்டும், பொன்னா, மகாராணி அந்த மலையில்தான் இருக்கிறார் என்ற நம்பிக்கை உனக்கு இருக்கிறதா?

அதே சமயத்தில் யாரோ இருவர் அந்தப் பக்கமாக வரும் காலடி ஓசை கேட்க, விக்கிரமனின் வாயைப் பொத்துகிறான் பொன்னன். சாளரத்தின் ஓரமாகச் சென்று பார்க்க, அப்போது பளீர் என்று ஒரு மின்னல் மின்ன, அந்த மின்னல் வெளிச்சத்தில் மாரப்ப பூபதியும், கபால ருத்ரபைரவனும் வருவது தெரிந்து மறுபடியும் ஓடி வருகிறான்.

*பொன்:* மகாராஜா... ஆபத்து வந்திருக்கு... எதுக்கும் தயாரா இருங்க மகாராஜா...

*விக்:* *(இடுப்பைத் தடவிப் பார்த்தபடி)*

அட கடவுளே... என் உடைவாள்கூட ஆற்றோடு போய்விட்டதே.

*பொன்னனும், விக்கிரமனும் மறைவிலிருந்து மாரப்பனும், பைரவனும் பேசிக் கொண்டு இருப்பதைக் கவனித்துக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். கபால பைரவன், மாரப்ப பூபதியிடம் விக்கிரமனையும் சிவனடியாரையும் பிடித்து வருமாறு கூறுகிறான். பிறகு அவர்கள் போகிறார்கள்.*

தன் உடைவாள் ஆற்றோடு போய்விட்டதை விக்கிரமன் பொன்னனிடம் கூற, பெட்டியின் நினைவு வருகிறது பொன்னனுக்கு. மறுதினம் எடுத்துக் கொள்ளலாம் என்று கூறி விக்கிரமனைப் படுக்கச் செய்கிறான் பொன்னன்.

காலையில் விக்கிரமனுக்கு ஜுரம் கண்டு விடுகிறது. ஆகவே வைத்தியரை அழைக்க ஓடுகிறான் பொன்னன். அப்போது அவ்வழியே குந்தவியும், அவள் அண்ணன் மகேந்திரவர்மனும் விக்கிரமனை அழைத்துச் செல்கிறார்கள்.

பொன்னன் இதைப் பார்த்து விடுகிறான். அவன் சிற்பியின் வீடு செல்ல, அங்கிருந்து சிவனடியார் வெளிப்பட்டுப் பொன்னனை வரவேற்கிறார்.

*சிவ:* வா பொன்னா... வா... மகாராணியைப் பற்றி ஏதாவது தகவல் தெரிந்ததா?

*பொன்:* தெரிஞ்சுது சாமி, திருவெண்காட்டு அம்மையும், வள்ளியும் பாத்த ஒத்தைக் கை மனுஷனை நானும் பார்த்தேன்.

*சிவ:* எங்கே பொன்னா, எங்கே?

*பொன்:* இருந்திருந்தா என்ன செஞ்சிருப்பீங்க சாமி?

*சிவ:* அந்தக் கிராதகன் கட்டியிருப்பதாகச் சொல்லும் ரணபத்திரக்காளி கோயிலை எப்படியாவது கண்டுபிடித்திருப்பேன்.

*பொன்:* ரணபத்திர காளி கோயிலா?

*சிவ:* ஆமாம். அதன் தலைமைப் பூசாரி அவன். கபால ருத்ர பைரவன் என்று தன்னைச் சொல்லிக் கொள்கிறானாம்.

*பொன்:* பேரைக் கேக்கும்போதே பயமாயிருக்குதே.

*சிவ:* பேர் மட்டுமன்ன? அவன் பரப்பிக் கொண்டு வரும் மதமும் பயங்கரமான மதந்தான்...

*பொன்:* ஒருவேளை அந்தக் கோயில்லதான்...

*சிவ:* மகாராணி இருக்க வேண்டும்.

*பொன்:* அய்யோ... அந்தப் பாவி...

*சிவ:* கவலைப்படாதே பொன்னா! கேவலம் மகாராணிக்காக இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டிருக்க மாட்டான். இதில் ஏதோ அந்தரங்க நோக்கமிருக்க வேண்டும். அந்த நோக்கம் நிறைவேறும் வரை மகாராணியை பத்திரமாகத்தான் வைத்திருக்க வேண்டும். எதற்கும் நாம் ரணபத்திர காளி கோயில் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து விட்டால் மகாராணியையும் கண்டுபிடித்துவிடலாம்.

ஆனால் அங்கே போவதற்கு முன்னால் நான் உறையூருக்குப் போகவேண்டும்.

*பொன்:* ஏன்?

*சிவ:* இளவரசர் வந்திருக்கிறார்... என்ன பொன்னா, நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கை யில்லையா?

*பொன்:* உங்க பேச்சிலே எனக்கு நம்பிக்கை யில்லாமப் போகுமா? அவர் வந்தது உங்களுக்கு எப்படித் தெரியும்.

*சிவ:* வந்தது மட்டுமல்ல, வழியில் அவருக்கு ஏதோ விபத்து நேர்ந்திருக்கிறது என்பது மட்டும் எனக்குத் தெரியும். அதோ அந்தக் குதிரைக்கு பகவான் பேசும் சக்தியை மட்டும் அளித்திருந்தால் அது சொல்லும்... அது போகட்டும், நீயும் என்னோடு உறையூருக்கு வருகிறாயா?

*பொன்:* வர்றேன் சாமி... ஆனா அதுக்கு முன்னாலே சில விஷயங்கள் தெரியணும்.

*சிவ:* என்ன?

*பொன்:* நீங்க நிச்சயமா யாருன்னு எனக்குத் தெரியணும். கொஞ்ச நேரத்துக்கு முன்னாலெ சாலை வழியா குதிரை மேலே வரும்போது வேறு உருவத்திலே வந்திங்க. இப்போது வீட்டை விட்டு வெளியிலே வர்ற போது வேறே உருவத்திலே வந்து நிக்கிறீங்க. இந்த இரண்டு உருவமும் உங்களுக்குச்

சொந்தமான உருவமில்லேன்னு எனக்குத் தோணுது. உண்மையிலே நீங்க யாருன்னு எனக்குச் சொல்லணும்.

*சிவ:* சொன்னால் என்ன?

*பொன்:* சொன்னா நீங்க அவசியம் தெரிஞ்சிக் கொள்ள வேண்டிய விஷயம் எனக்குத் தெரியும். அதைச் சொல்லுவேன். இல்லாட்டி என் வழியே போவேன்.

*சிவ:* அவசியம் நீ தெரிந்து கொண்டு தான் தீர வேண்டுமா?

*பொன்:* ஆமாம் சாமி.

*சிவ:* சொல்கிறேன். ஆனால் நீ எனக்கு ஒரு வாக்குறுதி கொடுக்க வேண்டும். யாரிடமும் சொல்லக் கூடாது. பரம ரகசியமாய் வைத்திருக்க வேண்டும்.

*பொன்:* ஆகட்டும் சாமி.

*சிவ:* போர்க்களத்தில் வீரமரணமடைந்த பார்த்திப மகாராஜா மீது ஆணையாகச் சொல்லுவாயா?

*பொன்:* பார்த்திப மகாராஜா ஆணையாகச் சொல்லுகிறேன்.

*சிவ:* அப்படியானால் பொன்னா, இதோ பார்!

தன் சடாமுடியை அகற்றிக் காட்டுகிறார். பொன்னன் திகைக்கிறான்.

*பொன்:* ஆ... தாங்களா பிரபு...

*சிவ:* ஆம் பொன்னா! இப்போதாவது சொல். உனக்குத் தெரிந்த ரகசியம் என்னவென்று இப்போதாவது சொல்.

*பொன்:* இனிமே சொல்றதுக்கு என்ன சாமி? இங்கிருந்து காட்டாற்று வெள்ளத்திலே சிக்கிக்கிட்டாரு. கரை சேர முடியாம தவிச்சிக் கிட்டிருந்த அவரை நான்தான் கரை சேத்தேன். அன்னைக்கு ராத்திரியே அவருக்கு காய்ச்சல் வந்துட்டுது. வைத்தியரை அழைச்சுக்கிட்டு வர்றதுக்காகப் பக்கத்துக் கிராமத்துக்குப் போனேன். அந்த வழியா வந்த இளவரசி தன்னுடைய பல்லக்கிலே இளவரசரையும் ஏத்திக்கிட்டுப் போயிட்டாரு.

*சிவ:* அப்படியானால் இளவரசரைப்பற்றி கவலை நமக்கு வேண்டாம். அருள்மொழி தேவியை தேடிப் பிடிப்போம் வா.

*சிவனடியார் செல்ல பொன்னனும் பின் தொடர்கிறான்.*

குந்தவியின் யோசனைப்படி சிவனடியாரும் பொன்னனும் கபால பைரவனின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்துவிட முயற்சிக்கிறார்கள். ஆனால் சிவனடியார், மாரப்ப பூபதி மூலம் விக்கிரமனுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படும் என்று பொன்னனிடம் கூறி, உடனடியாக அவன் ஊர் திரும்பும்படிக் கூறிச் செல்கிறார்.

பொன்னன் இளவரசனைச் சந்தித்து, வசந்தத் தீவுக்குச் சென்று புதைக்கப்பட்டிருந்த பெட்டியை எடுத்துத் தருகிறான். குந்தவியிடமிருந்து தப்பி வந்த

விக்கிரமன் நாடு திரும்ப முடிவு செய்து அதைப் பொன்னனிடமும் கூறுகிறான்.

*விக்:* ஆ... பொன்னா... கொஞ்ச நேரத்துக்கு முன்னால் என் உள்ளத்தில் காதலும் வீரமும் போட்டியிட்டன. அந்தப் போட்டியில் காதல் வென்று விடுமோ என்று நான் அஞ்சினேன். அதற்கு இப்போது அவசியமில்லாமல் செய்துவிட்டது இந்தக் கத்தி. என் தந்தை எனக்களித்து விட்டுச் சென்ற இந்தத் தமிழ் மறை என்ன சொல்கிறது... முயற்சி திருவினையாக்கும் என்றல்லவா சொல்கிறது? அந்த முயற்சியை நானாவது கைவிட்வாவது? வா பொன்னா போகலாம்.

***(படகை அங்கே காணோம்)***

இதென்ன? பொன்னா இது... படகைக் காணோமே... நீந்தியே போய்விடுவோமா?

*பொன்:* வேண்டாம் வேண்டாம்... இங்கதான் எங்கேயாவது கரையோரம் போயிருக்கும். இருங்க, ஓடிப்போய் பார்த்துட்டு வந்துடறேன்.

*குந்தவி வந்து விக்கிரமனின் கையிலிருந்த பெட்டியை வாங்கி ஒரு பக்கமாக வைத்துவிட்டுப் பேசுகிறாள்.*

*குந்:* சோழ நாட்டாரின் யோக்யதை இதுதானா? வள்ளுவர் பெருமான் முயற்சி திருவினை யாக்கும் என்று மட்டும் தானா சொல்லி யிருக்கிறார்? நன்றி மறப்பது நன்றன்று என்றும் சொல்லியிருப்பதாக எனக்குக் கேள்வியாயிற்றே!

*விக்:* அது எப்படி உனக்குத் தெரியும்? ஒருவேளை...

*குந்:* ஆமாம். நீங்கள் குழி தோண்டிப் புதையல் எடுப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு மிருந்தேன்.

*விக்:* உண்மையாகவா?

*குந்:* உங்கள் பொய் வேஷத்தையும் தெரிந்து கொண்டேன்.

*விக்:* அப்படியானால் நான் சொல்லிக் கொள்ளாமல் ஓடிப் போக நினைத்ததில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

*குந்:* உயிருக்குப் பயந்துதானே ஓடப் பார்த்தீர்கள்?

*விக்:* ஆமாம், இந்த உயிர் இன்னும் கொஞ்ச காலத்துக்குத் தேவையாயிருக்கிறது. என் தந்தைக்கு நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கும், இந்தத் தாய்த் திருநாட்டுக்கு நான் செய்ய வேண்டிய கடமையைச் செய்வதற்கும் இந்த உயிர் வேண்டியிருக்கிறது.

*குந்:* உங்களுடைய உயிர் இப்போது உங்களுடையதல்லவே.

*விக்:* நீ சொல்லியது ஒருவிதத்தில் அல்ல, பல விதத்திலும் உண்மை. மூன்று வருஷத்துக்கு முன்பு காஞ்சியிலும் மாமல்லபுரத்திலும் உன்னைப் பார்த்தபோதே என் உயிரை நீ உன்னுடையதாக்கிக் கொண்டாய்...

*குந்:* இது உண்மையானால் என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் ஓடப் பார்த்தீர்களே. அது எப்படி?

*விக்:* தவறுதான். அதற்குக் காரணம் நீ விடை கொடுக்காவிட்டால் போக முடியாதே என்ற எண்ணந்தான்.

*குந்:* நீங்கள் போவதை நான் ஏன் தடுக்க வேண்டும்...? உங்களுடைய கடமையைச் செய்வதற்கு நான் ஏன் குறுக்கே நிற்க வேண்டும்?

*விக்:* நான் எண்ணியது பிசகு என்று இப்போதுதான் தெரிகிறது... உன்னிடம் நான் எல்லாவற்றையும் முன்பே சொல்லியிருக்க வேண்டும்.

*குந்:* சொல்லியிருந்தால் நான் படகை அவிழ்த்து விட்டிருக்க மாட்டேன்.

*விக்:* இப்போது நான் உன்னிடம் தைரியமாக விடை கேட்கிறேன். இந்த நதியைத் தாண்டுவதற்குப் படகும், தாண்டிய பின் மாமல்லபுரம் போவதற்குக் குதிரையும் கொடுத்துதவ வேண்டும்.

*குந்:* கொடுக்கிறேன். ஒரு நிபந்தனை.

*விக்:* என்ன நிபந்தனை?

*குந்:* போன தடவை போனது போல் என்னைக் கரையில் விட்டு... நீங்கள் மட்டும் கப்பலில்

போய்விடக்கூடாது. என்னையும் அழைத்துக் கொண்டு போகவேண்டும்.

*இதைக் கேட்டதும் அளவற்ற வியப்புடன் குந்தவியின் கரத்தைப் பற்றித் தழதழத்த குரலில் பேசுகிறான்.*

*விக்:* தேவி! என்ன சொன்னாய்? என் காதில் சரியாய் விழுந்ததா? மகா பல்லவ சக்கரவர்த்தியின் ஏக புதல்வியான நீ, இந்தத் தேசப் பிரஷ்டனுடன் கடல் கடந்து வருவாயா?

*குந்:* உங்களுக்கேன் இவ்வளவு சந்தேகம்? பெண் குலத்தைப் பற்றியே நீங்கள் தவறாக நினைக்கிறீர்கள்.

*கையில் பெட்டியுடன் பொன்னன் வந்து அழைக்கிறான்.*

*பொன்:* மகாராஜா...

*விக்:* பொன்னா.. இந்தத் தேவிதான் படகை அவிழ்த்து விட்டு விட்டாராம். வேறு படகை தருவதாகச் சொல்லுகிறார்.

*பொன்:* எல்லாம் காதில் விழுந்தது மகாராஜா. இவ்வளவு தொல்லை யெல்லாம் என்னத்திற்கு?... தேவி சொல்வதை சக்கரவர்த்தி தட்டமாட்டார். தங்களைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லி...

*குந்:* என்ன சொன்னாய்? உங்கள் மகாராஜாவை மன்னிக்கும்படி சக்கரவர்த்தியிடம் நான்

சொல்ல வேண்டுமா? ஒரு தடவை அந்தத் தவறைச் செய்தேன். இனிச் செய்யமாட்டேன். இவர் தமது கையில் பிடித்த வாளின் வலிமையினால், ஒரு சாண் பூமியை வென்று ராஜாவானால் அந்தச் சாண் பூமிக்கு நான் ராணியாயிருப்பேன். உன்னைப் போல் இவர் படகோட்டிப் பிழைத்து, ஒரு குடிசையில் என்னை வைத்தால், உன் மனைவி வள்ளியைப் பால் நானும் இந்தக் குடிசையில் ராணியா யிருப்பேன்.

இவரை மன்னிக்கும்படியோ, இவருக்கு சோழ ராஜ்யத்தைக் கொடுக்கும்படியோ சக்கரவர்த்தியை ஒருநாளும் கேட்கமாட்டேன். எனக்காக வேண்டுமானால் என் தந்தையிடம் நான் பிச்சைக் கேட்பேன். இவருக்காக எதுவும் கேட்டு இவருடைய வீரத்துக்கு மாசு கற்பிக்க மாட்டேன்.

*அப்போது மாரப்பன் அங்கு வந்து விக்கிரமனை கைதாக்கிச் செல்கிறான். பொன்னனை அழைக்கிறாள் குந்தவி.*

*குந்:* பொன்னா... நீ உடனே போய் வள்ளியை அழைத்துக் கொண்டு இங்கே வா. நமக்கு அதிகமான வேலையிருக்கிறது. உங்கள் மகாராஜாவை எப்படியாவது விடுதலை செய்யவேண்டும். யாருக்கும் தெரியாமல் அவரை மாமல்லபுரத்துக்கு அனுப்ப வேண்டும். இந்த அமாவாசையன்று செண்பகத் தீவுக்குச் செல்லும் கப்பலில் அவரை ஏற்றிய பிறகு தான் நமக்கு நிம்மதி.

*பொன்:* உத்தரவு.

*போகிறான்.*

தாயும் மகனும் விக்கிமன் விலங்கிட்டு அழைத்துச் செல்லப்படும்போது பொன்னன், போலிக் கபாலிகர்கள் வேடத்தில் பலரைக் கொன்று ராஜ சேவகர்களைத் தாக்கி, விக்கிரமனை விடுதலை செய்து கொண்டு மகேந்திர மண்டபத்துக்கு ஓடுகிறான். அங்கே அருள்மொழியும் கபால பைரவனின் சிஷ்யன் குள்ளனும் தங்கியிருப்பதை அறிகிறான். உள்ளே ஓடுகிறான்.

*விக்:* அம்மா... அம்மா... அம்மா...!

*பொன்:* மகாராணி!

*அரு:* விக்கிரமா... விக்கிரமா...!

*பாய்ந்து வந்து விக்கிரமன் அவள் கரங்களைப் பற்றிக் கொள்ளுகிறான்.*

*விக்:* அம்மா... உங்களை இந்தக் கோலத்தில் பார்க்கத்தானா உங்களுக்கு நான் பிள்ளையாய்ப் பிறந்தேன்? உங்களை இந்த நிலையில் விட்டுவிட்டுச் செல்லத்தானா என் தந்தை உங்களிடம் என்னை வீரமகனாக வளர்க்கச் சொன்னார்?

*அரு:* விக்கிரமா...!

*விக்:* ஐயோ, வீரத்தால் வீழ்ந்து விட்ட மன்னரின் மக்கள் கோழைத்தனத்தால் வீழ்ந்து விட்டார்களே... அம்மா... சிம்மக்கொடி பறந்த சிராப்பள்ளிக் கோட்டையிலே புலிக்கொடி

ஏற்ற முயன்ற என்னை அவர்கள் காட்டிக் கொடுத்து விட்டார்களே அம்மா... என் தந்தையின் கனவை எப்படி நனவாக்குவேன்?

*அரு:* கவலைப்படாதே குழந்தாய், காலம் வழி காட்டும்.

*குள்:* ஹிஹி... காட்டாது, காலம் உங்களுக்கு வழி காட்டாது.

*விக்:* இவன் எப்படி இங்கே வந்தான்?

*அரு:* கபாலிகர் குகையிலிருந்து என்னைக் காப்பாற்ற சிவனடியாரின் ஆட்கள் வந்தபோது இவனையும் பிடித்துக் கொண்டு வந்தார்கள்.

*குள்:* ஹிஹி. என்னைப் பிடித்துக் கொண்டு வந்து என்ன பிரயோசனம்? என்னாலா காளியின் சாம்ராஜ்யத்தை கபால பைரவர் ஸ்தாபிக்கப் போகிறார்? ஹிஹி...

*விக்:* என்ன உளறுகிறாய்?

*குள்:* உளறவில்லை. உண்மையைச் சொல்லு கிறேன். நீங்கள் நினைப்பதுபோல் காலம் உங்களுக்கு வழிகாட்டப் போவதில்லை. கபால பைரவருக்குத் தான் வழி காட்டப் போகிறது. இன்றிரவு சிவனடியார் சிவலோகம் போகிறார். நாளைக் காலை மாகாளியின் சாம்ராஜ்யம் மாமல்லபுரத்தில் ஆரம்பமாகப் போகிறது... ஹிஹி ஹிஹி...

*அரு:* இங்கே வந்ததிலிருந்து. இவன் இப்படித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறான். விக்கிரமா! எப்பேர்ப்பட்ட மகான்? நமக்கு எத்தனை ஒத்தாசை செய்திருக்கிறார்? அப்பேர்ப்பட்ட வருக்கா இந்தக் கதி?

*விக்:* சிந்திக்க வேண்டிய விஷயம்தான். உடனே செயலாற்ற வேண்டிய விஷயமும்கூட.

*பொன்:* எப்படி முடியும்? நாளைப் பொழுது விடிவதற்குள் நாம் மாமல்லபுரம் போய்ச் சேரணும்.

*விக்:* சேராவிட்டால் என்ன? கப்பல் போய்விடும். அவ்வளவுதானே? பொன்னா! இப்பொழுதே கிளம்பு. போகலாம்.

*பொன்:* எப்படிக் கிளம்பறது?... எந்த இடத்தில் சிவனடியாரைக் கபால பைரவர் ஒளிச்சி வைச்சிருக்கான்னு யாருக்குத் தெரியும்?

*குள்:* ஹிஹி... எனக்குத் தெரியும். என்னைக் கட்டவிழ்த்து விடுங்கள். நான் வழி விடுகிறேன். ஹிஹி.

*விக்:* பொன்னா! இவனை உடனே கட்டவிழ்த்து விடு.

***பொன்னன் குள்ளனிடம் சென்று கட்டவிழ்த்து விடுகிறான்.***

சிவனடியார் கபால பைரவனால் காளிசிலைமுன் கட்டப்பட்டிருக்கிறார். சிவனடியார் கழுத்திலே கத்தி விழப் போகும்போது விக்கிரமன் பாய்ந்து தடுக்கிறான்.

*சிவ:* விக்கிரமா...!

*விக்:* பொன்னா! ஏன் நிற்கிறாய்? அவிழ்த்துவிடு அவரை.

*கபா:* நில்! அவசரப்படாதே பிள்ளாய்! ஹஹ் ஹா ஹா... உன்னைத்தான் நானும் எதிர்பார்த்தேன்.

*விக்:* என்னையா? நீரா...? எதற்காக எதிர்பார்த்தீர்?

*பைர:* இந்த தட்சிண பாரத தேசத்திலே இன்றிரவு காளி மாதாவின் சாம்ராஜ்யம் ஸ்தாபிதமாகப் போகிறது. அந்தச் சாம்ராஜ்யத்துக்கு உன்னை இளவரசனாக்க வேண்டுமென்பது மாதாவின் ஆக்ஞை.

*விக்:* நீர் சொன்னது உண்மையானால் முதலில் நான் செய்யப் போகும் காரியத்துக்குக் குறுக்கே நிற்காதீர்... இதோ கட்டுண்டு கிடக்கும் இந்தப் பெரியார் எங்கள் குலத்தின் நண்பர். எனக்கும் என் தாய்க்கும் எவ்வளவோ பரோபகாரம் செய்திருக்கிறார். இவரை விடுவிக்க வேண்டியது என் கடமை. என் உடம்பில் உயிரும் கையில் கத்தியும் உள்ளவரை இவரை விடுவிக்காமல் இருக்கமாட்டேன்.

*ஆவேசத்துடன் கூறியவண்ணம் சிவனடியாரைப் பிடித்திருக்கும் கயிற்றை வெட்ட முயலுகிறான்.*

*பைர:* விக்கிரமா...

*விக்கிரமன் திரும்பிப் பார்க்கிறான்.*

*பைர:* விக்கிரமா... இந்தப் போலிச் சிவனடியார், இந்த வஞ்சக வேஷதாரி, இந்தப் பொய் ஜடா மகுடதாரி யார் என்று அறிந்தால் இவ்விதம் சொல்லமாட்டாய். இவரைக் காப்பாற்று வதற்கு இவ்வளவு துடிப்புடன் நிற்கவும் மாட்டாய்.

*விக்:* வஞ்சகமா? வேஷமா? அப்படியானால் இந்தச் சிவனடியார் யார் என்று நீங்களே சொல்லுங்கள்.

*பைர:* நான் ஏன் சொல்லவேண்டும்? நீயே கேள். இந்த வேஷதாரியை நீர் யார் என்று கேள். தைரியமிருந்தால் பதில் சொல்லட்டும்.

*இதைக் கேட்டதும் பின்புறமிருந்து திடீரென்று சிறுத்தொண்டர் இறங்கி வந்து கூறுகிறார்.*

*சிறு:* விக்கிரமா...

நாலா பக்கமும் கபாலிகர்களைத் தாக்க வீரர்கள் சூழ்ந்து நிற்கின்றனர்.

*சிறு:* கபால மாலை அணிந்த இந்த வஞ்சக வேஷ தாரி யார் என்று முதலில் கேள்? தைரிய மிருந்தால் சொல்லட்டும்.

*பைர:* ஆ...

*அலறியபடி கீழே விழ, ஆரவாரத்தில் சிவனடியார் நழுவி விடுகிறார்.*

*சிறு:* மகாஜனங்களே! உங்களைப் போலவே நானும் மடமையில் ஆழ்ந்திருந்த காலம் ஒன்று உண்டு. அந்தக் காலத்தில் அன்பே உருவான சிவபெருமான் கையில் மண்டை ஓட்டுடன் காட்சி அளிப்பதும், கருணையே வடிவான பராசக்தி கழுத்தில் கபால மாலையுடன் காட்சியளிப்பதும், தத்வார்த்தம் கொண்டவை என்பதை அறியாமல் என் சொந்தப் பிள்ளையையே நான் கபாலிகர்களுக்குத் தத்தம் செய்தேன். அப்போது, சற்றுமுன் இங்கு கட்டுண்டு கிடந்த சிவனடியார்தான் என் கண்களைத் திறந்துவிட்டார்.

*குரல்:* எங்கே அந்தச் சிவனடியார்? யார் அந்தச் சிவனடியார்?

*சிறு:* அந்த மகா புருஷர் இந்த இடத்தை விட்டுப் போய்விட்டார். அவர் யார் என்பதை வெளியிட இன்று எனக்கு அதிகாரமில்லை. இன்னும் இரண்டு நாட்களில் உறையூரில் நடக்கப் போகும் வைபவத்துக்கு நீங்கள் வந்தால் அவர் யார் என்பதை அறியலாம். இப்போது பயத்தால் நடுங்கிக் கொண்டிருக்கும் இந்தப் பாதகன் யார் என்பதை மட்டும் தெரிந்து கொள்ளுங்கள். இருபது வருஷங்களுக்கு முன்னால் தமிழகத்தின் மேல் படையெடுத்த புலிகேசியின் சகோதரன் இவன். இவனுடைய சகோதரனைப் பழிவாங்குவதற்காக நானும் நரசிம்ம வர்மரும் தொடுத்த வாதாபிப் போரில் ஒரு கையை இழந்து சரணாகதி என்று

என்காலில் விழுந்தவன் இவன்! புலிகேசியை விடக் கொடியவனான இவனுடைய பெயர் கபால பைரவன் அல்ல. நீலகேசி!

*குர:* நீலகேசி! நீலகேசி!

*சிறு:* சக்கரவர்த்தியின் சாம்ராஜ்யத்துக்கு விரோதமாக உங்களையெல்லாம் தூண்டிவிட இவன் செய்த சதியே இந்த ரணபத்ரகாளி கோயில்.

*குர:* என்ன மோசம்! என்ன வஞ்சகம்!

*சிறு:* இல்லையென்றால் காளி பக்தனான இவன் ஆயிரக்கணக்கான கத்திகளையும் கட்டாரிகளையும் கொல்லிமலையின் உச்சியிலுள்ள குகைகளில் ஒளித்து வைப்பானேன்? சிவனடியாரின் அன்புக்கும் அனுதாபத்துக்கும் பாத்திரமான பார்த்திப மகாராஜாவின் பத்தினி அருள்மொழி தேவியைச் சிறைப்படுத்தி வைப்பானேன்?

*பைர:* பொய்... எல்லாம் பொய்... இதற்கெல்லாம் சாட்சி எங்கே?

*மார:* இதோ நான் இருக்கிறேன் சாட்சி. இவன் மகா ராஜாதி ராஜா நரசிம்ம பல்லவச் சக்கரவர்த்திக்கு எதிராகச் சதி செய்தான். அந்தச் சதியில் என்னையும் சேரும்படிச் சொன்னான். நான் மறுத்துவிட்டேன். அதன் பிறகு தேசப் பிரஷ்டனான விக்கிரமனையும் தன்னுடன் சேர்த்துக் கொள்ளப் பார்த்தான்.

*பைர:* மாரப்பா!

*மார:* ஆ!

***பைரவனை மாரப்பனும் மாரப்பனை குள்ளனும் குத்திக் கொன்று விடுகின்றனர். பல்லவ தூதன் சிறுத் தொண்டர் காதில் ஏதோ சொல்லுகிறான். அதைக் கேட்டு அவர் விக்கிரமனை அழைக்கிறார்.***

*சிறு:* விக்கிரமா... உன்னைச் சக்கரவர்த்தி உறையூருக்குக் கொண்டு போகும்படி கட்டளை யிட்டிருக்கிறார்.

*விக்:* எதற்காக?

*சிறு:* தேசப் பிரஷ்டனான நீ திரும்பி வந்தது குற்றமாம்.

*விக்:* நான் திரும்பி வந்தது குற்றமானால், உங்கள் சக்கரவர்த்தி என்னைத் தேசப்பிரஷ்டம் செய்ததும் குற்றம்தான் என்று நான் சொன்னதாகப் போய்ச் சொல்லுங்கள்.

*சிறு:* வீணாக ஆத்திரப்படாதே விக்கிரமா! இன்று நீ புரிந்த மகத்தான வீரச் செயலை மன்னர் மன்னன் உணரும்போது அவருடைய மனம் மாறாமல் போகாது... போ... அவர் கட்டளைப்படி உறையூருக்குப் போ. நானும் உன் தாயாருடன் அங்கு வருகிறேன். ***(சமாதானம் செய்கிறார். விக்கிரமன் போகிறான்.)***

## தந்தையின் பாசம்

*குந்தவியும் வள்ளியும் செண்பகத் தீவுக்குச் செல்லத் தயாராக இருக்கும்போது, அங்கே நரசிம்ம வர்மர் வருகிறார். குந்தவி தடுமாற்றமடைகிறாள்.*

*சிந்:* வாருங்கள் அப்பா! இத்தனை நாளாய் எங்கே போயிருந்தீர்கள்?

*நர:* அதிருக்கட்டும். நீ உறையூரிலிருந்து எப்போது வந்தாய்? எதற்காக இவ்வளவு அவசரமாய் வந்தாய்?

*குந்:* அதுவா... அது எனக்கே தெரியவில்லை அப்பா!

*நர:* சரி, இன்று சாயங்காலம் நான் உறையூருக்குக் கிளம்புகிறேன். நீயும் வருகிறாயா?

*குந்:* எதற்காக அப்பா?

*நர:* ரொம்ப முக்கியமான காரியங்களெல்லாம் அங்கே நடந்திருக்கின்றன. அருள்மொழி தேவி அகப்பட்டு விட்டார். அவரைக் கண்டு பிடித்துக் கொண்டு வந்தது யார் தெரியுமா? நீ அடிக்கடி சொல்வாயே யாரோ வேஷதாரி சிவனடியார் என்று, அவர்தான்.

*குந்:* இதுவரை அவரை ஒளித்து வைத்திருந்தது கூட அந்தச் சிவனடியார்தானோ என்னவோ?

*நர:* இன்னும் உனக்குச் சந்தேகம் தீரவில்லையே அம்மா. ராணியைக் கொண்டு போய் அந்தச் சிவனடியார் ஒளித்து வைத்திருக்கவில்லை.

மகா கபால பைரவன்தான் ஒளித்து வைத்திருந்தான்.

*குந்:* ஐயோ!

*நர:* அதுமட்டுமா? ராணியைக் காப்பாற்றப் போன சிவனடியாரை வேறு அவன் தீர்த்துக் கட்டப் பார்த்தானாம். கழுத்தில் கத்தி விழப்போகும் சமயத்தில் ரத்தின வியாபாரி வந்து அவரைக் காப்பாற்றினானாம்.

*குந்:* அதிசயமா யிருக்கிறதே!

*நர:* இது என்ன அதிசயம்? இன்னொரு அதிசயத்தைக் கேள்... இந்த ரத்தின வியாபாரி யார் தெரியுமா? என்னால் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்ட சோழநாட்டு ராஜகுமாரன். அவன் தாயாரையும் தாய்நாட்டையும் பார்ப்பதற்காக அம்மாதிரி வேஷம் போட்டுக் கொண்டு வந்தானாம். என்ன தைரியம்? என்ன துணிச்சல்?

*குந்:* அதிருக்கட்டும் அப்பா. அவர்கள் எல்லாரும் இப்போது எங்கே இருக்கிறார்கள்?

*நர:* இருக்க வேண்டிய இடத்தில்தான்... விக்கிரமன் இன்னா னென்பதைக் கண்டுபிடித்தவன் மாரப்ப பூபதி... அவனை விசாரணைக்காக காஞ்சிக்கு அனுப்பும்படி உன் தமையன் கட்டளை அனுப்பியிருந்தான்... நான் அதை மாற்றி உறையூருக்கே அவர்களைக் கொண்டு போகச் சொல்லியிருக்கிறேன்... நானே நேரில் வந்து விசாரணை நடத்துவதாகத் தெரிவித்

திருக்கிறேன். அதற்காகத்தான் உன்னையும் உறையூருக்கு அழைக்கிறேன்... வருகிறாயா குழந்தாய்? இதைக் கேட்டதும் குந்தவி தந்தையின் மடியில் தலை வைத்துக் கதறுகிறாள்.

*நர:* என்னம்மா! உனக்கு ஏன் இந்தத் துக்கம்? மனதில் ஏதோ வைத்துக் கொண்டு சொல்லா மலிருக்கிறாய்... என்னிடம் மறைப்பானேன்?... எதுவாயிருந்தாலும் சொல்!

*குந்:* சொன்னால் கோபித்துக்கொள்ள மாட்டீர்களே?

*நர:* நான் கோபித்துக் கொண்டால் உன்னை சமாதானம் செய்ய உன் அம்மாவா இருக்கிறாள்?... சொல்லம்மா, சொல்.

*குந்:* என்னை மன்னியுங்கள் அப்பா! என் கண்கள் செய்த குற்றம் அது... அன்றொரு நாள் காஞ்சி நகர் வீதியிலே அந்தச் சோழ ராஜகுமாரனை என் கண்கள் கண்டன. கண்டதும் அவர் என் கருத்திலே கலந்தார்... அன்றிலிருந்து அவர் என் நெஞ்சிலே நின்றார். நினைவிலே இடம் பெற்றார்.

அதற்குப் பின் ஒருநாள் மகேந்திர மண்டபத்திலே காய்ச்சலால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த அவரை அதே கண்கள் கண்டன. கண்டதும் நீரைச் சொரிந்து நின்றன... உள்ளம் உருகிற்று. உணர்ச்சி அவரைப் பல்லக்கில் ஏற்றி உபசரித்தது... வசந்த மாளிகையிலே அவர் என் வாழ்வின்

ஜீவனானார். நானும் அவருடைய வாழ்வின் ஜீவனானேன். எங்கிருந்ததோ வந்த மாரப்பன் எங்களைப் பிரித்தான். அவனிடமிருந்து அவரைத் தப்ப வைக்கப் பொன்னன் முயன்றான். உங்களிடமிருந்து அவரைத் தப்ப வைக்க நான் முயன்றேன். அதற்குள் நீங்கள் வந்து விட்டீர்கள்...

எது எப்படியானாலும் ஒன்று மட்டும் நிச்சயம். அப்பா... தெரிந்தோ தெரியாமலோ அந்தச் சோழராஜகுமாரனை என் நாதனாக வரித்துவிட்ட நான், வேறொருவரை நெஞ்சத்தாலும் நினைக்க மாட்டேன். உள்ளத்தாலும் தீண்டமாட்டேன். அப்பா, இது சத்தியம்!

*நர:* கவலைப்படாதே குழந்தாய்... இந்த உலகில் அன்பு ஒன்றுதான் சாசுவதமானது... மற்றதெல்லாம் அநித்யம்... இரண்டு இளம் உள்ளங்கள் அன்பினால் ஒன்று சேரும்போது அங்கே அன்பு வடிவமான கடவுளே சாந்நித்யமாயிருக்கிறான்... அவ்விதம் அன்பினால் சேர்ந்த உள்ளங்களுக்கு மத்தியில் நின்று தடை செய்ய யாருக்குமே பாத்தியதை கிடையாது... தாய் தகப்பனுக்குக் கூடக் கிடையாதுதான்...

ஆனால் குழந்தாய்... உனக்காகப் புகழ்பெற்ற பல்லவ குலத்தின் ராஜநீதியை மட்டும் என்னால் கைவிட முடியாது. அவன் செய்த குற்றத்துக்குத் தகுந்த தண்டனையும் அளிப்பேன். அதற்குப் பிறகும் நீ அவனை

மணக்க விரும்பினால் அதற்குக் குறுக்கே நான் நிற்கமாட்டேன் குழந்தாய், நிற்க மாட்டேன்.

*குந்:* சரி, தேசப் பிரஷ்டமானவர்கள் திரும்பி வந்தால் என்ன தண்டனை?

*நர:* சாதாரணமாக மரண தண்டனை தான் விதிப்பது வழக்கம்... ஆனால் விக்கிரமன் விஷயத்தில் யோசிக்க வேண்டிய அம்சங்கள் பல இருக்கின்றன. எல்லாவற்றையும் விசாரித்து எது நியாயமோ அதைச் செய்யலாம். வா... குழந்தாய்.

*போகிறார்கள்.*

*யார் இந்தச் சிவனடியார்? உறையூரில் பல்லவ சக்கரவர்த்தியின் தர்பாரில் சிறுத்தொண்டரும் சிவனடியாரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். சிம்மாசனம் காலியாக இருக்கிறது. விக்கிரமன் குற்றவாளிக் கூண்டிலே நிற்கிறான்.*

*சிறு:* சபையோர்களே! சக்கரவர்த்தி சபைக்கு வர இன்னும் சிறிது நேரம் ஆகும். அதுவரை இந்தச் சபை கூடியதன் நோக்கம் என்னவென்பதை உங்களுக்கு எடுத்துரைக்கும்படி அவர் என்னைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

உங்களுக்கு முன்னால் விசாரணைக்கு நிறுத்தப்பட்டிருக்கும் விக்கிரம சோழர், சக்கரவர்த்தியின் கட்டளையை மீறியது குற்றமானாலும் அதற்கு இவர் மட்டும் பொறுப்பாளி அல்ல... இதோ இருக்கும் என்

தோழர் அதற்குப் பெரும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முன்வந்திருக்கிறார்.

*ஒரு:* யார் இந்தப் பெரியவர்?

*இன்:* விக்கிரம சோழர் விஷயத்தில் இவர் பொறுப்பு ஏற்றுக் கொள்ளக் காரணம்?

*சிறு:* சொல்லுகிறேன் சபையோர்களே, சொல்லுகிறேன். அன்பு மட்டும் மனிதனை அடிமையாக்குவதில்லை. வீரமும் மனிதனை அடிமையாக்கி விடுகிறது என்பதற்கு உதாரண புருஷராக விளங்குபவர் இந்தச் சிவனடியார். இல்லை யென்றால் போர்க்களத்தில் வீர சொர்க்கம் அடைவதற்கு முன்னால் பார்த்திப சோழரை இவர் பார்த்திருக்க மாட்டார்.

உங்கள் கனவை நனவாக்குகிறேன் என்று அவர் மடிவதற்கு முன்னால் உறுதியளித்திருக்க மாட்டார். சிராப்பள்ளி மலை கொடிப் போரிலும், காஞ்சி அரசவையிலும் விக்கிரம சோழர் காட்டிய வீரத்தைக் கண்டு சிந்தை குளிர்ந்திருக்க மாட்டார். கரிகாலச் சோழர் கண்ட கன்னித் தீவுகளிலே பகைக்கஞ்சி வாழ்ந்த பழந்தமிழர் துயர்போக்கித் தலைக்கஞ்சேன்; தாயின் துயர் தீர்ப்பேன்... என்று வந்த தனயனைத் தடுத்தாட் கொண்டிருக்க மாட்டார்.

கடலில் மூழ்கிக் கபால பைரவனின் சூழ்ச்சிக் கிரையாகி, கண் காணா இடத்தில் புண்பட்ட மனத்துடன் புலம்பிக் கொண்டிருந்த பார்த்திப மன்னரின் பத்தினியைக் காப்பாற்றப் போய், தம் உயிரையே பலி பீடத்தில் பணயம் வைத்திருக்க மாட்டார்.

இத்தனைக்கும் காரணமாயிருந்த இவரைக் காப்பாற்றுவதில்தான் என்னை முந்திக்கொண்டு விட்டார் இந்த இளவரசர். அதுவும் எந்த நிலையிலே? சிறைக் கஞ்சி, சிரச்சேதத்துக்கு அஞ்சி ஓட வேண்டிய நிலையிலே! இவை யனைத்தையும் மனத்தில் கொண்டு இவருக்கு ஏற்ற தீர்ப்பை வழங்க வேண்டிய நிலையில் உள்ள நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

போர்க்களத்தில் பார்த்திப மகாராஜாவுக்குக் கொடுத்த வாக்குறுதியை இவர் நிறைவேற்றி விட்டதாக நினைக்கிறீர்களா? அவர் சொன்னபடி விக்கிரம சோழர் வீர புருஷராக வளர்க்கப்பட்டி ருக்கிறார் என்பதை நம்புகிறீர்களா?

*சபை:* ஆம்.. ஆம்.

*சிறு:* அப்படியானால் தந்தைக்குத் தந்தையாக இருந்து, தாய்க்கும் தக்க துணையாயிருந்து தன்னையும் வீர புருஷராக்கிய இந்த வேஷதாரியின் உண்மை சொரூபத்தை அறிந்து கொள்ள விக்கிரம சோழர் மட்டுமல்ல, குந்தவிதேவியார் மட்டுமல்ல, எல்லோருமே ஆவலாயிருக்கிறீர்கள், இல்லையா? இதோ பாருங்கள்.

***சிவனடியார் வேஷத்தைக் கலைக்கிறார். யாவரும் திடுக்கிடுகின்றனர். பல்லவ சக்கரவர்த்தி நரசிம்மவர்மர் அங்கே நிற்கிறார்.***

*குந்:* அப்பா!

***அவரைத் தாவி அணைக்கிறாள்.***

*சிறு:* சபையோர்களே! இன்னும் ஒரு காரியம் இருக்கிறது. மாமல்ல சக்கரவர்த்தி தர்ம சிம்மாசனத்தில் அமர்ந்து விக்கிரம சோழரின் குற்றத்தைப் பற்றி முடிவான தீர்ப்பளிப்பார்.

கனவு பலித்தது

*சக்ரவர்த்தி கோலத்தில் நரசிம்மவர்மர் வந்து அமருகிறார்.*

*குரல்:* தர்ம ராஜாதி ராஜ மாமல்ல பல்லவ சக்கரவர்த்தி வாழ்க!

*சபை:* ஜயவிஜயீ பவ! ஜய விஜயீ பவ!

*நரசிம்:* விக்கிரம சோழரைப் பற்றி உங்களுடைய அபிப்ராயம் இன்னதென்பதைத் தெரிந்து கொண்டேன். தேசப்பிரஷ்ட தண்டனைக் குள்ளானவர்கள் திரும்பி வந்தால், அதற்குத் தண்டனை சிரசாக்கினை தான் கொடுத்தாக வேண்டும். அந்தத் தண்டனையைக் கொடுப் பதற்கு முன்னால் இன்னொரு தண்டனை யையும் நான் இவருக்குக் கொடுக்க வேண்டி யிருக்கிறது... அதுதான் ஜன்ம தண்டனை.

இதோ இளவரசர் விக்கிரமருக்காகப் போலிச் சிவனடியாரைக் கண்டுபிடித்து அவருடைய பொய் ஜடா மகுடத்தைப் பிய்த்தெறி வதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்த என் அருமை மகள் குந்தவியைக் கல்யாணம் செய்துகொண்டு கடைசிவரை கட்டிக் காக்க வேண்டுமென்ற ஜன்ம தண்டனையை

இவருக்கு அளிக்கிறேன். அத்துடன் புராதன சோழ மகுடத்தை விக்கிரமசோழர் இனிமேல் தனியாகவே தாங்க வேண்டுமென்ற சிராசாக்கினையையும் நான் இவருக்கு விதிக்கிறேன்.

*பொன்:* விக்கிரம சோழ மகாராஜா வாழ்க!

*எல்:* ஜய விஜயீ பவ!

*சிம்மாசனத்தில் விக்கிரமனும் குந்தவியும் முடிசூடியும், மாலை சூடியும் உட்கார்ந்திருக்கின்றனர். அருகில் நரசிம்ம சக்கரவர்த்தி முதலியோர் இருக்கின்றனர். இரண்டு பெண்கள் ஆரத்தி எடுத்துச் சென்ற பின்னர் நரசிம்ம வர்மர் விக்கிரமனிடம் கூறுகிறார்.*

*நர:* குழந்தாய்... எக்காலத்துக்கும் பார்த்திப மகாராஜாவின் புதல்வன் என்னும் பெருமைக்குப் பங்கமில்லாமல் நடந்து கொள்வாயாக! அதற்கு வேண்டிய மனோதிடத்தைப் பகவான் உனக்கு அருளட்டும்.

*ஆசீர்வதிக்கிறார். விக்கிரமன் குந்தவி எழுந்து அவரை வணங்குகின்றனர்.*

*பார்த்திப மகாராஜாவின் கனவு பல ஆண்டுகளுக்குப் பிறகு பலித்தது. விக்கிரமன் புலிக் கொடியை ஏற்றிப் பிடித்து, சுயேச்சை மன்னனானான். அவனுக்குப் பின்னர், பல காலம் கழித்து சோழ சிம்மாசன மேறிய ராஜராஜ சோழனும், அவனது மகன் ராஜேந்திர சோழனும் பார்த்திபன் கண்ட கனவை நினைவாக்கினார்கள். புலிக்கொடி தரணியெங்கும் தன்னிகரில்லா ஆட்சி செலுத்தியது.*

நாற்பது ஆண்டு இலக்கிய வாழ்க்கையில் விந்தன் சரித்திர தொடர்பான கதைகள் ஒன்றுகூட எழுதியதில்லை. எனினும் பேராசிரியர் கல்கியின் தொடர்பினாலும் அவரின் எழுத்தின்மேல் உள்ள மதிப்பினாலும் பார்த்திபன் கனவு படத்திற்கு வசனம் எழுத ஒப்புக் கொண்டார் என்று கருதலாம். ஏனெனில் தமிழில் சரித்திர நாவல்கள் எழுதியவர்களை அவர் 'தமிழ்நாட்டு வெட்டியான்கள்' என்று கிண்டல் செய்து வந்தார்.

பார்த்திபன் கனவு படத்திற்குச் சிறப்பான முறையில் வசனம் எழுதியுள்ள விந்தன், கருத்தாழமிக்க பாடல் ஒன்றையும் எழுதியுள்ளார்.

*இதய வானின் உதய நிலவே*
*எங்கே போகிறாய்? - நீ*
*எங்கே போகிறாய்?*

என்று நீள்கிறது இப்பாடல்.

*(திரைவளர்த்த தமிழ்*
T.V. *ராம்நாத் – 1987)*

★ ★ ★

# 11

1960களில் திருவனந்தபுரம் 'மேரிலாண்டு' சுப்பிரமணியமும் சுந்தரமும் இணைந்து 'சொல்லு தம்பி சொல்லு!' என்ற படத்தைத் தயாரித்தனர். வசனம் விந்தன். இந்தப் படம் திரைக்கு வந்து போனதே தெரியவில்லை.

இதே காலகட்டத்தில் பிரபல படத்தயாரிப்பாளர் களான பத்மினி பிக்சர்ஸ் தயாரித்த 'குழந்தைகள் கண்ட குடியரசு' என்ற படத்திற்கு வசனம் எழுதிய விந்தனுக்கு, பத்மினி பிக்சர்ஸார் ஒரு கணிசமான தொகையைக் கொடுத்தார்கள். அந்தப் பணத்தைக் கொண்டே குடியிருக்க ஒரு மனையை வாங்கினார். இதன் மூலம் விந்தன் குடும்பத்தினரும் குடியரசு கண்ட மக்கள் போல மகிழ்ந்தனர்.

**அதன் கதைச் சுருக்கம்:**

நாடு பூரண சுதந்திரத்தை அனுபவிக்க, குடியரசு ஆட்சி முறையை மக்களுக்கு வழங்கத் தீர்மானித்தார் மன்னர் மதிவாணன். அதை அறிந்த மந்திரிகள் தங்கள் சுகவாழ்வு பறிபோகிறதே என்று மன்னரையே அழிக்கத் திட்டமிட்டார்கள்.

மக்களுக்கு முன்பாக மண்டபத்தின் மீதிருந்து பேசிக் கொண்டிருந்தார் மன்னன். திடீரென்று மண்டபம் வெடித்துச் சிதறியது. அரசனும் அரசியும் போன இடம் தெரியவில்லை!

மந்திரி யாயிருந்த சொல்லேந்தி மன்னனாக முடி சூட்டிக் கொண்டான்.

வெடி விபத்திலே சிக்கிய அரசி ஒரு கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு மன்னர் திரும்பி வருவார் என்று மக்களிடம் கூறி, அங்கேயே தலைமறைவாக வாழ்ந்து வந்தார்.

சொல்லேந்தியின் ஆட்சியில் வரி என்னும் பெயரால் மக்கள் சித்ரவதை செய்யப்பட்டனர். எதிர்த்துப் பேச எவருக்கும் துணிவில்லை, ஒருவனைத் தவிர. அவன்தான் பத்தே வயதான தேன்மொழியின் வீரப்புதல்வன் வில்லேந்தி. 'மன்னன் ஆட்சியை ஒழித்து மக்களாட்சியை நிலைநாட்டுவதே தன் இலட்சியம்' என்று வீர முழக்கமிட்டான் அந்த இளஞ் சிங்கம். அவனைப் பிடித்து பாதாளச் சிறையில் தள்ளினான் கொடுங்கோலன்.

அன்றுதான் தந்தையைப் பற்றிய ரகசியத்தை வில்லேந்தியிடம் கூற வேண்டிய நாள் பொங்கல் திருநாள்.

சூரியன் மறைவதற்குள் ரகசியத்தை மகனிடம் கூறவேண்டுமே என்று தேன்மொழி துடியாய்த்

துடித்தாள். சிறையிலிருந்து தப்பித்து வீட்டை நோக்கிப் பறந்தான் வில்லேந்தி. தாயார் ரகசியத்தை அவனிடம் கூற முயன்றாள். ஆனால்... அது மறந்து போய்விட்டது. ஆமாம்; அதற்குள் சூரியன் மறைந்துவிட்டான். நெஞ்சு வெடிக்கக் கத்தினாள் தேன்மொழி. அன்னையின் இழந்த ஞாபக சக்தியைத் திரும்பக் கொண்டுவரும் இரத்தினத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு அதைத் தேடிப் புறப்பட்டான் வில்லேந்தி.

வெற்றியோடு திரும்பி வந்த மகனுக்குக் கிடைத்த வரவேற்பு தாயார் கொடுங்கோலன் சொல்லேந்தியால் கைது செய்யப்பட்டுச் சிறையிலே கிடக்கிறாள் என்பதுதான். தாயை விடுவிக்கக் கிளம்பினான் வில்லேந்தி. அவனையும் கைது செய்ய வந்தார்கள் சிப்பாய்கள். தங்கள் நண்பனைக் காப்பாற்ற, "நான் தான் வில்லேந்தி; நான்தான் வில்லேந்தி!" என்று அந்தக் கிராமத்திலுள்ள அத்தனைச் சிறுவர்களும் கூச்சலிட்டார்கள். குழப்ப மடைந்த சிப்பாய்கள் எல்லாரையும் அரசன் முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

வில்லேந்தியைக் கண்டுபிடிக்க மன்னனின் மூளையில் ஒரு யோசனை உதித்தது. சிறையில் கிடக்கும் தேன்மொழியை இழுத்து வர உத்தர விட்டான். மகனைக் காட்டிக் கொடுக்க வேண்டாம் என்பதற்காகத் தன் கண்களையே போக்கிக் கொண்டாள் அன்னை! அப்படியே அவளை இழுத்து வர உத்தர விட்டான் சொல்லேந்தி.

கண்ணிழந்த தாயைக் கண்ட வில்லேந்தி, தாவிப் பறந்து தாயைக் கட்டிக்கொண்டு அலறினான். அவர்கள் இருவரையும் அடுத்த நாள் காலையில் தீக்கிரையாக்கும்படி உத்தரவிட்டான் அரக்கன் சொல்லேந்தி.

பொழுது விடிந்தது. தாயையும் மகனையும் விறகுக் குவியனுக்கு நடுவே நிறுத்தித் தீ வைக்க முனைந் தார்கள். திடீரென்று ஆயிரமாயிரம் குழந்தைகள் தோன்றினார்கள் அங்கே! சொல்லேந்தியின் சூழ்ச்சிகளை யெல்லாம் தகர்த்தெறிந்தார்கள்...

**குழந்தைகள் கண்ட குடியரசு** மாயாபுரி மக்களின் மணி அரசாகியது. மங்களம்.

‘குழந்தைகள் கண்ட குடியரசு’ சிறுவர்களுக்கு வீரத்தை உண்டாக்கும் ஒரு கற்பனைக் கதை. ஆரம்ப காலத்தில் ‘பாப்பா மலர்’ பகுதிக்குக் கதைகள் எழுதி பக்குவப்பட்ட விந்தன் இப்படத்திற்குச் சிறப்பான முறையில் வசனம் எழுதினார். படமும் ஓரளவு வெற்றி பெற்றது.

சினிமாத் துறையை விந்தன் மறக்கா விட்டாலும், அவரைச் சினிமாத் துறை இத்துடன் கை விட்டு விட்டது!

★ ★ ★

சினிமாவில் ‘கதைச் சொல்லிகள்’ ஏராளம் பேர். சினிமாவில் காபி கொடுக்கும் வேலை கிடைத்தாலும்

போதும் என்று உள்ளே நுழைந்தவர்கள் பலர் இன்று சினிமா தயாரிப்பாளர்களாகவும், கதாசிரியர்களாகவும், இயக்குநர்களாகவும் மாறிவிட்டார்கள். இந்தக் கூட்டத்தில் விந்தன் என்ன செய்ய முடியும்?

விந்தனுக்கு கதை மட்டுமே எழுதத் தெரியும். வேறு என்ன தெரிந்திருக்க வேண்டும்? அவருக்கு முதலில் கதை சொல்லத் தெரிந்திருக்க வேண்டும். அதுவும் கதையை விதவிதமாகச் சொல்லத் தெரிந்திருக்க வேண்டும். முதலில் கதாநாயகனுக்கு ஏற்ற மாதிரி, அவர் இரண்டு மூன்று பெண்களைக் காதலிக்கிற மாதிரி, அதற்கும் மேலே கதாநாயகன் வீட்டுக்குப் போய் கதை சொல்ல வேண்டும்.

இந்த முறையெல்லாம் கேட்பதற்கே விந்தனுக்கு அருவருப்பாக இருந்தது. அவர் சினிமாவிற்குக் கதை எழுத மறந்துவிட்டார் என்று ஒரே வரியில் சொல்லி முடித்து விடலாம். ஆனால் அப்படி செய்யவில்லை விந்தன். அவருக்கு சினிமா மயக்கம் இருந்தது .

சினிமாவில் விந்தனுக்கு இருந்த மயக்கம் அவரை சும்மா விடவில்லை. சொந்தமாக சினிமா கம்பெனி ஆரம்பிக்கத் தூண்டியது, புதுமைப்பித்தன் 'தினகரி' பிலிம்ஸ் ஆரம்பித்ததுபோல.

சுயமரியாதைக்காரரான விந்தன் அத்துறையில் சுடர்விட முடியாமல் போனது அவருக்கு ஒரு வகையில் வெற்றி என்றே கருதலாம். ஆம், சினிமாவிற்கு அவராக வரவில்லை; அழைத்து வந்தார்கள்.

அத்துடன் அவர் சினிமா கம்பெனி அறையில் அமர்ந்து வசனங்களை எழுதிக் கொடுத்துவிட்டு வந்தவர். ஏதேனும் மாற்றம் திருத்தம் இருந்தால் அதையும் அறையில் இருந்தபடியே எழுதிக் கொடுப்பார்.

சினிமாவில் எழுத்தாளனுக்கு என்ன மரியாதை தரப்படுகிறது என்பதை அவர் தெரிந்து வைத்தி ருந்தார். இளங்கோவன் எழுதிய இடத்தில் அவருக்கு தான் முதல் மரியாதை. அவருக்கு முன்னால் எவரும் உட்காரமாட்டார்கள். புகை புகைக்க மாட்டார்கள். அவர் சொல்வதை, எழுதுவதை வேதமாகக் கருதினார்கள். அப்படிப்பட்டவர் நடிகர்களின் ஆதிக்கம் வளர்ந்த காலத்தில் அவரே பின்வாங்கி விட்டார். பின்னர் சினிமாவே அவரை மறந்துவிட்டது!

சினிமாவில் நடிகர்கள் ஆதிக்கம் பெருகி விட்டதை எண்ணிப் பார்த்து வருத்தப்படும் எழுத்தாளர்களுக்கு விரைவில் ஒரு முடிவு ஏற்படும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

விந்தனுக்கு சினிமா உலகம் கதவை மூடிக் கொண்டாலும், அவருடைய நோக்கங்கள், போக்குகள் அங்கே அரங்கேறின. அதன் காரணமாகப் பல இளம் எழுத்தாளர்கள் புறக்கணிக்கப்பட்டனர். சிலர் வீறுடன் நின்று வெற்றி கண்டனர். அவர்கள் மூலம் எழுத்தாளனின் சுயமரியாதை காப்பாற்றப் பட்டது என்று சொல்லலாம்.

விந்தனுக்கு இத்தகைய புகழ் மாலைகளால் ஜீவிக்க முடியவில்லை எனினும் போராடவே செய்தார். அவரின் போராட்டக் கூர்முனை மங்கிவிடாமல் பாதுகாக்கப்பட்டது. அதுவே அவரின் பலமும் பலவீனமும் ஆகும்.

சினிமாவிலிருந்து விலகி அதனுடன் முட்டி மோதி வெற்றி காண விரும்பாதவர்கள் பலர். அவர்களில் ஒருவர் விந்தன்.

எழுத்துலகில் பல போராட்டங்களைக் கண்ட விந்தன், சினிமாவில் அத்தகைய போராட்டங்களைத் தொடங்க விரும்பவில்லை. கடைசியாக சினிமாவின் மேல் கோபம் குறையாமல் இருந்தது என்றே சொல்லவேண்டும்.

விந்தன் சினிமாவின் பேரில் கொண்டிருந்த கோபம் மிகச் சாதாரணமானது. அவரால் சினிமாவையும் அதில் ஆதிக்கம் செலுத்தும் நடிகர்களையும் அடக்க முடியாததுதான். எனினும் அவரின் கோபத்தின் வெளிப்பாடே பல சாதனைகள் செய்ய ஆரம்பித்தன.

விந்தனின் கோபம் தணிந்து அவர் சினிமாவைத் திரும்பிப் பார்க்கத் தொடங்கினார். அப்போது அவர் முன்னால் சினிமா கம்பீரமாக எழுந்து நின்றது. அதன் கம்பீரமும் கலையழகும் தன் கால் தூசு என்று கருதினார். நடிகர்களின் நடமாட்டத்தை ஊன்றிக்

கவனித்தார். அவர் உள்ளம் கொதித்தது. தயாரிப்பாளர் ஒரு மனிதன் என்பதை மறந்து அவனிடம் வாங்கிய வேலைகள் கீழ்த்தரமானவை. எதையும் பொருட் படுத்தாமல் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற வெறியில் அவர்கள் செயல்பட்டாலும் அதைப் பார்த்தவர்களுக்குக் கோபம்கோபமாக வந்தது.

விந்தன் சினிமாவில் வேலை செய்யாவிட்டாலும் அவரின் சிந்தனைகள் முழுவதும் சினிமாவைச் சுற்றிச் சுற்றி வந்தது. சினிமாவில் சூழ்ந்துள்ள அழுக்குகள் நீங்கி அது பளிச்சென்று ஒளிவீச வேண்டும் என்று எதிர்பார்த்தார். ஆனால் அவரின் கனவுகள், எதிர் பார்ப்புகள் எல்லாம் பழங்கனவாய்ப் போய்விட்டன!

இடதுசாரி நோக்குடைய கதாசிரியர், இயக்குநர், நடிகர் இந்த மூன்று பேரும் ஒன்று சேர்ந்து திரைத் துறையில் ஒரு திருப்புமுனையை உண்டாக்குவார்கள் என்ற எதிர்பார்ப்புகளை அரசியல் குறுக்கீடுகள் (இடதுசாரிகளின் சிந்தனையைத்)· திசை திருப்பி விட்டன!

அடுத்து நடிகர்கள் எம்.எல்.ஏ.க்கள் ஆனார்கள்; பிறகு முதல்வரானார்கள். அவ்வளவுதான்! நாடே நடிகர்கள் பக்கம் சாய்ந்துவிட்டது.

★ ★ ★

1970களில் திரை உலகில் புதிய அலை ஒன்று வீசியது. இதை அனைவரும் வரவேற்றார்கள்.

திரைத்துறையிலோ பத்திரிகைத் துறையிலோ முன் அனுபவம் இல்லாத பலர், கதை, வசனம், இயக்கம் என்று அறிமுகம் ஆனார்கள். முதல் படம் வெற்றி பெற்ற பின்னர் அடுத்த படத்தில் கதாநாயகனாக நடிக்கவும் செய்தனர். இதையெல்லாம் பார்த்த கல்லூரிப் பேராசிரியர்கள், பொறியாளர்கள், டாக்டர்கள் ஆகியோர் சினிமாவுக்குப் பாடல்கள் எழுத கோடம்பாக்கத்துக்கே குடிபெயர்ந்தார்கள்.

எழுதுவதையே தொழிலாகக் கொண்ட விந்தன் வேலை இல்லாமல் இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

★ ★ ★

# 12

எழுத்தாளர்கள் பலர் ஆரம்பத்தில் கவிதை எழுதவே பழகினார்கள். விந்தனும் ஆரம்பத்தில் கவிதை எழுதப் பழகியவர்தான்.

சுதேசமித்திரன் பத்திரிகையில் கவிதைகள் எழுத ஆரம்பித்தவர் அந்தக் கவிதை உள்ளத்தோடு 'கல்கி' பத்திரிகையில் குட்டிக் கதைகள் எழுதினார். சிறுகதைகளுக்கு முக்கியத்துவம் அளித்த 'கல்கி'யில் விந்தனும் கதைகளே எழுதினார். எனினும் அவருடைய கதைகளில் குறிப்பாக,பாலும் பாவையும் நாவலில் பல இடங்களில் கவிதை நயத்தோடு வசனங்கள் அமைந்திருப்பதைக் காணலாம்.

விந்தன் சினிமாவுக்குப் பாட்டு எழுத வந்த காலத்தில் கண்ணதாசன் பிரபலம் ஆவில்லை. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் சினிமாவுக்கு வராத காலம்.

அன்பு படத்தில் விந்தன் நாற்பது வரிகள் கொண்ட ஒரு நீண்ட பாடலை எழுதியுள்ளார். அந்தப் பாடல் மெட்டுக்காக எழுதிய பாடலாகத் தெரிய வில்லை. பாடலுக்குத் தனியாக மெட்டமைத்ததாகத் தான் தெரிகிறது.

*சுத்தாத இடமில்லே கேட்காத பேரில்லே*
*சோத்துக்கு வழிகாட்ட ஆளில்லே*
*செத்தபின்பு சிவலோகம் செல்ல வழிகாட்டும்*
*பித்தர்கள் ஏனிந்த நாட்டிலே?*

என்று தொடங்கும் இந்தப் பாடலில் விந்தன், பத்து கதைகளில் சொல்ல வேண்டிய சமூகக் கொடுமைகளை, மனித நேயமற்ற மனிதர்கள் ஏழைகள் பேரில் கடவுள் காட்டும் கஞ்சத்தனத்தைப் பின்னும் பிற சமூகச் சீர்கேடுகளைச் சாடுகிறார்.

சினிமாவில் மணிப்பிரவாள நடையில் அதாவது வடமொழி ஆங்கிலம் கலப்புடன் பாடல்கள் வந்து கொண்டிருந்த காலத்தில் எளிய தமிழில் கதைகள் எழுதி வெற்றியடைந்த விந்தன், இப்பாடலையும் எளிய தமிழில் எழுதி வெற்றி பெற்றார் என்றே சொல்லலாம்.

அன்பு, கூண்டுக்கிளி, குலேபகாவலி, பார்த்திபன் கனவு போன்ற படங்களுக்குப் பாடல்கள் எழுதிய விந்தனை, சினிமாத்துறையில் விந்தனுக்கு முன்னால் பாடல்கள் எழுதி கவி கா. மு. ஷெரீஃப், உவமைக் கவிஞர் சுரதா போன்றவர்கள் மிகவும் பாராட்டினார்கள். விந்தன் இப்படி சில பாடல்களை சினிமாவுக்கு எழுதினாலே போதும். சினிமா பாடல் ஆசிரியர்களில் விந்தன் முன்னணியில் நிறுத்தப்படுவார் என்றும் சொன்னார்கள்.

நாட்டில் அரிசிப்பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் விந்தன் 'அரிசி' என்னும் தலைப்பில் குமுதம் பத்திரிகையில் கவிதை ஒன்று எழுதினார். அந்தக் கவிதைக்கு ஏராளமான பேர் வரவேற்பு.

விந்தன் விரும்பிப் படித்த தமிழ்க் கவிஞர்களில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, கவிஞர் தமிழ் ஒளி போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

1954ஆம் ஆண்டில் விந்தன் 'மனிதன்' என்னும் மாத ஏட்டை ஆரம்பித்தார். முதல் இதழில் புத்தர்பிரான் ஆட்டுக்குட்டியை அணைத்தவாறு உள்ள படத்தை வெளியிட்டார். அதற்கு ஏற்ற வண்ணம் கவி மணியின் பாடல் ஒன்றையும் வெளியிட்டார். பாரதி தாசனுக்குப் 'பொன்னி' இதழ் பொன்விழா மலர் வெளி யிட்டபோது, ஒப்பற்ற கவிஞர்; உயிருள்ள கவிஞர் என்று பாராட்டிக் கடிதம் எழுதினார்.

மனிதன் இதழில் பணியாற்றிய கவிஞர் தமிழ் ஒளியைப் பேச்சுக்குப் பேச்சு 'அவன் ஒரு இலக்கிய மேதை' என்று பாராட்டுவார்.

இதன்மூலம் விந்தனின் மனம் கவர்ந்த கவிஞர்கள் யார் என்பதை அடையாளம் காணலாம்.

1960களில் விந்தனுக்கு நல்ல வாய்ப்பு கிடைத்தது, தம் கவிதை ஆற்றலை வெளிப்படுத்த.

'தினமணி கதிர்' பத்திரிகையில் உதவி ஆசிரியராக விந்தன் பணியாற்றிய காலத்தில் அதன் ஆசிரியர் சாவி, மகாபாரதக் கதையைக் காவியமாக எழுதுமாறு விந்தனைப் பணித்தார். அதிக அளவில் கவிதைகள் எழுதாத விந்தன் மிகவும் துணிச்சலுடன் ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு, 'பாட்டில் பாரதம்' என்னும் தலைப்பில் மரபுக்கவிதை வழியில் காவியத்தை எழுதினார்.

இந்த இடத்தில் ஒரு தகவல். கவிஞர் தமிழ்ஒளியை ஒரு பத்திரிகை ஆசிரியர், 'மாதம் ஒரு கதை எழுதுங்கள்; பணம் அதிகம் கிடைக்கும்' என்றார். பத்திரிகை ஆசிரியரின் நல்ல மனத்தைப் புரிந்து கொள்ளாத கவிஞர், என் கவிதை ஆற்றலை முடக்க முயற்சிக்கிறார் என்று முரட்டுத்தனமாக அந்தப் பத்திரிகைக்குக் கதையோ கவிதையோ எழுதுவதை அடியோடு நிறுத்திவிட்டார்.

'கவிஞர் தமிழ்ஒளி கவிதை எழுதுவது போல் கதையும் நன்றாக எழுதுவார். அதனால்தான் சொன்னேன்' என்று பத்திரிகை ஆசிரியர் வருத்தப் பட்டார்.

சிறந்த சிறுகதை ஆசிரியரான விந்தன், ஆசிரியரின் கருத்தைத் தவறாகப் புரிந்துகொள்ளாமல் 'பாட்டில் பாரதம்' காவியத்தைப் பலர் பாராட்டும்படி எழுதினார். 'தினமணி' ஆசிரியர் ஏ.என். சிவராமன் எவரையும் எளிதில் பாராட்டமாட்டார். அப்படிப்பட்டவர் வாரா வாரம் வெளிவந்த **பாட்டில் பாரதம்** தொடரைப் படித்து விட்டு விந்தனை வெகுவாகப் பாராட்டுவாராம்.

பெரியார் ஈ.வெ.ரா.வின் பகுத்தறிவுக் கொள்கை யிலும் பொதுவுடைமைக் கருத்துக்களிலும் ஆழ்ந்த பற்றுடைய விந்தன், கல்கியில் ராஜாஜி எழுதிய **பஜகோவிந்தம்** என்ற புத்தகத்துக்கு மறுப்பாக, மக்கள் விழிப்படைந்து பகுத்தறிவு பெறுவதற்கு ஏதுவாகப் **'பசிகோவிந்தம்'** என்ற புத்தகத்தை எள்ளல் தன்மையுடன் கவிதையில் எழுதினார்.

விந்தனின் பசிகோவிந்தம் புத்தகத்துக்கு இடது சாரி இலக்கிய வாதிகளிடையே பெரும் வரவேற்பு கிடைத்தது. அனைத்துக்கும் மேலாக மூதறிஞர் இராஜாஜியிடம் 'உங்களுக்கு விந்தனைத் தெரியுமா?' என்று யாராவது கேட்டால் 'அதோ, இருக்கிறாரே அவர் தானே?' என்று அலமாரியில் உள்ள பசிகோவிந்தம் புத்தகத்தைக் காட்டுவாராம். அந்த அளவு ராஜாஜியை பாதித்த நூல் பசிகோவிந்தம்.

விந்தன் தம் கடைசி காலத்தில் தம் மனத்தில் நீண்ட காலமாகப் பதிவு செய்து வைத்திருந்த கருத்துக்கள் 'பெரியார் ஆத்திசூடி' என்ற கவிதை நூலை வெளியிட்டார்.

இந்த நூலுக்கான ஊற்று குமுதம் பத்திரிகையில் கிருபானந்த வாரியார் 'வாரியார் விருந்து' என்று எழுதிய கட்டுரையே ஆகும்.

'வாரியார் விருந்து' என்ற கட்டுரையைப் படிக்கும் போதெல்லாம் விந்தன், 'பெரியார் மருந்து' என்று ஒரு நூலை எழுதவேண்டும் என்று சொல்லுவார். அந்த நூல்தான் 'பெரியார் ஆத்திசூடி.'

தமிழ்க் கவிதைத் துறையில் விந்தனின் பணி சிறிதுதான் எனினும் அதன் வீச்சும் வேகமும் இன்றும் பலரைக் குதூகலிக்கவும் குமுறவும் செய்து கொண்டிருக்கின்றன.

★ ★ ★

# 13

தமிழ் சினிமாவில் பத்து ஆண்டுகள் பணியாற்றிய விந்தன், கோடம்பாக்கம் படப்பிடிப்பு நிலையத்தில் படப்பிடிப்பைப் பார்ப்பதோ, நடிகை - நடிகர்களிடம் பேசிப்பொழுது போக்குவதோ எதுவும் நிகழ்ந்ததில்லை. அப்படி ஏதேனும் நிகழ்ந்திருந்தால் அது எதிர்பாராமல் நடந்த ஒரு விபத்தாகத்தான் இருக்கும்.

அன்றைய சினிமா நட்சத்திரங்களில் குறிப்பாக சிவாஜி கணேசன், இயக்குநர் ஸ்ரீதர், ஜெயலலிதா போன்றவர்களின் செய்தித் தொடர்பாளராக இருந்து வந்த ‘பிலிம் நியூஸ்’ ஆனந்தன் கூறுகிறார்: சினிமா ஸ்டூடியோக்களிலோ, சினிமா விழாக்களிலோ, நடிகை நடிகர்களிடமோ விந்தனை நான் கண்டது இல்லை. அவரின் எழுத்தில் மதிப்புடைய நான் அவரை நேரில் கண்டதேயில்லை. அவர் எங்கோ அறையில் அமர்ந்து எழுதியதோடு சரி.

ஆனால் நடிகை - நடிகர்கள் விந்தன் பேரில் மதிப்பு வைத்திருந்தார்கள். நடிகர்கள் சந்திரபாபு, அசோகன் போன்றவர்கள் வீட்டிற்கு வருவார்கள்.

அன்றைய சினிமாவில் புகழ்பெற்ற நடிகர்களான எம்.ஜி. ராமசந்திரன், சிவாஜி கணேசன் போன்றவர்களின் படங்களுக்கு வசனம் எழுதிய போதிலும் அந்த இருவரிடம் கூட அவர் நெருங்கிப் பழகிய தில்லை. அவருக்கு சினிமா நடிகர்கள் பேரில் ஒரு பற்றற்ற நிலை. எனினும் கல்கி, ஆனந்த விகடன் போன்ற பத்திரிகைகளில் பணியாற்றிய எழுத்தாளர் களின் பேரில் : மதிப்புள்ளவர்கள் எம்.ஜி.ஆரும், சிவாஜி கணேசனும். சிறப்பாகச் சொல்லவேண்டுமானால் 'மணிக்கொடி' வாசகர் எம்.ஜி.ஆர்.

நடிகர்களின் நட்பைப் பெற்ற எழுத்தாளர்கள் நடிகர்களை நன்றாகவே பயன்படுத்திக் கொண்டார்கள். சில எழுத்தாளர்கள் நடிகர்களிடம் ஆயிரக்கணக்கில் பணம் பெற்றுப் பத்திரிகை நடத்தினார்கள்; மற்றும் சிலர், நடிகர்களை வைத்துப் படம் எடுத்தார்கள். வெற்றி பெற்றார்கள். கலையும், இலக்கியமும் கைகோத்து நடந்தன. பத்திரிகைகளில் இரண்டு நடிகர்களையும் இந்திரன் சந்திரன் என்று புகழ்ந்து எழுதினார்கள்.

இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சுயமரியாதைக்காரர் விந்தனால் நடிகர்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. தான் நடத்திய மனிதன் பத்திரிகை பொருளாதார நெருக்கடியில் துவண்டபோதும் எந்த நடிகரிடமும் விந்தன் கை ஏந்தியதில்லை. ஆனால், தன் மகள் திருமணத்துக்காக வள்ளல் நடிகரிடம் வாய் திறந்து

பணம் கேட்டார். சுயமரியாதையை மறந்து. 'வள்ளலோ பணம் இல்லை என்ற சொல்லாமல் இன்று போய் நாளை வா' என்று இழுத்தடித்துச் சோர்வடையச் செய்தார். கடைசியில் பணம் கிடைக்கவில்லை; திருமணம் எளிய முறையில் நடந்தேறியது.

இத்தகைய சூழலில் - நடிகர்களுக்கும் விந்தனுக்கும் நீண்ட இடைவெளி உண்டான காலத்தில் பழம்பெரு நடிகர் எம்.கே. தியாகராஜ பாகவதர் பற்றி 'எம்.கே.டி. பாகவதர் கதை' என்ற தொடரை எழுத ஆரம்பித்தார் விந்தன்.

அதுவரையில் கதைகள் மட்டுமே எழுதி வந்த விந்தனுக்கு ஒருவரைப் பற்றி வரலாறு எழுதுவது அதுவும் ஒரு நடிகரைப் பற்றி எழுதுவது புதிய அனுபவமாகும். அந்தப் புதிய அனுபவமும் விந்தனுக்குச் சிறப்பாகவே அமைந்தது.

தம் இனிய குரலில் தமிழக மக்களைத் தம் வசப்படுத்திக் கொண்டிருந்த எம்.கே. தியாகராஜ பாகவதரின் வாழ்க்கை, அதுவும் இறுதி வாழ்க்கை சோக வரலாறாகும். எம்.கே.டி. பாகவதரின் கதையை விந்தன் தொடங்குவதைப் பார்ப்போம்.

★ ★ ★

ஏழிசை மன்னர்

# எம்.கே.டி. பாகவதர்

## திரையும் வாழ்வும்

*'சரா சரங்கள் வரும் சுழன்றே!'*

ஐம்பது நாட்கள் ஓடும் படத்தை இப்போது நீங்கள் பார்க்கிறீர்கள்; நூறு நாட்கள் ஓட்டப்படும் படத்தையும் இப்போது நீங்கள் பார்க்கிறீர்கள். ஆயிரம் நாட்கள் ஒரே தியேட்டரில், ஒரே மூச்சில் யாரும் ஓட்டாமல் தானாகவே ஓடிய படத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அந்த அதிசயம் 1944ஆம் ஆண்டு இந்தத் தமிழகத்திலே நடந்தது. அதை நிகழ்த்திய படம் 'அரிதாஸ்'. அதில் நடித்தவர் தமக்குப் பின்னால் தம்மைப் போல் என்று சொல்ல வேறு யாரையுமே விட்டுச் செல்லாதத் திரையுலக எம்.கே. தியாகராஜ பாகவதர்.

1944க்கு முன்னாலும் அப்படி ஒரு படம் ஓடிய தில்லை. அதற்குப் பின்னாலும் ஓடப் போவதில்லை என்ற பெயரையும் பெருமையையும் நிரந்தரமாகவே பெற்றுவிட்ட அந்தப்படம், சென்னை பிராட்வே டாக்கீசில் ஓடிக் கொண்டிருக்கிறது. மக்கள் அந்தப் படத்தில் பாகவதர் பாடல்களை மட்டும் வீதிக்கு வீதி பாடிக்கொண்டிருக்கவில்லை; அதற்கு முன்னால் அவர் பல படங்களில் பாடியுள்ள பாடல்களையும்

அப்படியே, திரும்பத் திரும்ப பாடிக் கொண்டிருந்தார்கள்.

அத்தனையும் இன்று வரும் சினிமாப் படங்களில் படைக்கப்படுவது போல் எளிய சந்தங்களில் அமைக்கப்பட்டவையா? இந்துஸ்தானி மெட்டுகளில் பாடப்பட்டவையா? இல்லை; சுருதி சுத்தமான கர்நாடக இசையில் அமைக்கப்பட்டவை! பாடப் பட்டவை.

பாகவதரால் அவற்றை எப்படி அவ்வளவு இனிமையாக, அவ்வளவு எழிலாகப் பாட முடிந்தது? படித்தவர்களால் மட்டும் அல்ல பாமரர்களாலும் அவற்றை எப்படி அவ்வளவு சுத்தமாகப் பின்பற்றி இசைக்க முடிந்தது?

அதை வெறும் அதிசயம் என்றால், சொன்னால் போதாது; அதிசயத்திலும் அதிசயம் என்றே சொல்லவேண்டும்.

ஆம்: இந்துஸ்தானி இசையை மட்டுமல்ல, கர்நாடக இசையையும் பாடுவது போலப் பாடினால் அதை எல்லோரும் பாட முடியும், அனுபவிக்க முடியும் என்னும் உண்மையைப் பொறாமை மிகுந்த இந்த உலகத்துக்கு முதன் முதலில் புன்னகையுடன் எடுத்து காட்டிய பெருமை பாகவதரையே சேரும். இதைச் சிலர் மறுக்கலாம்; ஆனால் மறைக்க முடியாது.

அதோ காரில் போகிறாரே; அவர் தமக்குப் பக்கத்தில் ‘உம்’மென்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் தம்முடைய இளம் மனைவியைக் கடைக் கண்ணால் பார்த்துச் சிரித்துக்

கொண்டே 'ராதே உனக்குக் கோபம் ஆகாதடி!' என்று பாடுகிறார்.

இதோ வெயிலில் வியர்க்க விறுவிறுக்க கட்டை வண்டியை இழுத்துக் கொண்டு செல்கிறானே, இவன் தனக்கு எதிர்த்தாற் போல் தலையில் புற்கட்டைச் சுமந்து வரும் பெண்ணைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டே, 'மன்மத லீலையை வென்றார் உண்டோ' என்று பாடுகிறான்.

அதோ நெற்றியில் பட்டை பட்டையாக விபூதி அணிந்து கோயிலுக்குப் போய்க் கொண்டிருக்கிறாரே ஒரு பக்தர்! அவர், 'மனமே ஈசன் நாமத்தை வாழ்த்துவாய்' என்று பாடிக்கொண்டே போகிறார்.

இதோ வாழ்க்கையில் வெறுப்புற்றுக் கையில் திருவோட்டுடன் கோயில் வாசலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாரே பண்டாரம்! இவர், 'சொப்பன வாழ்வில் மகிழ்ந்து சுப்பிரமணிய சுவாமி உன்னை மறந்தேன்!' என்று பாடுகிறார்.

இப்படி எல்லோரும் தம்மை மறந்து பாடிக் கொண்டிருக்கும் வேளையில்தான் நெஞ்சைப் பிளக்கும் அந்தச் செய்தி வந்தது.

'பாகவதர் கைதானார்!'

திரு எம்.கே.டி. பாகவதரின் நீண்ட நெடிய வரலாற்றை, சாதனைகள் பல படைத்த சரித்திரத்தை ஒரே பக்கத்தில் அறிமுகப்படுத்தி நம்மை உலுக்கி விடுகிறார், விந்தன் தம் எழுத்து வன்மையில்! எம்.கே.டி. பாகவதரின் கதையில் பல சுவையான

நிகழ்வுகளும் சில சுதந்திரமான சிந்தனைகளும் உள்ளன. அவற்றில் சில:

புராணக் கதைகளுக்கும், வரலாற்றுக் கதை களுக்கும், சமூகப் படங்களில் ரசிகர்கள் எதிர்பார்க்கும் அத்தனை அம்சங்களையும் அவற்றிலே புகுத்தி எழுதமுடியுமா?

முடியும் – சாத்தியம் என்று அந்நாளிலேயே தெள்ளத் தெளிவாக நிரூபித்துக் காட்டியவர் திரு. இளங்கோவன்.

திருநீலகண்டரில் ஒரு காட்சி! தாசி கலா வல்லி திருநீலகண்டரைத் தன் மாயவலைக்குள் சிக்க வைக்கப்பார்ப்பாள். அப்போது அவர்கள் இருவருக்கும் வாக்குவாதம் நடக்கும். அந்த வாக்குவாதம் எப்படி யிருந்தது? எத்தனையோ பேருக்கிட்டே எலந்தம் பழம் பார்த்தியே. எடுத்துப் பார்த்த பயங்களிலே இம்மா சைஸ'ப் பார்த்தியா? என்பது போலவா இருந்தது?

இல்லை, அவர்களுக்கு இடையே நடந்த உரையாடல்கள் மனிதனைத் தேவனாக்க முயலா விட்டாலும் மிருகமாக்க முயலாமல் குறைந்த பட்சம் மனிதனை மனிதனாவாவது வைத்திருக்க முயன்றன. அவற்றில்தான் தர்க்கரீதியான கேள்விகள் எத்தனை? தத்துவ மயமான பதில்கள் எத்தனை? .

அந்தக் கேள்விகளிலும் பதில்களிலும் இளங்கோவனையும், அவருடைய அசாதாரணமான எழுத்துத் திறமையையும் மட்டுமா நாம் கண்டோம்? மகாகவி ஷேக்ஸ்பியரையும் மனத்தைக் கவ்விப்

பிடிக்கும் அவனுடைய மதிநுட்பத்தையும் கூட அல்லவா கண்டோம்.

ஆம்; ஷேக்ஸ்பியர் தம்முடைய இளமைக் காலத்தில் எழுதிய **'ரேட் ஆப் லுக்ரிஸ்'** என்ற நூலிலிருந்தும் **'வீனஸ் அண்டு அடானிஸ்'** என்ற காவியத்திலிருந்தும் சில சுவையான பகுதிகளை எடுத்து அதில் அவர் கையாண்டிருந்தது என்னவோ உண்மை தான். ஆயினும் அந்தத் திறமைதான். இன்றைய சினிமா கதை வசனகர்த்தாக்களில் எத்தனை பேருக்கு இருக்கிறது? அவர்களில் சிலர் தமிழில் இருந்து எடுத்துத் தமிழிலேயே எழுதக்கூட தெரியாதவர்களாக அல்லவா இருக்கிறார்கள்.

அதுமட்டுமா? அந்த நாளில் எழுத்துத் தொழில் புனிதமான தொழிலாக மதிக்கப்பட்டு வந்தது. அதை மேற்கொண்டு இருந்தவர்களும் அந்தத் தொழிலின் புனிதத்தைத் தங்களால் முடிந்தவரை காக்கக் கூடியவர்களாயிருந்தார்கள். முக்கியமாக இளங்கோவனைப் போன்றவர்கள் ஒரு படாதிபதி வந்து தம்மை விரும்பி அழைக்காதவரை எந்த சினிமா கம்பெனி படியிலும் ஏறமாட்டார்.

இதனால் என்ன நடந்தது?

படேபடே படாதிபதிகள்கூட இளங்கோவனுக்கு முன்னால் சிகரெட் குடிக்க யோசித்தார்கள்; மது அருந்தத் தயங்கினார்கள்; மனைவியைத் தவிர வேறு பெண்களுடன் பேச அஞ்சினார்கள்.

தம் மதிப்புக்குரிய எழுத்தாளர் இளங்கோவனுக்கு சினிமா உலகம் தந்த மதிப்பை இவ்வாறு வெளிப்படுத்துகிறார் விந்தன்.

திரைப்பட நட்சத்திரமான எம்.கே.டி. பாகவதர் 'ஆமாம் சாமி!' என்று எதற்கும் தலையாட்டும் ஆளாக இல்லாமல் சுய சிந்தனையாளர் என்பதை இந்த நிகழ்ச்சி மூலம் காணலாம்.

''சமீபத்தில் தனிநபர் வழிபாடு கூடாது; அதனால் தேசத்துக்கும் சரி, தேச மக்களுக்கும் சரி, நன்மையில்லை!'' என்று புதிய முழக்கத்தை இந்த உலகமே அதிர முழங்கி, ரஷ்யாவில் இருந்த ஸ்டாலின் வழிபாட்டைத் தூக்கியெறிந்தார் அல்லவா குருஷ்ஷேவ். அந்தத் தனிநபர் வழிபாடு நமக்கும் உடன்பாடு இல்லை என்பதை அந்த நாளிலேயே செயலில் காட்டியவர் எம்.கே.டி. பாகவதர்.

மகாத்மா காந்தியிடம் அவர் அளவற்ற மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தது என்னமோ உண்மைதான். 'காந்தியைப் போலொரு சாந்த சொரூபனைக் காண்பது எளிதோமோ?' என்று அவர் பாடியதும் என்னமோ உண்மைதான். ஆனால் அவற்றுக்காக அவர் தமக்கென்று ஒரு தனிவழி வகுத்துக் கொண்டிருந்ததை விட்டுக் கொடுக்கத் தயாரில்லை.

''இந்திய விடுதலைக்கு இணங்காதவரை இரண்டாவது உலக மகா யுத்தத்தில் இந்தியா பிரிட்டிஷாரோடு ஒத்துழைக்காது'' என்றார் காந்திஜி. இந்திய விடுதலை வேறு; இரண்டாவது உலக மகா யுத்தம் வேறு, என்றார் பாகவதர்.

இப்படிச் சொன்னதோடு அவர் நிற்கவில்லை. அப்போது சென்னைக் கவர்னராயிருந்த சர் ஆர்தர் ஹோப், 'யுத்த நிதிக்காக நீங்கள் எங்களுக்குச் சில நாடகங்கள் நடத்திக் கொடுத்து உதவ வேண்டும்' என்று கேட்டுக் கொண்டபோது, ''அதற்கென்ன நடத்திக் கொடுக்கிறேன்'' என்று நடத்திக் கொடுத்தார்.

அப்போது புகழ்பெற்ற காங்கிரஸ் தலைவர்களில் ஒருவராய் இருந்த திரு. சத்தியமூர்த்தி சொன்னார் :

**'ஓய், பாகவதரே! யுத்த நிதிக்கு நீர் நாடகமா நடத்திக் கொடுக்கப் போகிறீர், நாடகம்! இரும் இரும்! உம்முடைய பாகவதர் பட்டத்தையே நான் பறிமுதல் செய்து விடுகிறேன்'**

அதைக்கேட்ட பாகவதர் என்ன செய்தார்? வேறொன்றும் செய்யவில்லை. சிரித்தார்.

அந்தச் சிரிப்பு அரசியல் காழ்ப்புணர்ச்சியற்ற, களங்கமில்லாத சிரிப்பு என்பதைப் பின்னர் ஒரு நிகழ்ச்சியில் அடையாளம் காட்டினார் பாகவதர்.

எம்.கே.டி. பாகவதர் நடித்த திருநீலகண்டர் வெள்ளிவிழா கொண்டாட்டத்திற்குக் காங்கிரஸ் தலைவர் எஸ். சத்தியமூர்த்தி அவர்களை அழைத்தார் பாகவதர். சத்தியமூர்த்தியும் மகிழ்ச்சியோடு கலந்து கொண்டு பாகவதரைப் பாராட்டிப் பேசினார்.

அன்றைய திரையுலகில் பொன்னார் மேனியனாய், புத்தம் புதிய சுடர் விளக்காய் விளங்கிய எம்.கே.டி. பாகவதரைப் பற்றி அவருடன் இணைந்து நடிக்கும் வாய்ப்பைப் பெற்ற எம்.ஜி. ராமச்சந்திரன் கூறுகிறார்:

''பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் திருமதி டி.ஆர். ராஜகுமாரி அம்மையார் அவர்களின் புதுமனை புகுவிழா சிறப்பாக நடை பெற்றுக் கொண்டிருந்தது. திரு. சி.எஸ். ஜெயராமன் பாடிக் கொண்டிருந்தார். மக்கள் வெள்ளம் போல் திரண்டிருந்தார்கள். கார்த்திகை விளக்கு வைப்பது போல் சுற்றிலும் மின்சார விளக்குகள் போடப் பட்டிருந்தன. மூலை முடுக்கிலுள்ளவர்களின் முகங்களும் நன்கு தெரியுமாறு அவை அமைக்கப் பட்டிருந்தன. மேடைக்கருகில் நானும் உட்கார்ந் திருந்தேன். என்னை மற்றவர்கள் கவனிக்கும் அளவுக்கு நான் அப்போது விளம்பரம் பெற்றிருக்கவில்லை? ஆனால் மற்றவர்களின் செயல் ஆற்றல்களைக் கவனித்துச் சிந்திக்கும் அனைத்து மனப்பாங்கும் பெற்றிருந்தேன்.

சி.எஸ். ஜெயராமன் நன்றாகப் பாடிக் கொண்டி ருந்தார். மக்களும் வெகுவாக ரசித்து அவ்வப்போது கைதட்டித் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். திடீரென்று கூட்டத்தினரிடையே சலசலப்பு ஏற்பட்டது. என்ன குழப்பம் என்று நான் திரும்பிப் பார்த்தேன். கை தட்டல்கள் ஒலித்தன! ஆமாம், பாகவதர் அவர்கள் கூட்டத்தின் ஒருபுறத்தில் வந்து கொண்டிருந்தார்கள்.

அவரைச் சுற்றி ஏதோ ஓர் ஒளி வீசிக் கொண்டிருந்ததாக நான் அப்போது உணர்ந்தேன்.

மேடைக்கு அருகில் அவருக்கென நாற்காலி போடப்பட்டிருந்தது. சி.எஸ். ஜெயராமன் தொடர்ந்து பாடிக்கொண்டிருந்தார்.

பாகவதர் அவர்கள் எங்கெங்கு தலை ஆட்டினார்களோ, ரசித்தார்களோ அங்கங்கே மக்களும் தலையாட்டினார்கள்; ரசித்தார்கள். சொல்லப் போனால் பாகவதர் அவர்களே தலையாட்டுகிறார்; ரசிக்கிறார்; ஆமோதிக்கிறார்; நாமும் ரசிக்கத் தான் வேண்டும் என்பதுபோல இருந்தது அது.

இரண்டொரு பாடல்களைக் கேட்டு ரசித்தபிறகு மக்களின் நெருக்கடியிலிருந்து தப்பிச் செல்வதற்காகப் பாகவதர் அவர்கள் எழுந்து போனார்கள். அப்பொழுது நான் என்ன நினைத்தேனோ, அதை இப்போது அப்படியே எழுதுகிறேன்.

அங்கே எத்தனையோ விளக்குகள் போடப்பட்டி ருந்தாலும், பாகவதர் அந்த இடத்தை விட்டு அகன்றதும், ஏதோ ஒரு இருள் கப்பிக் கொண்டது போல இருந்தது. எனக்கு மட்டுமல்ல, அங்கிருந்த அத்தனை பேருக்கும் அப்படித்தான் தோன்றியது.

பொன்நிறமான மேனி, பொன் நிறமான சட்டை. கழுத்தைச் சுற்றிச் சரிகை மட்டும் தெரியும் மேல் வேட்டி, காதுகளிலும் கைகளிலும் மின்னும் வைரங்கள்: நெற்றியில் ஜவ்வாதுப் பொட்டு! தலையில் சுருட்டை முடி. இவை அத்தனையும் தங்கத்தால் வார்த்தெடுக்கப்பட்ட ஓர் உருவத்தில் வைரங்கள் பதித்து வைத்தது போன்று காட்சிய ளித்தன .சுருங்கச் சொல்லப் போனால் தங்கத்தாலான ஓர் உருவம் உயிர் பெற்று வருவது போலவே இருந்தது அது.

பாகவதர் அவர்கள் அன்று அந்தக் கூட்டத்தை விட்டுப் போனதும்; அந்த இடத்திலும் தங்கள் மனத்திலும் இருள் கப்பியது போலவே மக்கள் உணர்ந்தார்கள்.''

எம்.கே.டி. பாகவதர் கதையில் இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள் மறக்க முடியாதவையாக அமைந்துள்ளன. நிறைவாக இதோ ஒரு நிகழ்ச்சி.

திரு. என்.எஸ். கிருஷ்ணன் புதுமனை புகுவிழா நடத்தினார். அதில் எம்.கே.டி. பாகவதர் கச்சேரி நடந்தது.

விழாவிற்கு வந்திருந்தவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. நாதசுரச் சக்கரவர்த்தி டி.என். இராஜரத்தினம் பிள்ளை.

பாகவதரின் பாட்டைக் கேட்டு மயங்கிய இராஜரத்தினம் பிள்ளை, ஒருபடி கீழே இறங்கி வந்து , சாதாரண ரசிகன் போல் 'ராதே உனக்குக் கோபம் ஆகாதடி' பாடுங்கள், 'உன்னைக் கண்டு மயங்காத பேர்களுண்டோ, பாடுங்கள்' என்று கேட்டுக் கொண்டேயிருந்தார்கள்.

நாதசுரச் சக்கரவர்த்திக்கு அவ்வளவு மயக்கம் பாகவதர் பாட்டில்!

கச்சேரி முடிந்தவுடன் கவிமணி பேசினார்:

''இதற்குமுன் பாகவதர் பாடல்கள் சிலவற்றை நான் கிராமபோன் ரிக்கார்டுகளின் வாயிலாகக் கேட்டிருக்கிறேன். இப்போதுதான் முதன் முதலாக நேரில் பாடக் கேட்கிறேன். முன்னது கத்திரிக்காய்

வற்றலைச் சமைத்து சாப்பிடுவது போல இருந்தது. பின்னது அன்று பறித்த கத்திரிக்காயை அன்றே சாப்பிடுவதுபோல அவ்வளவு சுவையாக இருந்தது. காரணம் ரிக்கார்டு எடுக்கும்போது, பாட்டை விட நேரத்தைதான் அதிகமாகக் கவனிப்பார்கள். குறிப்பிட்ட நேரத்திற்குள் குறிப்பிட்ட பாட்டைப் பாடி முடிக்க வேண்டும் என்பார்கள். இங்கே அப்படி இல்லை. பாகவதரும் சுதந்திரமாகப் பாடினார். நாமும் சுதந்திரமாகக் கேட்டோம். இதனால் எனக்கு இன்னும் ஒரு அனுகூலம். இங்கே வரும்போது நான் நோயுற்று வந்திருந்தேன். இப்போது அந்த நோய் நீங்கிப் போகப் போகிறேன். ஆம், பாகவதரின் சங்கீதம் எனக்கு யாரும் அளிக்க முடியாத சிகிச்சை அளித்து விட்டது!''

கவிமணியின் நோயைப் போக்கிய பாகவதரின் சங்கீதம், கடைசிக் காலத்தில் அவருக்கு வந்துற்ற கண்ணின் நோயையும் போக்கியிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?

தகவல் களஞ்சியமாக எம்.கே.டி. பாகவதர் கதையை எழுதிப் புகழ்பெற்ற விந்தன், 1971ஆம் ஆண்டு நடிகவேள் எம்.ஆர். ராதாவின் '**சிறைச்சாலை சிந்தனைகள்**' என்னும் தலைப்பில் ராதாவின் வாழ்க்கை வரலாற்றை எழுதினார்.

★ ★ ★

## 14

பெரியாரின் சீடர், பெரிய நடிகர் என்பதற்கெல்லாம் மேலாக சுயசிந்தனையாளர், சுயமரியாதைக்காரர் என்று எம்.ஆர். இராதாவை விந்தன் அறிந்திருந்தது போலவே சுயமரியாதை மிக்க சுயசிந்தனையுடைய எழுத்தாளர் விந்தன் என்பதை அறிந்து வைத்திருந்தார் ராதா அவர்கள்.

இத்தகைய இருதரப்பு அறிமுகமே நடிகவேளின் சிறைச்சாலைச் சிந்தனைகளை எழுதுவதற்குப் பாலமாக அமைந்தது என்றால் மிகையன்று.

எம்.ஜி.ஆரை எம்.ஆர். இராதா சுட்டுவிட்ட சம்பவம் தமிழகமெங்கும் பரபரப்பாகப் பேசப் பட்டது. புலனாய்வுப் பத்திரிகைகள் அந்தச் சம்பவத்தை சுடச் சுட எழுதின. அனைத்தும் அடங்கி அமைதியாக இருந்த காலத்தில் எம்.ஆர். ராதா விடுதலை ஆன காலத்தில் விந்தன் தினமணி கதிர் பத்திரிகையில் எழுதிய தொடர் மக்கள் பலரின் பார்வையில் பட்டது.

வாரா வாரம் தினமணி கதிரில் இத்தொடரைப் படித்த இலட்சோப இலட்ச வாசகர்களில் குறிப்பிடத்

தக்கவர் காஞ்சி காமகோடி பீடாதிபதி பெரியவர் சந்திரசேகர் சுவாமிகள்!

ஆம். வாரா வாரம் கதிரில் தொடரைப் படித்த பெரிய காஞ்சி சங்கராச்சாரியார் தம் உதவியாளரிடம், ''நான் எம்.ஆர். இராதாவைப் பார்க்க வேண்டும். வாழ்க்கையை ஒளிவு மறைவு இல்லாமல் உண்மை யாகச் சொல்லும் உயர்ந்த மனிதர் அவர். அவரை அழைத்து வாருங்கள்!'' என்றாராம்.

இந்தத் தகவலைக் கேட்ட நடிகவேள், ''அவர் ரொம்ப பெரியவர்!'' என்று சிரித்துக் கொண்டாராம். பின்னர் எம்.ஆர். இராதாவும் பெரியவரை சந்திக்க வில்லை; பெரியவரும் ராதாவைப் பற்றிப் பேச வில்லை.

பெரியாரின் சீடரான எம்.ஆர். இராதா நாடறிந்த நாத்திகர் என்பதை நன்கு அறிவார் பெரிய சுவாமிகள். எனினும் ஒரு மனிதனின் வாழ்க்கை திறந்த புத்தகமாக அமையும்போது அந்தப் புத்தகத்தை எல்லோரும் விரும்பிப் படிப்பார்கள். அப்படி விரும்பிப் படித்தவர்தான் பெரியவர். அவர் பார்வையில் நாத்திகன் ஆஸ்திகன் என்கிற பேதமெல்லாம் மறைந்துவிட்டது.

எம்.கே.டி. பாகவதர் கதையை அவரின் மறைவிற்குப்பின் தகவல்களைச் சேகரித்து எழுதினார் விந்தன். ஆனால் நடிகவேள் எம்.ஆர். ராதாவின்

கதையை அப்படி எழுதாமல், ராதாவை நேருக்கு நேர் சந்தித்து எள்ளல்தனமான வினாக்களைத் தொடுத்தார். அதற்கு ராதா அளித்த துணிச்சலான ஒளிவுமறைவு அற்ற சூடான விடைகளின் தொகுப்பு தான் ராதாவின் சிறைச்சாலைச் சிந்தனைகள்!

எம். ஆர். ராதாவின் சூடான விடைகளுக்கு ஒரு சான்று இதோ:

ஒரு நிருபர்: உங்கள் மனைவியைக் கொஞ்சம் கூப்பிடுகிறீர்களா? அவரை ஒரு படம் எடுத்துக் கொள்கிறேன்! – என்கிறார் வினயத்துடன்.

''என் மனைவியை எதுக்குக் கூப்பிடறது? நான் மட்டும் பார்க்கத்தான் அவ இருக்கா. நீங்களும் உங்க பேப்பரை படிக்கிறவங்களும் பார்க்க அவ இல்ல.'' என்று ராதா பட்டென்று பதிலளிக்கிறார்.

சோத்துலே இருக்கிறது சோஷலிசம்! என்பார்கள் சிலர். அதைச் சுவையாகச் சொல்லுகிறார் இராதா.

நடிகர்கள் சிலர் பிறந்த நாள் கேக் வெட்டுவதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

நினைப்பதற்கு என்ன இருக்கிறது? கேக் வெட்டுறதை ஒரு 'ஜோக்' ஆக்கிட்டான் இந்த நாட்டிலே. மேல் நாட்டிலே அப்படி இல்லை. அதிலே ஒரு சமதர்ம சித்தாந்தமே அடங்கியிருக்கு. மனைவி மக்களோடு வீட்டு வேலைக்காரர்கள், நண்பர்கள், உறவினர்களையெல்லாம் அழைத்துப் பிறந்தநாள்

கேக்கை வெட்டி, ஒரு துண்டைத் தான் வாயில் போட்டுக் கொண்டு மற்ற துண்டுகளை ஏற்றத்தாழ்வு பார்க்காமல் அவன் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கிறான். ஏன்? தன்னை வந்து அடைந்துள்ள புகழ், பொருள் அனைத்தையும் பிறருடன் பகிர்ந்து கொள்ளத் தயாராயிருப்பதை எடுத்துக் காட்டு வதற்காக. இதுவே 'கேக்' வெட்டுவதன் தாத்பர்யம். இதை விட்டுவிட்டுப் பிரஸ் ரிப்போர்ட்டரைக் கூப்பிட்டு 'பர்த்'டே கொண்டாடறவன் உண்மையான கலைஞன் அல்ல. அசல் வியாபாரி. அப்படித்தான் என்னால் சொல்லமுடியும்!

பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்காமல் பாய்ஸ் கம்பெனியில் சேர்ந்து நடிகனாக, கார் டிரைவராக, மெக்கானிக்காக, எலக்டிரீஷியனாக வளர்ந்த எம்.ஆர். ராதாவைப் பல தொழிலதிபர்கள் பாராட்டி யிருக்கிறார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் திரு. டி. வி. சுந்தரம் அய்யங்கார் அவர்கள். இதோ ஒரு நிகழ்ச்சி!

டி.வி. சுந்தரம் அய்யங்கார்கூட ஒருமுறை உங்கள் மெக்கானிசத்தைப் பார்த்து...?

"அதுவா? ... அதைச் சொல்லுவதற்கு முந்தி அவருக்கும் எனக்கும் எப்படித் தொடர்பு ஏற்பட்டது என்பதை நான் சொல்லணும். மதுரையிலே ஜகந்நாதய்யர் கம்பெனி முகாம் போட்டிருந்த சமயம்

அது. நான் ஸ்பேர் பார்ட்ஸ் வாங்க அடிக்கடி அய்யங்கார் கடைக்குப் போவேன்.

'அப்போ அய்யங்கார் ஸ்பேர் பார்ட்ஸ் கடைதான் வைத்திருந்தாரா?'

ஆமாம். அதுவும் ரொம்பச் சின்னக்கடை. நாலணாவுக்குச் சாமான் வாங்கினால்கூட அவர் மறக்காமல் எனக்கு காலணா கொடுப்பார். இப்படி ஏற்பட்ட தொடர்பு எங்கே வந்து நின்னதுன்னா பாலாற்றங்கரையிலே வந்து நின்னது.

பாலாற்றங்கரையிலா?

ஆமாம்! அந்த ஆத்து மேலே பாலம் கட்டிக்கிட்டிருந்த சமயம் அது. டிராமா குரூப்போடு நான் அந்த வழியா வேன்லே வந்துகிட்டிருந்தேன். ஆத்தைக் கடக்கற இடத்திலே ஒரே கூட்டம். என்னடான்னு பார்த்தா டி.வி.எஸ். லாரி ஒண்ணு ஆத்து மணல்லே சிக்கிக்கிட்டு இருந்தது. அதைத் தூக்கக் கிரேன் நிறுத்தியிருந்தாங்க.

அந்தப் பக்கம் இருநூறு வண்டி, இந்தப் பக்கம் இருநூறு வண்டி நிக்குது. டிராபிக் ஒரே ஜாம். நான் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். பொறுக்க முடியவில்லே. வேனை விட்டுக் கீழே இறங்கினேன். ஆத்திலே முழங்கால் வரை தண்ணீர்தான் இருந்தது. இறங்கி நடந்தேன்.

யாரப்பா அது? இங்கே பாருங்க, லாரி அசையறதா யில்லே! கிரேனும் அதைத் தூக்குறதாயில்லே. இப்படியே இருந்தா நாங்க எப்போ ஊர் போய்ச் சேர்றது? ஒண்ணு, கிரேனை ஒரு மணி நேரம் ஒரு பக்கமா தள்ளி நிறுத்தி எங்களுக்கு வழி விடுங்க. இல்லேன்னா இந்த லாரியைக் கிளப்ப எனக்கு அரை மணி நேரம் அவகாசம் கொடுங்கன்னேன். நான் சொன்னதை ஒருத்தனும் காதிலே போட்டுக்கல்லே. அவனுங்க பாட்டுக்கு தஸ்புஸ்னு இங்கிலீஷிலே ஏதோ பேசிக்கிட்டே இருந்தானுக. எனக்குக் கோபம் வந்து 'என்னடா சொல்றதைக் கேட்காம, தஸ்புஸ்சின்னு பேசிறீங்களேன்னேன். அப்போத்தான் நான் யாருன்னு அவங்களுக்குத் தெரிஞ்சுது. அதுக்குள்ளே என்னைச் சுற்றி ஒரு கூட்டமும் சேர்ந்தது. நான் மறுபடியும் விஷயத்தைச் சொன்னேன்.

கிரேனைத் தள்ளி நிறுத்தறுதுக்கில்லே, 'உங்களுக்கு வேணும்னா லாரியைக் கிளப்ப அரைமணி நேரம் அவகாசம் கொடுக்கிறோம்னு' கொஞ்சம் கேலியாச் சொன்னானுக. கெடக்கிறானுக ன்னு நான் வேனைக் கொண்டு வரச் சொல்லி அதிலே இருந்து கம்பெனி ஆட்களையெல்லாம் கீழே இறங்கச் சொன்னேன். டி.வி.எஸ். லாரியை அன்லோடாக் கிறதுக்காக அதிலிருந்த சரக்கையெல்லாம் இறக்கி என் வேன்லே போடச் சொன்னேன். இப்போ என்ன ஆச்சு? லாரி லைட்டாச்சு. வேன் வெயிட்டாச்சு. அந்த

லைட்டை இந்த வெயிட்டாலே கட்டி இழுக்கச் சொன்னேன். விஷயம் முடிஞ்சது. கிரேன் இல்லாம லாரி கிளம்பிடுது.

ஆஹான்னான் ஒருத்தன். நல்ல மெக்கானிக்கல் பிரெயினுன்னான் இன்னொருத்தன். ஊருக்கு வந்து சேர்ந்தோம். மறுநாள் காலையிலே வந்து பார்த்தா, என் வீட்டு வாசலிலே பிளைமவுத் கார் வந்து நிற்கிறது. என்ன விஷயம்? சுந்தரம் அய்யங்கார் அனுப்பினார்னு சொன்னானுக. எங்கிட்ட இதுக்குப் பணம் ஏதுன்னு கேட்டேன். உங்களுக்கு எப்போ சௌகரியமோ அப்போ கொடுங்கன்னு அய்யங்கார் சொன்னதாகச் சொன்னாங்க.

ஐநூறும் ஆயிரம்னு அந்தக் கடனை அடைச்சேன். அதிலிருந்து அய்யங்கார் மகன் துரைசாமிக்கும் எனக்கும் ஏற்பட்டது தொடர்பு! அவர் மறையற வரையில் இருந்தது. நான் ஜெயில்லே இருந்தபோதும் அவர் பொண்ணு கூட வந்து என்னை பார்த்துட்டுப் போச்சு.

இவ்வாறு எம்.ஆர். ராதாவின் நடிப்பின் ஆற்றலால், அறிவால் பல தொழிலதிபர்கள், நீதிபதிகள், டாக்டர்கள், தமிழறிஞர்கள், அரசியல் வாதிகள் என்ற பலர் அவருடன் நட்பு கொண்டு அவர்களின் நல்வாழ்த்துக்களை நல்கியிருக்கிறார்கள்.

அவர்களில் முக்கியமானவர்கள் ஜி.டி.நாயுடு, நீதிபதி கணேசய்யர், டாக்டர் ரங்காச்சாரி, அறிஞர் அண்ணா, ப. ஜீவானந்தம் முதலியோர்.

இதில் முக்கியமாகவும் சிறப்பாகவும் சொல்ல வேண்டியது, ப. ஜீவானந்தம் - பத்மாவதி காதலர்களுக்குக் கடிதங்களைக் கொண்டு போய்க் கொடுத்தது!

இப்படி வாழ்க்கையில் மேடு பள்ளங்களைக் கடந்து உண்மையை ஊர் அறிய எடுத்துச் சொல்லி, உயர்ந்து நின்ற மனிதர் எம்.ஆர். ராதாவின் நினைவு என்றும் நம் நெஞ்சில் இருக்கும்!

★ ★ ★

# 15

# விந்தனின் திரைப்பாடல்கள்

## சுத்தாத இடமில்லை

படம்: அன்பு ஆண்டு : 1953

பாடியவர் : ஏ.எம். ராஜா இசை : டி.ஆர். பாப்பா

சுத்தாத இடமில்லை கேட்காத பேரில்லே!
சோத்துக்கு வழிகாட்ட ஆளில்லே!
செத்து பின்பு சிவலோகம் செல்ல வழிகாட்டும்
பித்தர்கள் ஏனிந்த நாட்டிலே!

ஒண்ணும் புரியவில்லை தம்பி - எனக்கு
ஒண்ணும் புரியவில்லை தம்பி!
கண்ணு ரெண்டும் சுத்துது காதை அடைக்குது
கஞ்சி கஞ்சி என்று வயிறு கெஞ்சிக் கெஞ்சிக்
கேட்குது (ஏன்)

கடவுளை நம்பினேன் கற்பூரம் செலவு
கல்வியை நம்பினேன் காசெல்லாம் செலவு
மனிதனுக்கு மனிதன் மனமிரங்கவில்லை
மானத்தோடு வாழ மார்க்கம் ஏனோ இல்லை
இயற்கையின் செல்வமெல்லாம் ஏழையாலே
பெருகுது!

செயற்கைப் பணம் ஒருவனை ஏய்த்து
செல்லாக் காசா ஆக்குது
விதியை நம்பி எத்தனை நாள்
வீணாக் காலம் கழிப்பது?
வீணர் வாழ எத்தனை நாள்
வீரங்குன்றி வாழ்வது?

பாடுபடும் பாட்டாளி
பசியாலே துடிக்கிறான்
பசியைப் பணமாக்கி
முதலாளி பதுக்கிறான்

சாலையிலே தொழிலாளி
சம்சாரம் நடக்குது
ஆலையிலே அவனாவி
புகையாகப் போகுது

கடலைப்போல உலகமெல்லாம்
கஷ்டப்படும் கூட்டம்!
கப்பல் போல முதலாளி
போடுகிறான் ஆட்டம்!

கொந்தளித்துக் கடலெழுந்தால்
கப்பல் கதி என்ன?
கொடுமைக்கெல்லாம் இன்றே ஓர்
எல்லையிட்டால் என்ன? (ஒண்ணும்)

## கொஞ்சுங் கிளியான பெண்ணை

**படம் : கூண்டுக்கிளி. பாடியவர் : டி.எம்.எஸ்.**

**இசை : கே.வி. மகாதேவன்**

கொஞ்சுங் கிளியான பெண்ணைக்
கூண்டுக்கிளி யாக்கிவிட்டுக்
கெட்டி மேளம் கொட்டுவது
*சரியா? தப்பா?*

பஞ்சபூதச் சாட்சியெல்லாம்
நெஞ்சமிலாச் சாட்சி என்று
தொட்டுமாலை சூட்டுவது
*சரியா? தப்பா?*

*சரியா? தப்பா?*
*சரியா? தப்பா?*

தின்னப் பழம் தந்துவிட்டு
தின்னாதே என்று கையைத்
தட்டிவிட்டுத் திட்டுவது
*சரியா? தப்பா?*

தீந்தமிழ்ப் பாட்டைப் பாடி
கேட்காதே என்று காதைப்

*பொத்திவிட்டுக் குத்துவது*
*சரியா? தப்பா?*

*சரியா? தப்பா?*
*சரியா? தப்பா?*

*காதல் செய்த குற்றம் எனது*
*கண்கள் செய்த குற்றமானால்*
*கண்ணைப் படைத்த கடவுள் செய்கை*
*சரியா? தப்பா?*

*சரியா? தப்பா?*
*சரியா? தப்பா?*

*கல்யாணம் செய்த குற்றம் – எனது*
*நண்பன் செய்த குற்றமானால்*
*கற்பைப் படைத்த மனிதன் செய்கை*
*சரியா? தப்பா?*

*சரியா? தப்பா?*
*சரியா? தப்பா?*

*காதல் பிச்சை வேண்டிக் கையை*
*ஏந்தி வாசல் காத்து நின்றால்*
*சாத்திரங்கள் பேசுவது*
*சரியா? தப்பா?*

*அன்பு கொண்ட உள்ளத்தோடு*
*கள்ளமில்லாக் காதல் கொண்டால்*
*ஆத்திரம் கொண் டேசுவது*
*சரியா? தப்பா?*

*சரியா? தப்பா?*
*சரியா? தப்பா?*

*மண்ணும் பொண்ணும் மாயை யென்று*
*மக்களுக்குச் சொல்லிவிட்டு*
*பெண்ணைப் பார்த்துக் கண்ணடித்தால்*
*சரியா? தப்பா?*

விண்ணுலக ஆசையின்றி
விரும்பும் பெண்ணை நேசத்தோடு
*கண்ணியமாய்க் காதலித்தால்*
*சரியா? தப்பா?*

*சரியா? தப்பா?*
*சரியா? தப்பா?*

மற்றொருவன் வாழ்க்கைக்காக
மனமறிந்த பெண்ணைவிட்டு
மனமுடைந்து சுற்றுவது
*சரியா? தப்பா?*

மறுமலர்ச்சி வேண்டும் வாழ்வில்
மறக்கமாட்டேன் உன்னையென்று
மலர்க்கரத்தைப் பற்றுவது
*சரியா? தப்பா?*

*சரியா? தப்பா?*
*சரியா? தப்பா?*

*சரியா? தப்பா?*

★ ★ ★

## பார்! பார்! பார்!

படம் : கூண்டுக்கிளி பாடியவர் : ராதா ஜெயலட்சுமி

இசை : கே.வி. மகாதேவன் ஆண்டு : 1954

*பார் என் மகளே பார்! பார்!*
*பரந்து கிடக்கும் அன்னைபூமி*
*பிரிந்துன்னை அழைக்குது*
*பார்! பார்! பார்!*

*இருந்த வீடு இரவல் வீடு*
*இருக்கப் போவதுன் சொந்த வீடு*
*வருந்த வேண்டாம் உருளும் உலகில்*
*இருளும் ஒளியும் இயற்கை* (பார்)

*பயப்படாதே பாரில் உன்னை போல்*
*பலர் என் மடியில் பார்! பார்!*
*வியப்படையாதே விரிந்த வானம்*
*வளைந்துனைக் காக்குது பார்! பார்!* (பார்)

*மனிதனுக்கில்லாத இதயம்*
*மண்ணுக்கிருப்பதை பார்! பார்!*
*மாடிவீட்டு எச்சில் இலைக்கு*
*மண்டை உடையுது பார்! பார்!* (பார்)

*பணத்தால் பாதை பூஜை செய்யும்*
*பரம பக்தரைப் பார்! பார்!* (பார்)

*பாவம் ஆட புண்ணியம் ஓட*
*பாதகர் சிரிப்பதைப் பார்! பார்!*

*அழுதால் சிரிக்கும் இந்த உலகம்*
*அன்பு காட்டும் இந்த உலகம்*
*அது வேண்டுமா? இது வேண்டுமா?*
*எது வேண்டும் என்று நீ, பார்! பார்!*

★ ★ ★ (பார்)

# எனக்குத் தெரியலே!

**படம்: கூண்டுக்கிளி**

**பாடியவர் : பி.ஏ. பெரியநாயகி ஆண்டு : 1954**

## பல்லவி

எனக்குத் தெரியலே - நெஜமா
எனக்குத் தெரியலே - நெஜமாத் தெரியலே
ஒண்ணும் புரியலே (என)

## அநுபல்லவி

உங்களைக் கண்டவுடன்
உடம்பெதுக்குச் சிலுக்கணும்
உள்ளந் துள்ள உதடு ரெண்டும்
மெல்ல எதுக்குச் சிரிக்கணும்?
மெல்ல எதுக்குச் சிரிக்கணும் (என)

படுக்கையிலே படுக்கப் போனா
முள்ளா எதுக்குக் குத்தணும்
பாழும் கண்கள் இரவு முழுதும்
தூங்க எதுக்கு மறுக்கணும்
தூங்க எதுக்கு மறுக்கணும்? (என)

கரும்பை வெட்டித் தின்னாக்கூட
வாய் எதுக்குக் கசக்கணும்
கன்னம் ரெண்டும் ஒண்ணே ஒண்ணு
கேட்டெதுக்குச் சிவக்கணும்
கேட்டெதுக்குச் சிவக்கணும் (என)

★ ★ ★

## இதய வானிலே

**படம் : பார்த்திபன் கனவு**

**பாடியவர்கள் : ஏ.எம். ராஜா - பி. சுசீலா**

பெ: இதயவானிலே உதய நிலவே
எங்கே போகிறாய் - நீ
எங்கே போகிறாய்?

ஒளி இல்லாத உலகம் போல
உள்ளம் இருளுதே - என்
உள்ளம் இருளுதே

கண்கள் செய்த பாவம் உன்னைக்
கண்டு காணாதேங்குதே!
கண்டு காணாதேங்குதே!

பாய விரித்துக் கப்பல் செல்ல
பிறவி நெஞ்சம் துடிக்குதே
பாவி நெஞ்சம் துடிக்குது

ஆ: இருளகற்றும் ஒளியென்றென்னை
எண்ணும் நீ யாரோ?
எண்ணும் நீ யாரோ?

கண்டும் காணாதேங்கும் கண்கள்
காதல் கண்களோ?
காதல் கண்களோ?

இதயவானின் உதய நிலவே
எங்கே போகிறேன் - நான்
எங்கே போகிறேன்!

பெ: ஆசை மிஞ்சி நேசக் கரங்கள்
அணைக்க உன்னை நீளுதே
அணைக்க உன்னை நீளுதே
பறந்து வந்து உன்னைத் தழுவப்
பாழும் சிறகில்லையே!
பாழும் சிறகில்லையே!

## மயக்கும் மாலை

**படம் : குலேபகாவலி**

**பாடியோர் : ஏ.எம். ராஜா, ஜிக்கி ஆண்டு : 1955**

பெ: மயக்கும் மாலை பொழுதே நீ போ! போ!
இனிக்கும் இன்ப இரவே நீ வா! வா!
இன்னலைத் தீர்க்க வா!

ஆ: பன்னீர்த் தெளிக்க பனி பெய்யுமே
பசும்புல் படுக்கப் பாய் போடுமே

பெ: பாலூட்டும் நிலவு தேன் ஊட்டுமே
பாடும் தென்றல் தாலாட்டுமே
புன்னை மலர்கள் அன்பினாலே
போடும் போர்வை தன்னாலே

ஆ: கனி இதழ் காதல் தீர்க்குமே
பெ: காண்போம் பேரின்பமே

ஆ.பெ.:மயக்கும் மாலை பொழுதே நீ போ, போ!
இனிக்கும் இன்ப இரவே நீ வா வா!
இன்னலைத் தீர்க்கவா!

★ ★ ★

# பிற்சேர்க்கை

தமிழனுக்குப் பல துறைகளில் விருதும் பரிசும் கிடைக்காததற்குக் காரணம் தமிழனே; அவனுடைய குறுகிய மனப்பான்மையே!

அடுத்த மாநிலங்களில் கலை இலக்கியத் துறையில் அவர்களுக்குள் அரசியல் கருத்து வேறு பாடுகள், காழ்ப்புகள் எவ்வளவுதான் இருந்தாலும் பரிசுகள், பாராட்டுகள் என்ற வரும்போது தமது மாநிலத்து இலக்கியவாதிகளுக்கு, கலைஞனுக்குப் பரிசும் பாராட்டும் கிடைப்பதற்குப் பாடுபடு கிறார்கள். அதனால்தான் கேரளத்தில், கர்நாடகத்தில், மேற்கு வங்காளத்தில் சாகித்ய அகாதெமி, ஞானபீடம், தாதாசாகிப் போன்ற விருதும் பரிசும் பெற்றவர்கள் ஏராளமானவர்கள். ஆனால் தமிழனுக்கு ஒரே ஒரு ஞானபீடப் பரிசுதான்.

அந்த விருதைப் பெற்ற அகிலனுக்குப் பிறகு எவருக்கும் கிடைக்கவில்லை. அங்கு தான் தமிழனின் சாதிஉணர்வு, அரசியல் கருத்துக்கள், மதஉணர்வுகள் அனைத்தும் வேடம் தரித்து விளையாடுகின்றன. முடிவு? தமிழில் தரமான நாவல்கள், கதைகள், கவிதைகள், திரைப்படங்கள் இல்லை என்று இவர்களே சத்தியம் செய்து கொடுக்கிறார்கள். இப்படி இவர்களே எத்தனை ஆண்டுக்காலம் இருக்கப் போகிறார்கள்? அதுவரை தமிழ்நாட்டிற்கு, தமிழனுக்கு பரிசோ விருதோ ஒரு மண்ணும் கிடைக்காது!

இத்தகைய சூழலில் ஒரு பத்திரிகையாளர், 'ஒரு தமிழன் பார்வையில் இருபதாம் நூற்றாண்டு வரலாறு என்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார். அந்த நூலில் சில இருட்டடிப்புகள், பிழைகள் உள்ளன. அந்த நூலின் 367ஆம் பக்கத்தில் இப்படி எழுதுகிறார்:

"எம்.ஜி.ஆரும் சிவாஜி கணேசனும் சேர்ந்து நடித்த படம் கூண்டுக்கிளி 1954இல் வெளியானது. இந்தப் படத்தை டைரக்ட் செய்தவர் டி.ஆர்.ராமண்ணா. இரண்டு மாபெரும் நடிகர்களை ஒன்று சேர்ப்பதில் வெற்றிக் கண்ட ராமண்ணா அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டார்.மோசமான கதை என்பது முக்கிய காரணம். பத்மினி, சாவித்திரி, பானுமதி ஆகியோர் கொடி கட்டிப் பறந்த காலத்தில் பி.எஸ்.சரோஜா, குசலகுமாரி ஆகியோரை கதாநாயகியாக நடிக்க வைத்தது மற்றொரு காரணம். எழுத்தாளர் விந்தனின் வசனம் எடுபடவில்லை.

"மொத்தத்தில் வரலாற்று முத்திரை பதிக்க வேண்டிய இப்படம் படுதோல்வி அடைந்தது."

ஒருபடத்தின் வெற்றி தோல்வி யாரிடம் உள்ளது? கதாசிரியரா? வசனகர்த்தாவா? பாடலாசிரியரா? டைரக்டரா? யார் கையில் உள்ளது? இன்றைய காலகட்டத்தில் நடிகர்கள் ஆதிக்கம் வளர்ந்துள்ள நிலையில் ஒரு படத்தின் வெற்றி தோல்வி நடிகர்–நடிகைகளை வைத்தே தீர்மானிக்கப்படுகிறது.

நாற்பது ஆண்டுக்கு முன்னால் வெளிவந்த கூண்டுக்கிளியில் சிவாஜி கணேசனும் எம்.ஜி.ஆரும் சேர்ந்து நடித்ததே படத்தின் தோல்விக்கு முக்கிய காரணம்.

சிவாஜி கணேசனும் எம்.ஜி.ஆரும் சேர்ந்து நடித்ததைத் திரை உலகின் திருப்புமுனை என்ற பத்திரிகைகள் பாராட்டின. எல்லாம் இரண்டு நடிகர்களின் மனதைக் குளிரவைக்கவும் ரசிகர்களின் பாராட்டைப் பெறவும் பத்திரிகைகள் கையாண்ட உத்தி அது.

அக்காலத்தில் காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டில் செல்வாக்குடன் இருந்தது தி.மு.க வளரும் நேரம்.

இரண்டு நடிகர்களும் வெவ்வேறு இரு கட்சியைச் சேர்ந்தவர்கள். நடிகர்களின் ரசிகர்கள் போஸ்டர்களில் சாணியை அடித்துப் போராடிக் கொண்டிருந்தகாலம். சிவாஜி கணேசன் தி.மு.கவில் இருந்து விலகிக் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்ததைத் ‘திருப்பதி கணேசா’ என்று ரசிகர்களால் விமர்சிக்கப்பட்ட காலம்.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் இரண்டு நடிகர்களின் கட்சியைச் சேர்ந்தவர்கள் வன்முறையில் ஈடுபடுவதை தடுக்கவும் ரசிகர்களிடையே ரசா பாசங்கள் நிகழ்வதையும் நிறுத்தும் பொருட்டு படத்தை மேற்கொண்டு வெளியிட விரும்பவில்லை. நடப்புகள் இவ்வாறு இருக்க கூண்டுக்கிளி படத்தின் தோல்விக்கு முழுக்காரணம் எம்.ஜி.ஆரும் சிவாஜிகணேசனும்தான் என்று எழுத நெஞ்சுரம்

அற்றவர்கள் படத்தோல்விக்கு வேறு காரணங்களை சொல்லுவது வேடிக்கையானது; வருத்தத்துக்குரியது.

கல்கி, பத்திரிகையில் சிறு கதைகள் நாவல்கள் எழுதி புகழ்பெற்ற விந்தன் சினிமாவுக்கு வந்தபோது தி.மு.க பேரை சொல்லிக்கொண்டு சினிமாவுக்கு வந்தவர்கள் விந்தனின் சினிமா வருகை நம்மை பாதிக்கும் என்று கருதினார்கள்.அதற்கேற்றவாறு 1953, 1954ஆம் ஆண்டுகளில் விந்தன் மூன்று படங்களுக்கு வசனம் எழுதியதோடு சில பாடல்களையும் எழுதினார். பாடல்களில் குறிப்பிடத் தக்கவை. ‘கூண்டுக்கிளி’யில் பாடப்படும் ‘கொஞ்சுங் கிளியானப் பெண்ணைக் கூண்டுக்கிளியாக்கி விட்டு கெட்டி மேளம் கொட்டுவது சரியா? தப்பா? என்ற பாடல் இன்றும் ரசிகர்களால் விரும்பி பாடப்படுகிறது.

விந்தன் வசனம் எழுதிய ‘வாழப்பிறந்தவள்’ சுமாரான வெற்றிப்படம். சிவாஜிகணேசன் – பத்மினி நடித்த ‘அன்பு’ மாபெரும் வெற்றிபடம் மூன்றாவது படம் கூண்டுக்கிளி இப்படத்தின் தோல்விக்கு முக்கிய காரணம் எம்.ஜி.ஆரும் சிவாஜி கணேசனும்தான். அதை விடுத்து விந்தன் வசனம் எடுபடவில்லை. நடிகைகள் சரியில்லை என்பதெல்லாம் சரியான விமர்சனம் அல்ல.

விந்தன் ‘கூண்டுக்கிளி’க்கு எழுதிய வசனங்களை பல பத்திரிகைகள் பாராட்டியுள்ளன. தாங்கள் விந்தன் வசனம் எடுபடவில்லை என்று எழுதுவதின்மூலம் படத்தின் தோல்விக்கு இவரே முக்கிய காரணம் என்பது போல் தொனிக்கிறது.

நாற்பது ஆண்டுகள் இலக்கியத்துறையில் எழுதி புகழ்பெற்ற ஓர் இலக்கியவாதியை ஒரு தமிழனை ஒரு சுயமரியாதையுள்ள எழுத்தாளனைச் சகட்டுமேனிக்கு விமர்சனம் செய்வது தமிழ்முற்போக்கு இலக்கியத்தையே இழிவுபடுத்துவதாகும்.

அரசாங்க உதவியுடன் வெளிவந்திருக்கும் ஒரு நூலில் தகவல் களஞ்சியத்தில் இப்படி ஒரு எழுத்தாளனை இழிப்படுத்தும் தகவல் வரலாமா? மற்ற மாநில இலக்கியவாதிகள் என்ன கருதுவார்கள்.

ஒரு தமிழன் பார்வையில் இத்தகைய மோசமான தகவல்கள் வெளிவருவதால் நியாயமாக நமக்கு வரவேண்டிய பரிசுகளும் பாராட்டுகளும் தடைப்படுகின்றன.

தமிழனே! தமிழ் இலக்கியத்துக்குத் தமிழ் எழுத்தாளர்களுக்குப் பரிசும் பாராட்டும் கிடைக்கும் வண்ணம் பாடுபடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

★ ★ ★

# நூலாசிரியர் மு. பரமசிவம்

சென்னையே பிறப்பிடம்; செந்தமிழே

தாய்மொழி

பள்ளியில் இரண்டு ஆண்டுகளே படித்தவர்

பத்து வயதிலேயே 'கல்கி' அச்சகத்தில் பணியில் சேர்ந்தவருக்குப் பல விதமான கனவுகள்.

அதில் இலக்கியக் கனவே இறுக்கமாகப் பற்றி கொண்டது.

பேராசிரியர் கல்கியின் 'சிவகாமியின் சபதம் விந்தனின் 'பாலும் பாவையும்' ஆகிய நாவல்களில் கையெழுத்துப் பிரதியைப் படிக்கும் வாய்ப்பை பெற்றவர்.

பேராசிரியர் கல்கியின் எழுத்தின்மீது கொண மதிப்பும், விந்தன் எழுத எடுத்துக் கொண முயற்சிகளும் இவரையும் எழுதத் தூண்டின.

1950களின் ஆரம்பத்தில் கதைகள் எழு ஆரம்பித்த இவரின் கதைகளைப் படித்த விந்தன் கதைகள் பற்றி அபிப்பிராயம் சொல்லாமல், நிறை படியுங்கள் என்று மட்டும் சொன்னார்.

1958இல் நடிகமணி நாராயணசாமி தலைமையில் இவரின் 'சிந்திய கண்ணீர்' என்ற நாடகம் அறங்கேற்றப்பட்டது.

1959இல் முன்னாள் 'ஜனசக்தி' துணையாசிரியர் ஐ.மாயாண்டி பாரதி தலைமையில் அரங்கேறியது, 'வாழ்க்கைப் பாதை' என்ற நாடகம்.

1964இல் டாக்டர் மு. வரதராசனார் தலைமையில் 'பாலும் பாவையும்' என்ற நாடகம் அரங்கேறியது.

1973 முதல் 1974 வரையில் கற்சிலை என்ற சிறு பத்திரிகையை நடத்தியுள்ளார். இந்தப் பத்திரிகையில் எழுதிப் பழகியவரே இன்று ஓவியக்கலை விமர்சகரான கவிஞர் இந்திரன்.

1979இல் விந்தன் பாணியில், 'மோகத்தைக் கொன்றுவிடு' என்ற நாவலை எழுதியவர்.

1982இல் 'விந்தனும் விமர்சனமும்' என்ற நூலைத் தொகுத்தார், 1983இல் மக்கள் 'எழுத்தாளர் விந்தன்' என்ற நூலையும் எழுதியுள்ளார்.

தொடர்ந்து விந்தன் நாவல்கள் என்ற ஆய்வுநூலையும் விந்தனின் கதைகள், கட்டுரைகள், மனிதன் – இதழ் தொகுப்பு இவற்றுடன் கவிஞர் தமிழ்ஒளி, நாடு போற்றும் நாரண துரைக்கண்ணன், எழுத்துச் செல்வர் வல்லிக்கண்ணன், கு. அழகிரிசாமி,

திறனாய்வுத் தென்றல் தி.க.சி. ஆகிய படைப்பாளிகளின் வாழ்க்கை வரலாற்றையும் எழுதியுள்ளார்.

இருபது ஆண்டுகளாகக் கிறித்துவ இலக்கிய நண்பர் வட்டக் கருத்தரங்கில் இவர் படித்த கட்டுரைகள் அனைத்தும் நூலாக வெளி வந்துள்ளன. தற்போது இவரின் பணி படிப்பதும் எழுதுவதும்தான்.

★ ★ ★

குறிப்பு :